ஸ்ரீ:
ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௰. ஸ்ரீமுகவரு மார்கழி-தைமீ பகுதி ரு, சா
Vol. 10. Dec., January & February '34. No. 5, 6

உத்தமன்.

உலகத்தில் உத்தமன், மத்யமன், அதமன் என்று புருஷர்களை மூன்று வகையாக எடுத்துரைப்பதுண்டு. இம்மூவர்களுள் அதமன் இழிந்தவனென்றும், மத்யமன் அவனைக் காட்டிலும் சிறந்தவனென்றும், உத்தமன் மிகச் சிறந்தவனென்றும் வகுத்துரைப்பர்கள். பிறரை வருத்தியாவது தன் வயிற்றை வளர்க்கவேண்டுமென்று கருதுகின்றவன் அதமன். பிறரும் ஜீவிக்கவேண்டும்; அவ்வாறே யானும் ஜீவிக்கவேண்டுமென்று கருதுகின்றவன் மத்யமன். தன்னிலைமையைக் கெடுத்துக்கொண்டாவது பிறர் ஜீவிக்கவேண்டுமென்று எண்ணுகின்றவன் உத்தமன். உலகத்தில் அதம மத்யமர்களே மிகுதியாகக் காணப்படுவர். எம்பெருமான் அநுக்ரஹத்தால் கருவிலே திருவுடையராகிய ஒரு சிலரே உத்தமராய் விளங்குவர். ஸ்வாமி எப்படியிருப்பானோ அப்படியே அடியானுமிருப்பான் என்ற நியாயப்படி எம்பெருமானுடைய அநுக்கிரஹம் பெற்றார்க்கு உத்தமத்வம் வருகிறதென்றால் அவனும் உத்தமோத்தமனாயிருத்தல் வேண்டுமென்பது விளங்குகின்றதன்றோ!

தன்னிலையையழித்தும் பிறர்வாழ்வதையே நோக்கும் இயல்புடையனாயிருத்தல் உத்தமலக்ஷணமென்று மேலே கூறியபடி உத்தமத்தன்மை என்பது எம்பெருமானிடத்திற் குடிகொண்டுள்ளதென்

பதை அவனுடைய அவதார வைபவங்களை ஆராயவே நன்கு புலனுகும். ஸர்வேசுவரன் மீனும் ஆமையாயும் பன்றியாயும் நரன் மிருகிய வடிவினனுயும் வந்தவதரித்ததும் பிறர் பொருட்டாகவன்றே! கர்ம வசப்படாதவன் வந்து பிறக்கவேண்டுமென்பதொன்றில்லையே. பிறர்பொருட்டாகப் பரஞ்சோதிஸ்வரூபனுன தானே இப்படித் தன் னிலைமையை அழித்துக்கொண்ட அவனுடைய உத்தமத்வத்தை என்னென்றெடுத்துரைப்பது !

இராமனுக வந்தவதரித்தபோது வசிஷ்டாதிகளைக் குருவாகக் கொண்டு பணிந்து நின்றதும், தேவகாரியஞ் செய்தற்குப் பிதுர்வாக்ய பரிபாலனமென்றொரு வியாஜத்தை வைத்து நடத்தற்கரிய வனவாசம் சென்றதும், ஆங்காங்குள்ள முனிவர்களைப் பணிந்து அவர்கட்கு வேண்டுவன செய்ததும், இராவணனுல் சீதை அபகரிக்கப்பட்டபிறகு அவள் விஷயத்தில் ஆற்றெணுத பரிதாபங்கொண்டதும், சுக்ரீவன் சரண்புகுந்ததற்காக அவனுக்கு விரோதியான வாலியை வதைசெய்ததும், சுக்ரீவனையும் அவனுடைய சேனைகளாகிய வானரவீரர்களையும் துணையாகக்கொண்டு இராவணுதி ராக்ஷஸர்களை வதை செய்ததும், இவ்வாறு படாதபாடுபட்டவையெல்லாம் பிறர்பொருட்டாகவன்றே !

கிருஷ்ணுவதாரத்தில் பஞ்சபாண்டவர்கட்காகத் துரியோதனுதியரிடத்தில் தூதுசென்று ஸத்யஸ்வரூபியாகிய தன்னிலைமைக்குச்சிறிதும் பொருந்தாத பொய்ச்சுற்றம் பேசியதும், பின்னர் அர்ச்சுனனுக்குச் சாரதியாய் அமைந்து இழிவுடையோன் செய்தற்குரிய செயலைச் செய்ததும், பகதத்தன் பீஷ்மர் முதலானுர் விடுத்த அம்புகளை மார்பிலேற்றுப் படாதனபட்டதும், இன்னும் இவைபோன்ற காரியங்களைச் செய்தவையெல்லாம் தன்னுடைய நன்மைக்காகவோ, இல்லையே.

மேலும பிறர்க்குவேண்டிய காரியங்களைச் செய்துவைத்தும் ஒன்றும் செய்யவில்லையே என்று மனவருத்தப்படுதலும், பிறர்க்கு வேண்டிய காரியங்களைச் செய்துமுடித்து, அவை தன்காரியங்களாக நினைத்து அகமகிழ்வதும் உத்தமனுடைய குணங்களாகும். இக்குணங்களும் எம்பெருமானிடத்திலே குடிகொண்டுள்ளன வென்பதைப் பின் குறிப்பிடும் வரலாற்றுல் உணரலாம்.

கண்ணபிரான் துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனஞ் செய்தபின்னர் தன்னுடைச் சோதிக்கெழுந்தருளும்போது "கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணா மாம் தூரவாஸிநம், ருணம் ப்ரவ்ருத்தமிவ மே ஹ்ருதயாந்நாபஸர்பதி" "கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ண மாம்தூர வாசிநம், ருணம் ப்ரவ்ருத்தமிவ மே ஹ்ருதயாந்நாப ஸர்பதி" என்று அருளிச்செய்தான். இங்குத் திரௌபதி, அரசர் முதலானவர்கூடிய மஹா ஸபையில் அவமானப்படுகின்ற காலத்தில் தூரத்திலிருப்பவனாகிய என்னைக்குறித்து கோவிந்தா! என்று அழுதழைத்தாள். அப்பொழுது யான் அவள்பக்கல் நின்று முன்றானையால் கண்ணீரைத் துடைத்து அவளுடைய துக்கத்தை நீக்காதொழிந்தேனே; இது வட்டிக்குவட்டியுள்ள கடனைப்போல இந்தத் துக்கம் என் மனதை விட்டு நீங்கவில்லையே என்று அநுதபித்தான். திரௌபதிக்கு வஸ்திரப்ரதானஞ்செய்து அவள் இஷ்ட ஸித்தியைச் செய்துவைத்தும் ஒன்றுஞ் செய்யாதவன்போல் அநுதபித்தான் என்றால் அவனுடைய உத்தமத்வத்தை நாம் எவ்வாறு புகழ்ந்துரைப்பது?

இராமபிரான் இராவணாதியரை வதஞ்செய்த பிறகு விபீஷணனுக்கு இலங்கையைப் பட்டாபிஷேகஞ் செய்துவைத்துக் கிருதகிருத்யனானேன் என்று அகமகிழ்ந்தான். இங்குப் பட்டாபிஷேகம் பெற்றவனாகிய விபீஷணன் அடையவேண்டிய மனமகிழ்ச்சியை இராமபிரான் தானடைந்தானென்றதனால் தன்னடியானுக்குச் செய்த உபகாரத்தைத் தன் காரியமாகக் கொண்டானென்பது வெளியாகிறது.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, வாமனாவதார செயலை நோக்குவோமாகில் எம்பெருமானுடைய உத்தமத்வம் எளிதில் அறியலாம். இந்திரனுடைய ராஜ்யம் மஹாபலியால் அபகரிக்கப்பட்டபோது, இந்திரன் எம்பெருமானைச் சரண்புகுந்து, 'இறைவ! யான் இராஜ்யமின்றிப் பரிதபிக்கிறேன்; முன்போல அரசுரிமை பெறும்படி அநுக்ரஹிக்கவேண்டும்' என்று வேண்டினன். அவனுடைய வேண்டுகோளிற்காக ஸர்வேசுவரன் காசிபருக்கு அதிதியின் வயிற்றில் வாமனனாய்ப் பிறந்து, அப்பொழுதே யாசக விர்த்தியை மேற்கொண்டு

மஹாபலியின் யாகசாலையிற் சென்று மஹாபலியை நோக்கி மூவடி மண் தாவென வேண்டிநின்றான். மஹாபலியும் வாமனனுடைய வடி வழகில் ஈடுபட்டு வாமனன் வேண்டியபடியே மூவடி மண்ணைக் கொடுக்க, வாமனன் திரிவிக்ரமனாய் இரண்டடியால் இவ்வுலகத்தை யும் மேலுலகத்தையுமளந்து, பின்பு ஓரடியை மஹாபலியின் தலையில் வைத்தழுத்தி அவனைப் பாதாளத்திற் சேர்த்தனன்.

உலகத்தில் யாசித்தலாகிய தொழிலே மிகவும் இழிவானது' "ஏற்பதிகழ்ச்சி" என்றும், "ஈயென்றிரத்தல் இழிந்தன்று" என்றும் உரைக்கப்பட்டமையாலும் அறியலாம். எம்பெருமான் இந்த இழிந்த தொழிலை மேற்கொண்டு தன்னைச் சரண்புகுந்த இந்திரன் காரியத் தலைக்கட்டி வைத்ததை நோக்கினால் எம்பெருமான் பிறர் நிமித்த மாகத் தன்னிலைமையை அடியோடு மாற்றிக்கொள்கின்ற அவனு டைய உத்தமத்வம் நன்கு விளங்குகின்றதன்றோ!

நம்மாழ்வாரும் வாமனனுடைய உத்தம குணத்தில் ஈடுபட்டு, "சீரால் பிறந்து சிறப்பால் வளராது, பேர்வாமனாகாக்கால் பேராளா— மார்பாரப், புல்கிநீயுண்டுமிழ்ந்த பூமிநீரேற்பரிதே, சொல்லுநீயாமறி யச் சூழ்ந்து" என்றருளிச் செய்தார். வாமனன் தன்னைச் சீராட்டிப் பாராட்டிப் போற்றுகின்றவர்க்கு வந்து பிறவாது ஓர் முனிவருக்கு அதிதியின் வயிற்றிற் பிறந்து அப்பொழுதே வளர்ந்து யாசக விர்த்தி யை மேற்கொண்டனையே என்பார் சீரால் பிறந்து சிறப்பால் வள ராது" என்றார். உயர்வறவுயர்ந்தோனாகிய நீ பெரியோன், என்ற பெயரையேனும் வைத்துக்கொள்ளாமல் குட்டையன் என்ற பெயரை வைத்துக்கொண்டனையே என்பார், "பேர்வாமனாகாக்கால் பேராளா" என்றார். நீ சீரால் பிறந்து சிறப்பால் வளராது வாமனன் என்ற பெய ரை வைத்துக்கொள்ளினும் கொள்க; மஹாபலியிடத்தில் மூவடிமண் தாவென்று யாசித்தனையே உன்னால் யாசிக்கப்பட்ட பூமியானது உனக்கே ஸர்வஸ்வாதீனமானதன்றோ; அங்ஙனமிருக்க அதனை மஹா பலியின் ஸ்வாதீனமானதெனக்கொண்டு அவனிடத்திற் சென்று யாசித்ததென்னையோ? இதனை நீயே ஆராய்ந்து சொல்லவேண்டு மென்றார்.

சாஸ்திரத்தில், பொருளையிழந்தவன், புதிதாகப் பொருளைப்பெற விரும்புகின்றவன், கைவல்யன், ஞானியென்ற நான்கு வகையான அதிகாரிகளும் ஸர்வேசுவரனையடைந்து அவரவர்கள் விரும்பிய பயனை யடைகிறார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. இங்ஙனம் கொடுத்து வளர்த்த கையைக் குறுக்கி மஹாபலியிடத்தில் யாசித்தது எவ்வளவோ இழிவை விளக்குகின்றது. இந்த அவதாரத்தில் அவன் தன் னிலைமையை மிகவும் இழித்துக்கொண்டதுபோல மற்ற அவதாரங் களில் இல்லையென்பதை யுன்னியுன்னியே ஆண்டாள் "ஓங்கியுல களந்த உத்தமன்" என்றாள். இதனால் வாமனவதாரத்தில் அவனு டைய உத்தமத்வம் நன்கு வெளியாகிறதென்பது பெறப்பட்டது. இந்த உத்தமத்வம் என்ற குணம் ஸர்வேசுவரனிடத்திலே குடிகொண் டுளதென்பதை ஸஹஸ்ரநாமத்தில் புருஷோத்தமன் என்று வழங்கு வதாலறியலாம்.

ஸர்வேசுவரன் ஒன்றால் ஒரு குறைவில்லாத ஸர்வபரிபூரணனு யும், ஸர்வசக்தனும், ஸர்வகாரணமாயு மிருக்கின்றானாதலால் அவன் தனக்கென்றொரு காரியத்தைச்செய்து திருப்தியடைகின்றானென்ப தில்லை. அவன் செயல் முழுமையும் பிறர் நன்மையைக் கருதியதாகவே யிருக்கும். இதுபற்றியே, "நதே ரூபம் நசாகாரோ நாயுதாநி நசாஸ்பதம், ததாபி புருஷாகாரோ பக்தாநாம் த்வம் ப்ரகாசஸே" என்று குறிப்பிடப்பட்டுளது. இதன் பொருளாவது— உன்னுடைய திவ்யாத்மஸ்வரூபமும் உனக்கன்று, உன் திருவடியை யடைந்தவர்கட்காக; உன்னுடைய திருமேனியும் உனக்கன்று; உன் னுடைய சக்கர முதலிய ஆயுதங்களும் உனக்கன்று, அடியவர்களின் விரோதியைப் போக்குவதற்காகவே; உனக்கு ஸ்தானமான பரமபத மும் உனக்கன்று; ஆனாலும் அப்ராக்ருத திவ்யமங்களவிக்ரஹத்தை யுடையவனாயிருக்கிறாய்; நீ பக்தர்களுக்காகவே பிரகாசிக்கின்றாய்; என்பதாம்.

பிறர் நிமித்தமாகவே தன்னிலைமையை யழித்தும் உபகரிக்கு மியல்பு ஸர்வேசுவரனுக்கே யுளதென்பது தெரிவிக்கலாயிற்று. ஸர் வேசுவரன் தன்னையொக்கவருள் செய்பவனாதலால் அவனருள் வழிப்

பட்டவர்க்கும் உத்தமத்வ குணமுண்டு. எம்பெருமானார் 'ஆசார்யாபசாரத்தால் யானொருவன் நரகம் புகினும் புகுகிறேன்; எல்லோரும் வாழவேண்டும்' என்று தம் நிலைமையையழித்தும் பிறர் வாழ்வதில் நோக்குடையவராயிருந்தார். ஆகவே இந்த உத்தமத்வ குணமென்பது ஸர்வபரிபூரணனிடத்திலும், அவனருள் வழிப்பட்டாரிடத்திலும் குடிகொண்டிருக்குமேயன்றி ஏனையோரிடத்திலிருத்தலரிது.

ஸ்ரீ:

(மதுரை ஸ்ரீ வைஷ்ணவ)

ஸத்ஸம்ப்ரதாய ஸபையின் இரண்டாம் வருஷோத்ஸவம்.

நிகழும் ஸ்ரீமுக ஹூ கார்த்திகை ம௳ 2, 3, 4உ களில் ஸ்ரீபெரும்பூதூர் நியாயவேதாந்த வித்வான் ஸ்ரீ. உ. வே. ஆஸூரி ராமாநுஜாசார்யஸ்வாமி அக்ராஸநாதிபத்யத்தில் இச்சபையின் இரண்டாம் வருஷோத்ஸவம் இனிது நடைபெற்றது. அப்பொழுது ஸபையின் நிரந்தர அக்ராஸனராகிய T. S. இராமசாமி அய்யங்கார் ஸ்வாமி அக்ராஸனரை வரவேற்க அவர் ஆஸனத்திலமர்ந்து, இந்தக் கூடலம்பதியாகிய மதுரைமாநகரம் பெரியாழ்வாரை பரதத்வ நிர்ணயம் செய்யும்படிசெய்த பெற்றியதென்பதை யாவருமறிவர். இந்த மஹா சங்கத்தை நிர்வகிக்கும் சாமர்த்தியம் எனக்கியல்பாகவே இல்லாதிருந்தாலும் இத்திவ்யதேசத்தின் செயற்கையாலுண்டாகக்கூடுமென்ற துணிவால் இந்தப் பதவியை வஹித்தேனென்று அவையடக்கமாக முன்னுரை கூறி முடித்தனர்.

பின்னர் "ஆழ்வார் ஆசார்யர்களின் ஸ்ரீ ஸூக்திகள்" என்ற விஷயத்தைக்குறித்து ஸ்ரீ. உ. வே. வித்வான், அண்ணங்கராசார்ய ஸ்வாமி விரிவாக உபந்யஸித்தனர். அதன் சுருக்கம் வருமாறு;—ப்ரமாதாவானவன் ப்ரமாணத்தைக்கொண்டே ப்ரமேயத்தை யறியவேணும். அஃதாவது உண்மையறிவை அடையவேண்டும் என்று கருதுகின்றவன் வேதாதி சாஸ்த்ரங்களைக்கொண்டு பரம்பொருளை யறியவேண்டுமென்பதாம். இந்த ப்ரமாணம், ப்ரமேயம், ப்ரமாதா வென்ற மூன்றும் ஒவ்வொன்றும் ஐந்து வகைப்படும்.

சென்னை-600090.

அவற்றுள் ப்ரமாணம் வேதம் ஸ்ம்ருதி இதிஹாஸம் புராணம் ஆழ்வார்கள் ஸ்ரீ ஸூக்திகள் என்று ஐந்து வகைப்படும். ப்ரமேயம் * பரத்வம் வியூஹம் விபவம் அந்தர்யாமித்வம் அர்ச்சாவதாரம் என்று ஐந்து வகைப்படும். ப்ராஹ்மண க்ஷத்ரிய வைசிய சூத்ர தொண்டர் என்று ப்ரமாதாவிலும் ஐந்து வகையுண்டு. இந்த ஐந்து வகையினராகிய ப்ரமாதாக்கள் அனைவரும் ஆழ்வார்கள் ஸ்ரீ ஸூக்திகளை அப்யஸிப்பதற்கு அதிகாரமுடையவராவார். ஆழ்வார்களில் நம்மாழ்வாரே அங்கியாய் விளங்குவர். ஏனைய ஆழ்வார்களெல்லாம் அங்கபூதர்கள். ஆதலால் நம்மாழ்வாரருளிச்செய்த ப்ரபந்தங்கட்கு ஏனைய ஆழ்வார்கள் அருளிச்செய்த ப்ரபந்தங்கள் வ்யாக்யானரூபமாகவே அமைந்திருக்கும். ஆகையால் ஆழ்வார்களெல்லாம் ஏககண்டரென்பர். அதாவது—ஒரே அபிப்ராயமுடையவர்களென்பதாம். ஆழ்வார்களருளிச்செய்த ஸ்ரீ ஸூக்தியை அடியொற்றியே ஆசார்யர்களின ஸ்ரீஸூக்திகளும் விளங்கும். ஆழ்வார்கள் அருளிச்செய்த பாட்டிலுள்ள ஒரு பதத்தை எடுத்தாவது, ஒரு பாட்டின் பொருளையாவது, ஒரு பதிகத்தால் விரித்துரைத்தவற்றைச் சுருக்கி ஒரு ச்லோகத்திலாவது ஆசார்யர்கள் அருளிச்செய்வார்கள். இஃதல்லாமலும் ஆழ்வார்கள் பாசுரங்களில் அருளிய வினாவிற்கு விடையாகவும், விடைக்கு வினாவாகவும் அருள்செய்வார்கள். இவற்றைப் பின் குறிப்பிடுமவற்றால் அறியலாகும்.

“திருவுக்குந் திருவாகிய செல்வா” என்று திருமங்கை மன்னன் அருளியதைத் திருவுள்ளத்திற்கொண்டு ஆளவந்தார் “கஃ ஸ்ரீ ஸ்ரிய:” என்றருளிச்செய்தார். குலசேகராழ்வார் அரசு வீற்றிருக்குந் திருவும் வேண்டாம். திருவேங்கட மலையில் குருகாகவாவது, மீனாகவாவது, செண்பகவிருக்ஷமாகவாவது, மலைச்சிகரமாகவாவது, காட்டாறாகவாவது, வழியாக

* பரத்வமாவது:—பரமபதத்திலிருக்குமிருப்பு. ஓர் பிரபுவானவன் பல பேர்கள் புடைசூழ ஓலக்கமிருப்பதுபோல்வது. வியூஹமாவது:—திருப்பாற்கடலிலிருக்குமிருப்பு. சிறந்த உத்யோகபதவியிலிருப்பவன சேம்பரிலிருந்து ஆலோசிப்பது போல்வது. விபவமாவது:—ராமக்ருஷ்ணாத்யவதாரங்கள். அரசன் வேட்டையாடச் செல்வதுபோலாகும். அந்தர்யாமித்வமாவது:—எல்லாருடைய ஹ்ருதயங்களிலும் மறைந்திருக்குமிருப்பாம். அரசன் மாறு வேடங்கொண்டு ஊரில் உலாவித்திரிந்து கார்யங்களை ஆராய்தல் போல்வதாம். அர்ச்சாவதாரமாவது:—உகந்தருளின நிலங்களில் அடியார்கள் உகந்த ப்ரதிமைவடிவமாய் எழுந்தருளியிருக்குமிருப்பு. அரசன் உத்யான வனத்தில் இருப்பதுபோலாகும்.

வாவது, படியாகவாவது பிறக்கும் பாக்கியம் கிடைக்கவேண்டும். இங்ஙனஞ் சொல்லாதொழிந்த ஏதேனும் ஒன்றாக திருவேங்கட மலையின் சம்பந்தங்கிடைக்கவேண்டுமென்று ஒரு பதிகத்தால் வேண்டினர். இவ்விஷயத்தை ஆளவந்தார் "தவ தாஸ்ய ஸுகைக ஸங்கினும் பவநேஷ்வஸ்த்வபி கீடஜந்ம மே, இதராவஸதேஷு மாஸ்மபூத் அபி மே ஜந்ம சதுர்முகாத்மநா" என்று ஒரு சுலோகத்தால் அருளிச்செய்தார். "தருதுயரம் தடாயேல் உன் சரணல்லால் சரணில்லை, விரைகுழுவும் மலர்ப்பொழில் சூழ் விற்றுவக் கோட்டம்மானே, அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன் அருள்நினைந்தே அழும் குழவியதுவே போன்றிருந்தேனே." என்ற பாசுரத்திற்கேற்ப "நிராஸகஸ்யாபி ந தாவதுத்ஸஹே மஹேச! ஹாதும் தவ பாதபங்கஜம், ருஷா நிரஸ்தோபி சிசு: ஸ்தநந்தய: ந ஜாது மாது: சரணௌ ஜிஹாஸதி" என்று ஸ்தோத்ர ரத்னத்தில் குறிக்கப்பெற்றுளது. "சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம், நின்றால் மரவடியாம் நீள் கடலுள்—என்றும், புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும் அணையாம், திருமாற்கு அரவு." திருவனந்தாழ்வான் (ஆதிசேஷன்) எம்பெருமானுக்கு குடை பாதுகை முதலிய வடிவாகவுமிருந்து கைங்கர்யம் செய்கிறாரென்று பொய்கையாழ்வாரருளிச்செய்ததற்கேற்ப "நிவாஸசய்யா ஸநபாதுகாம்சுக உபதாநவர்ஷாதப வாரணாதிபி: சரீர பேதைஸ்தவ சேஷதாம் கதை: யதோசிதம் சேஷ இதீரிதே ஜநை:" என்று அருளிச்செய்தார்.

ஆத்ம ஸமர்ப்பணஞ் செய்யவும் வேணும், செய்ததற்கு அநுதாபங் கொள்ளவும் வேணும் என்பதை "உதவிக்கைம்மாறு என்னுயிரென்ன உற்றெண்ணில், அதுவும் மற்றாங்கவன் தன்னது என்னால் தன்னை, பதவிய இன்கவிபாடிய அப்பனுக்கு, எதுவும் ஒன்றுமில்லை செய்வது இங்குமங்கே" என்றும் "தாள்களை எனக்கே தலைத்தலைச் சிறப்பத்தந்த பேருதவிக் கைம்மாறா, தோள்களை யாரத்தழுவி என்னுயிரை அறவிலை செய்தனன் சோதீ!" என்றும் "எனதாவியுள்கலந்த பெருநல்லுதவிக்கைம்மாறு, எனதாவிதந்தொழிந்தேன் இனி மீள்வதென்பதுண்டே, எனதாவியாவியும் நீ பொழிலேழுமுண்ட எந்தாய், எனதாவியார்? யான் ஆர்? தந்தநீ கொண்டாக்கினையே." என்றும் நம்மாழ்வார் அருளிச்செய்ததற்கேற்ப "வபுராதிஷு யோபி கோபி வா குணதோஸாநி யதா ததாவித:, ததயம் தவ பாதபத்மயோ: அஹமத்யைவ மயா ஸமர்ப்பித:" என்றுரைக்கப்பெற்றுளது.

சேதநாசேதநங்களின் ஸத்தா ஸ்திதி ப்ரவ்ருத்திகள் (நிலைபெறுதல், வாழ்தல் முயற்சிகள்) எம்பெருமான் அதீனமாயிருக்குமென்பதை நம்மாழ்வார்

“நின்றனரிருந்தனர்” என்ற பாசுரத்தாலும் “நாமவனிவனுவன்” என்ற பாசுரத்தாலும் ‘அவரவர்தமதமது” என்ற பாசுரத்தாலும் அருளிச்செய்தார். இவ்வர்த்தத்தை பாஷ்யகாரர் தாம் அருளிச்செய்த ஸ்ரீரங்க கத்யத்தில் “ஸ்வாதீன த்ரிவித சேதநாசேதன ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்திபேதம்” என்றருளிச்செய்தார்.

மேலும், கூரத்தாழ்வான் பட்டருளிச்செய்த ஸ்தோத்திரங்களிலிருந்தும், வேதாந்த தேசிகனருளிச் செய்தவைகளிலிருந்தும் பல ஒற்றுமைகளை எடுத்துக்காட்டினர்.

அதன்பிறகு “புருஷகார வைபவம்” என்பதைக்குறித்து ஸ்ரீ. உ. வே. நியாயவேதாந்த வித்வான் ரங்கஸாமி ஐயங்கார்ஸ்வாமி உபந்யாஸித்தார். அதன் சுருக்கம் வருமாறு.—

அபராதமுடைய சேதனர்க்கு ஒருசமயத்தில் ஸத்வகுணம் தலையெடுத்து எம்பெருமானையடைந்து உஜ்ஜீவிக்கக் கருதியபோது தாம் முன்பு செய்துள்ள பாபத்தின் மிகுதியைக்கண்டு அச்சமுண்டாகும். இவ்வச்சம் சிறிதுமின்றி அவனை எளிதிலடைந்துய்வதற்காகக் குற்றங்களைப் பொறுப்பிக்க அவன் திருமார்பில் இறையுமகலாது பெரிய பிராட்டியார் எழுந்தருளியிருக்கிறாள். ஆகலால் அவனை எளிதிலடைந்துய்யலாமென்பதைத் தெளிவாய் எடுத்துரைப்பதற்காக நம்பூர்வாசார்யர்கள் பலவிடங்களிலும் புருஷகாரவைபவத்தை வெளியிட்டுள்ளார்கள்.

புருஷகாரம் என்ற சொல்லிற்குப் பல பொருளுண்டு. புரு-பஹு, ஸநோதி-ததாதி புருஷ:, புருஷம்கரோதீதி புருஷகார:. இதன் பொருளாவது—ஈச்வரனைச் சேதன விஷயத்தில் மிகுதியாகக்கொடுக்கும்படி செய்கிறாள் என்பதாம். பெரியபிராட்டியார் எம்பெருமானை நோக்கி அபராதமுடைய சேதனனைச் சுட்டிக்காட்டி ‘இவனைக் கோபத்திற்கு விஷயமாக்காமல் இவன் வேண்டிற்றெல்லாம் கொடுத்தருளும்; இங்ஙனம் கொடுத்தாலன்றோ தேவரீர் ‘வேண்டிற்றெல்லாம் தரும் கோதிலன்’ என்ற விருதைப் பெறுவீர்” என்று அருளிச்செய்வாள். இதனைக்கேட்ட எம்பெருமானும் அவ்வாறே கொடுத்தருள்வன்.

இன்னும், “பூரணத்வாத் புருஷ: க்ஷமாதி பூர்ணம் கரோதீத்யர்த்த:” எம்பெருமானைக் காருண்யாதி குணபூர்ணனாகச் செய்கிறாள் என்பது இதன் பொருளாகும். ஸர்வேச்வரன் ஸமஸ்த கல்யாணகுண பூர்ணனாயிருந்தா

லும், ஸ்வாதந்தர்யத்தால் அபராதமுடைய சேதனனைக் கண்டவிடத்து 'இவனை நரகத்திற்போட்டு வருத்துவேன்' என்று சீற்றமுண்டாம்போது கிருபை முதலிய குணங்கள் தலைமடிந்து கிடக்கும். அப்போது பிராட்டியார் எம்பெருமானை நோக்கித் "தேவரீர் இந்தச் சேதனன விஷயத்தில் இப்படிச் சீற்றங்கொள்ளலாகாது; மணற் சோற்றில் கல்லாராய்வாருண்டோ? குற்றஞ்செய்யாதார் எவர்தாமிருக்கின்றனர்? இப்படி வந்தடைகின்ற சேதனனை வெளியேதள்ளிக் கதவடைத்துவிட்டால் வேறெவர்தாம் தேவரீரை வந்தடைவார்கள்? அபராதமுடைய சேதனனை ரக்ஷித்தாலன்றோ தேவரீர் கருணாகரர் என்ற பெயரைப் பெறுவீர்' என்று ஸ்வாதந்தாயத்தால் மறைந்திருந்த கிருபை முதலிய குணங்களை வெளிப்படுத்தி அபராதமுடைய சேதனனை அவனுடைய கிருபைக்கு விஷயமாக்குவாள்.

மேலும், ப்ரு-பாலகபூரணயோ: எம்பெருமானை ரக்ஷகனாகச் செய்கிறாள் என்றும புருஷகார சப்தத்திற்குப் பொருள் கொள்வதுமுண்டு. எம்பெருமான அபராதமுடைய சேதனனைக்கண்டு, 'இவனை ரக்ஷிக்கமாட்டேன்' என்று வெறுக்கின்றகாலத்தில் பிராட்டியார் 'அபராதமுடைய இவனை ரக்ஷிக்காதபோது தேவரீருக்கு ஸர்வரக்ஷகத்வம் ஜீவிக்காதே' என்று மன்றாடி ரக்ஷிக்கும்படி செய்வாள்.

இந்தப் புருஷகாரத்வம் என்ற குணவிசேஷம் பெரியபிராட்டியாருக்கேயுள்ளது. எல்லாக கல்யாண குணங்களையுமுடைய எம்பெருமானுக்கு இந்த குணம் இல்லையோவென்னில்; ஸர்வேச்வரன நித்யேச்சையால் இன்னின்னாருக்கு இன்னின்னதுண்டு என்று ஸங்கல்பித்துள்ளானாதலால் இந்தப் புருஷகாரத்வம் பிராட்டியாருக்கேயுள்ளதென்றால் ஒரு குறையுமின்றென்க.

இந்தப் புருஷகாரத்வம் என்ற குணத்தை ஜீவிக்கும்படி செய்கின்ற சில குணங்களுண்டு, அவை, கிருபை, பாரதந்தர்யம, அநந்யார்ஹ சேஷத்வம் என்பன. இவற்றுள் கிருபையாவது—பிறர் துக்கப்படுதலைக் கண்டு ஸஹியாமை. பாரதந்தர்யமாவது—பராதீனமாயிருத்தலாம். அஃதாவது நாயகன் சொற்படி அடங்கியிருத்தலாம். அநந்யார்ஹத்வமாவது—நாயகனையொழிய பிறருக்குரிமையாகாதிருத்தலாம்.

அபராதமுடைய சேதனனை எம்பெருமானோடு சேர்ப்பதற்குரிய முயற்சி செய்தற்குக் கிருபைவேண்டும். ஸ்வதந்த்ரனான எம்பெருமானை வசீகரிக்கும்போது பணிவிடையால் வசீகரிக்கவேண்டுகையால் பாரதந்தர்யமும் வேண்

டும். எம்பெருமான் பிராட்டியாரிருக்கும் நிலைமை கண்டு 'நம்மையொழிய பிறரொருவர்க்கு முரிமையாகாமல் நமக்கே அதிசயத்தை விளைக்கின்றாளாத லால் இவள் சொல்வதெல்லாம் நம் காரியமாகும்' என்று இவள் சொன்ன படி செய்கைக்கு ஹேதுவாக அநந்யார்ஹத்வமும் வேண்டும்.

உலகத்தில் சிறந்த பதவியிலிருக்கின்ற ஒருவனிடத்தில் காரியஸித்தி யடைய அவன் மனைவியின் சிபார்சை விரும்புவனேல் அவளுக்கு முன் னுரைக்கப்பெற்ற கிருபை, பாரதந்த்ர்யம், அநந்யார்ஹத்வம் என்ற மூன்று குணங்களும் நிறைந்திருக்க வேண்டும். கிருபையிருந்தாலன்றிப் பிறரிடத் தில் இரக்கமுண்டாக மாட்டாது. நாயகனுக்கடங்கி நடந்து அவன் மகிழ்ச் சிக்குரிய பணிவிடையைச் செய்தாலன்றி அவன் இவளுக்கு வசப்படமாட் டான். ஆதலால் பாரதந்த்ர்யமும் வேணடும். 'இவள் நம்மையன்றிப் பிற ரொருவர்க்கும் உரிமைப்படாது நமககே அதிசயத்தை விளைக்கின்றாள்; ஆதலால் இவள் நம்மோடு மன்றாடிச செய்யச்சொல்கின்ற காரியமும் நம் காரியமே யாம்' என்று கருதுவதற்கு அநந்யார்ஹத்வமும் வேண்டும். ஆக இந்த மூன்று குணங்களுள் கிருபை சேதனரைக் கண்டிராக்குவதற்குரியதா யிருக்கும் பாரதந்த்ர்யம் ஸ்வதந்த்ரனான ஈச்வரனை வசப்படுத்துவதற்குரி யதாயிருக்கும். அநந்யார்ஹத்வம் பிறர் காரியம் செய்யும்படி இவள் சொல் லியபடியே அவன் செய்து தலைக்கட்டுவதற்குரியதாயிருக்கும். இங்ஙனம் இந்த மூன்று குணங்களின் வேறுபாடறிந்து கொள்க.

இனி, இந்த மூன்று குணங்களையும் பிராட்டியார் வெளியிட்டபடி விளக்கப்பெறும்.—எம்பெருமான் ஸாதுக்களைப் பரிபாலிக்கும் நிமித்தமாக எந்தெந்த வடிவோடு அவதரிக்கின்றானோ அந்தந்த வடிவுக்கேற்றபடி பிராட் டியாரும் அவதரிக்கின்றாளென்பது நியமம். அந்த நியமப்படி ஸர்வேச்வரன சக்ரவர்த்திக்குக திருக்குமாரனாக அவதரித்தபோது பிராட்டியாரும் ஜனக ராஜன் திருமகளாக அவதரித்தாள். அப்பொழுது கிருபை பாரதந்த்ர்யம் அநந்யார்ஹத்வம் என்ற மூன்று குணங்களையும் வெளியிட்டுள்ளாள். "பிராட்டி முற்படப் பிரிந்தது தன்னுடைய கிருபையை வெளியிடுகைக்காக. நடுவிற் பிரிந்தது பாரதந்த்ர்யத்தை வெளியிடுகைக்காக. அநந்தரம் பிரிந்தது அநந்யார்ஹத்வத்தை வெளியிடுகைக்காக" என்று லோகதேசிகன் அருளிச செய்ததாலும் அறியலாம்.

முதற்பிரிவாவது—சீதாபிராட்டியார் சக்கரவர்த்தித்திருமகனோடு தண்ட காரண்யத்தில் எழுந்தருளியிருந்தபோது இராவணன் பிரித்தான் என்ற

வியாஜத்தாலே பெருமானை விட்டுப்பிரிந்து இலங்கையில் அசோகவனத்திலெழுந்தருளியிருந்ததாம். இந்தப் பிரிவில் "ஜெவ்யூர காருண்ய ரூபயா" என்று கருணையே ஒரு வடிவு கொண்டுளதோ என்று சொல்லத்தக்க பிராட்டியாரின் கிருபை வெளியாகிறது. எவ்வாறெனின்;—தேவ மாதர்களின் சிறையை விடுவிக்கைக்காகத் தான் சிறையிருந்தாள். இவளுஞ் சிறையிலிருந்தபோது கொடிய ராக்ஷஸப்பெண்கள் தன்னைச் சூழ்ந்துகொண்டு படாதபாடெல்லாம் படுத்தினார்கள். அதுசமயம் திரிசடை, இராவணனுயிர் அபஜயமடைந்து பெருமான் வெற்றியடைந்ததாகத் தான் ஸ்வப்நங்கண்டதை இராக்ஷஸப்பெண்களுக்குத் தெரிவித்தாள். இதனைக் கேட்டு அப்பெண்கள் நடுநடுங்கினார்கள். இந்நிலைகண்ட பிராட்டியார் "பவேயம் சரணம் ஹி வ:" நானிருக்கும்போது நீங்கள் எதற்காக வருந்துகின்றீர்கள் என்று அபயப்ரதானஞ் செய்தாள். இஃதல்லாமலும் இராவணன் போர்க்களத்தில் உயிர் துறந்து கிடந்தபொழுது அநுமான் பிராட்டியிடத்தில் வந்து "தாயே! இராவணன் இறந்து பட்டான். ஆதலால் முன்பு துன்புறுத்திய இந்த இராக்ஷஸப்பெண்களைச் சித்திரவதம் பண்ணும்படி அடியேனுக்குத்தரவளிக்கவேண்டும் என்று விண்ணப்பஞ்செய்தார். அப்பொழுது "பாபாநாம்வா சுபாநாம்வா வதார்ஹாணாம் ப்லவங்கம, கார்யம் கருணமார்யேண ந கச்சிந்நாபராத்யதி" என்று அநுமானுக்கும் உபதேசித்தாள். தன்னை ஒழிவின்றி துன்புறுத்திய இராக்ஷஸப்பெண்களிடத்தில் இவ்வளவு பரிவுடையவளாயிருந்தாளென்பதைக்காட்டிலும் இவள் கிருபையை வெளியிடுவதற்கு வேறுதாரணம் எடுத்துரைக்க வேண்டுமோ?

நடுவிற்பிரிவாவது:—இராவண வதம் முடிந்த பின்னர் பிராட்டியார் பெருமாளுடன் திருவயோத்திக் கெழுந்தருளியிருந்தபொழுது பிராட்டியார் திருவயிறு வாய்த்திருந்தாள். அதுசமயம் பெருமான் நகர் சோதனையின் பொருட்டு இராத்திரியில் தனிமையாக எழுந்தருளி ஆராய்ந்து வருகின்ற சமயத்தில் ஒரு வண்ணான் நெடுநாள் பிறந்தகத்திலிருந்து வந்த தன் மனைவியை நோக்கி "நீ இத்தனை நாள் என்னைவிட்டுப் பிரிந்திருந்தாய்; ஆதலால் உன்னைச் சேர்த்துக்கொள்ள மாட்டேன்; பத்துமாதம் தன்னை விட்டுப்பிரிந்து இராவணன் வீட்டிலிருந்த சீதையைச் சேர்த்துக்கொண்டிருக்கிற இராமனைப்போல் என்னை எண்ணினையோ," என்று கூறினான். இதனை இராமபிரான் கேட்டு மனக்கவலையுற்று எப்படியாவது லோகாபவாதத்தை நீக்கிக்கொள்ளவேண்டுமென்று கருதினர். பின்னர் கர்ப்பிணியாயிருப்பாரின் விருப்பத்தைச் செய்வதென்ற முறையை மேற்கொண்டு

இராமபிரான் சீதாபிராட்டியை நோக்கி 'உனக்கு இப்பொழுதுள்ள விருப்பத்தை யுரைப்பையாகில் அதனைச் செய்கிறேன்' என்று கேட்டார். அப்பொழுது பிராட்டியார் 'முன்பு வனவாசஞ் சென்றகாலத்து ருஷிகளின் ஆச்ரமங்களிற்சென்று அவர்கட்குப் பணிவிடை செய்ததுபோல இப்பொழுதும் தபோவனங்களையும் கங்காதீரங்களையும் கண்டுகளித்து ஆங்குள்ள மஹருஷிகளின் பாதஸேவையுஞ் செய்து வரவேண்டுமென்று என் மனம் விரும்புகிறது' என்றுரைத்தாள். இதனைக்கேட்ட பெருமான் இஃதோர் நல்லகாலமென மனத்துட்கொண்டு இளையபெருமாளை யழைத்து லோகாபவாத விஷயத்தை அந்தரங்கமாகத் தெரிவித்து சீதையை யழைத்துக் கொண்டுபோய் வனத்தில் விட்டு வருவாய்' என்று கட்டளையிட்டனர். இளையபெருமாளுமப்படியே பிராட்டியையு மழைத்துக்கொண்டு கங்கைக் கரையைக் கிட்டினபோது மனமடங்காத துன்பமுற்று பெருமான் நியமித்ததை விண்ணப்பித்தனர். இதனைக்கேட்ட பிராட்டியார் மனக்கலக்கமுற்று "இந்தக் கங்கையில் இப்பொழுதே உயிர்துறந்து விடுவேன்; இராகவனுடைய வம்சநாசஞ் செய்யலாகாதே; இஃதெல்லாமலும அப்பிரானுக்குப் பரதந்த்ரமான வஸ்துவை எவ்விடத்தி விட்டுவைத்தாலும கிடக்கவேண்டியது கடமையன்றோ" என்றருளிச செய்தனள். இத்தப் பிரிவினால் பாரதந்த்ர்யம் வெளியாயிற்று.

மூன்றுவது பிரிவு வருமாறு:—பெருமான் அசுவமேதயாகம் செய்கிற காலத்தில் வால்மீகி பகவானுடைய கட்டளையினால் குசலவர்கள் இராமபிரான் சந்நிதியையடைந்து பெருந்திரள் மத்தியில ஸ்ரீராமாயணத்தைக் கானத்திலமைத்துப் பாடினார்கள். அது பெருமான் நெஞ்சை யுருகவியது. இங்ஙனம் பாடியவர்கள் தம்முடைய திருக்குமாரர்களென்று தெரிந்து பிராட்டியினிடத்தில் திருவுள்ளஞ்சென்றது. அப்பொழுது ஒரு தூதனை யழைத்து "நீ வால்மீகிபகவான் ஆச்ரமத்திற்சென்று மகருஷியின் முன்னிலையில் பிராட்டியினிடத்தில் 'நாளையதினமே இந்த மஹாகோஷ்டியில் வந்து தான் பரிசுத்தமாயிருக்குமிருப்பை எல்லோரும் ஒப்புக்கொள்ளும்படி ஆணைசெய்து தரல்வேண்டும்' என்று நாம் உரைத்ததாகச்சொல்லிவருவாய்" என்று அனுப்பினர். தூதனும் சென்று தெரிவித்தான். பிராட்டியார் வால்மீகி பகவானை முன்னிட்டுக்கொண்டு அந்த மஹா ஸபையில் பெருமான் முன்னிலையில் வந்து ஒதுங்கி நின்றாள். அப்பொழுது வால்மீகி பகவான் இவள் சுத்தையென்பதை பலகாரணங்காட்டி எடுத்துரைத்தனர். அதனைக் கேட்ட பெருமான் இவள் சுத்தையென்பதை யானுமறிவேன். மஹருஷி

சொல்லியதாலும் ஒப்புக்கொள்ளத்தக்கதாம். ஆனாலும் லோகாபவாதம்
நீங்கும் நிமித்தமாக இந்தக் கோஷ்டியில் ஆணைசெய்து தரவேண்டும்; என்
றனர். பிராட்டியார் கையும் அஞ்சலியுமாய்க் கவிழ்தலையிட்டுக்கொண்டு
நின்று,பெருமானையொழிய பிறரொருவரையும் மனம் வாக்கு காயிகங்களால்
அறியாதிருப்பது உண்மையானால் இந்தப் பூமிதேவி எனக்கிடந்தரவேண்
டும்' என்று சபதஞ்செய்தபோது, பூமியினின்று ஓர் விமானம் தோன்றியது.
அந்த விமானம் ஒப்புயர்வற்றதாயும் வியப்புறத்தக்கதாயும், திவ்யமாயும்,
வலிமையுடைய பாம்புகளின் தலைகளால் தாங்கப்பெற்றதாயும், திவ்ய
ரத்னங்களால் அலங்கரிக்கப்பெற்றதாயும் விளங்கியது. அதிலிருந்த பூமிப்
பிராட்டியார் சீதாபிராட்டியைத் தன்னிரு கைகளாலாரத் தழுவியெடுத்து
ஆஸனத்திலிருத்தி எல்லோருங்காண தேவர்கள் புஷ்பவர்ஷம் வர்ஷிக்கப்
பாதாளத்தில் பிரவேசித்தான். இந்தப் பிரிவினால் அவனுக்கே யுரிமை
பூண்டிருக்கிற அநந்யார்ஹத்வத்தை வெளியிட்டான்.

இதுவரையுங் கூறியதினால் புருஷகாரத்வம் பிராட்டிக்கே யுள்ள குண
விசேஷ மென்பதும், இந்த குணத்திற்குக் கிருபை பாரதந்தர்யம் அநந்யார்
ஹத்வம் என்ற மூன்று குணங்களும் அங்கங்களாகுமென்பதும், இந்த மூன்று
குணங்களையும் சீதாபிராட்டியார் மூன்று பிரிவுகளால் வெளிப்படுத்தினா
ளென்பதும் குறிப்பிடப்பட்டன.

மேலும் "ஈச்வரீம் ஸர்வபூதாநாம்" எல்லோருக்கும் பெரிய பிராட்டி
யார் ஈச்வரியாய் விளங்குகிறாள் என்பதைக்கொண்டு பெரிய பிராட்டியா
ருக்கு உபாயத்வமுண்டென்று சிலர் கூறுவர். உபாயத்வமாவது:—விரோ
தியைப்போக்கி இஷ்டங்களைக் கொடுப்பதாம்; இந்த உபாயத்வம் ஸர்வேச
வரன் ஒருவனுக்கே யுளதென்பது தத்வமாகும். விஷ்ணுவின் ஒரு சில
குணஸாம்யம்பற்றி உலகத்தை, ஆள்கின்ற அரசனையும் விஷ்ணுவென்று
சொல்வதுபோல ஈசுவரனிடத்திற் சிபார்சுசெய்து கார்யத்தை முடித்து
வைப்பவளாகிய இவளையும் ஈசவரியாகச் சொல்வதுண்டு. இங்ஙனம் உரைத்
தாலும் உண்மையை ஆராய்ந்து பார்த்தால் பிராட்டியாருக்குப் புருஷகாரத்
வமே யுளதெனல் வேண்டும். ஜீவப்ரஹ்ம ஐக்கியம் கூறுகிறவிடத்தில் மற்ற
பேதச்ருதிகளிற் சொல்லியதற்கேற்றவாறு ஜீவனைச் சரீரமாகக் கொண்டுள்ள
ப்ரஹ்மமென்று எவ்வாறு பொருள்கொள்ள வேண்டுமோ அவ்வாறே எம்
பெருமானுக்குப் பல விடங்களிலும் உபாயத்வமுண்டென்று சொல்லியதற்
கேற்ப பெரியபிராட்டியாருக்குப் புருஷகாரத்வமுண்டென்றே கொள்ள
வேண்டும். உலகத்தில் சிறந்த உத்யோக பதவியிலிருப்பவன் மனைவியின்

சிபார்சால் ஒரு கார்யஸித்தியைப் பெற்றவன் இந்தச் சிமாட்டியால் இக்காரியத்தைக் கொண்டேனென்று சொல்வான். இங்ஙனம் கூறினும் உத்யோகஸ்தன் உத்தரவு செய்யாதபோது ‘காரியம் பார்க்கமுடியாது. இதனால் உத்தரவு கொடுக்குமியல்பு உத்யோகஸ்தனிடத்திலுள்ளதென்பதும் அவன் மனைவிக்குச் சிபார்சு செய்யுமியல்பே உள்ளதென்பதும் தெளிவாகக் காணலாம். இதனாலும் பிராட்டியாருக்கு புருஷகாரத்வமே யுள்ளதென்று நிருபிக்கலாயிற்று.

பின்னர் அக்ராஸநர் முடிவுரை கூறினர். அதன் சுருக்கம் வருமாறு—பிராட்டியாருக்கு உபாயத்வமுண்டென்று சொல்லும்பக்ஷம் பொருத்தமுடையதா? இல்லையா? என்று ஆராயவேண்டியது முக்ய கடமையாகும்.

“வேரிமாறாத பூமேலிருப்பாள் வினைதீர்க்குமே” என்று நம்மாழ்வார் அருளிச்செய்தார். இங்குப் பூமேலிருப்பவளாகிய பெரியபிராட்டியார் ப்ராப்தி விரோதியாகிய பாபங்களைப் போக்குவாள் என்றதனால் இஷ்டங்களையுங் கொடுப்பாளென்பதும் பெறப்பட்டது. விரோதியைப் போக்கி இஷ்டத்தைத் தருவதே உபாய வஸ்துவுக்குள்ள தர்மமாதலால் உபாயத்வம் பெரிய பிராட்டியாருக்குள்ளதென்பது தெளிவாயிற்று. “தேவிமாராவார் திருமகள் பூமி ஏவமற்றமரராட் செய்வார” என்றதனால் பிராட்டியார் நித்யஸூரிகளையும் ஏவியடிமை கொள்கிறாள் என்பது விளங்கும். இதுவும் பிராட்டியாருக்கு உபாயத்வமுண்டென்பதை வலியுறுத்தும். ஆகவே ஸர்வேச்வரன் உபாயபூதனும் தலைவனுமிருப்பதுபோலப் பிராட்டியாரும் உபாயபூதையாயும், தலைவியாயுமிருக்கிறாளென்று சிலர் சொல்வார்கள். இங்ஙனம் சொல்வது பொருந்தாது.

நம்மாழ்வார் “களைவாய் துன்பங்களையா தொழியாய் களைகண்மற்றிலேன்” என்று அருளிச்செய்தார். இங்கு எம்பெருமானை நோக்கி, உன்னையடையவொட்டாது தடுக்கின்ற பாபங்களைப் போக்கினும் போக்குவாய்; போக்காதொழியினுமொழிவாய்; உன்னையொழிய வேறொரு ரக்ஷகன் எனக்கில்லை என்றார். இதனால் எம்பெருமான் ஒருவனுக்கே உபாயத்வமுண்டென்று விளங்குகிறது. முன்பு “வேரிமாறாத பூமிமேலிப்பாள் வினைதீர்க்குமே” என்று பிராட்டியாருக்கும் உபாயத்வம் அருளிச்செய்தது பொருந்துமோவெனில்:—ஒரு கர்த்தாவால் அருளிச்செய்யப்பட்ட விஷயங்களில் ஒன்றுக்கொன்று விரோதப்படமாட்டாது. விரோதம் தோற்றுமாகில் விரோதப்படாத முறையை ஆராய்ந்து பொருளுரைக்கவேண்டும். சாஸ்திரத்தில் “[illegible]” “மாஹிம்ஸ்யாத் ஸர்வபூதாநி”

எல்லா ஜீவவர்க்கங்களுள் ஒன்றினையேனும் ஹிம்ஸைசெய்யலாகாதென்று சொல்லப்பட்டுள்ளது. அதற்கு விரோதமாக மறையோரிடத்தில் "அக்நீஷோமீயம் பஶுமாலபேத" "அக்நிஷோமீயம் பசுமாலபேதே" என்று அக்னிஷோமீயயாகத்தில் பசுவைஹிம்ஸிக்கவேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது. இப்படி ஒன்றற்கொன்று விரோதங்கண்டவிடத்து இரண்டற்கும் பொருத்தமாக ஸோமயாகத்தில் பசுவை ஹிம்ஸை செய்வதொழிய மற்றவிடங்களில் ஒருயிரினையும் வதைசெய்யலாகாதென்று பொருள் கொள்வதுபோல, இங்கும் விரோதமில்லாத முறையை ஆராய்ந்து பொருள்காண வேண்டும்.

"பூமேலிருப்பாள் வினைதீர்க்குமே" என்பதில் வினைதீர்க்குமென்று பொதுவாகக் கூறியிருப்பதால் சேதனன் பகவத் விஷயத்தை எதிட்டுப் பார்த்திருக்கிற ஆரம்ப விரோதியான பாபத்தைப் போக்குகிறாளென்று பொருள்கொள்ளவேண்டும். இவ்வாறு கொண்டால் ஒன்றுக்கொன்று பொருந்தாதிருந்த விரோதம் பரிகாரமாய்விடும். இதனால் "களைவாய் துன்பம் களையாதொழியாய் களைகண் மற்றிலேன்" என்று ஸர்வேசுவரன் ஒருவனுக்கே உபாயத்வமுள்ளதென்று குறிப்பிட்டதற்கு விரோதமாக "பூமேலிருப்பாள் வினைதீர்க்கும்" என்பதை மேற்கொண்டு பிராட்டிக்கு உபாயத்வமுள்ளதென்று நிலைநாட்ட முடியாதென்பது பெறப்பட்டது.

பெரிய பிராட்டியாரைப் புருஷகாரமாகக்கொண்டு எம்பெருமானை உபாயமாகப்பற்றிப் பரார்த்தகைங்கர்யஞ் செய்வதே இவ்வாத்மாவுக்குச் சிறந்தபிரயோஜனமாகும். பரார்த்த கைங்கர்யமாவது—தனக்கோர் பிரயோஜனத்தைச் சிறிதும் விரும்பாமல் எம்பெருமான் முகமகிழ்ச்சிக்கு ஏதுவான பணிவிடைகளைச் செய்வதாம். இந்த ஆத்மாவுக்குச் சிறந்த பிரயோஜனம் யாதாகும் என்று தீர்மானித்துரைக்க வந்தவிடத்தில் நம்மாழ்வார் "தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே" என்று அருளிச் செய்துள்ளார். மேலும் "நின்திருவுள்ள மிடர்கெடுந்தோறும் நாங்கள் வியக்கவின்புறுதும்" அவனுடைய திருவுள்ளக்களிப்பே பரமப்பிரயோஜனமாக அருளிச்செய்தார். சந்தனம் புஷ்பம் தாம்பூலம் முதலியன பிறருக்கே உகப்பையுண்டுபண்ணுவனவாயிருப்பனபோலச் சேதனனும் எம்பெருமானுக்கே மகிழ்ச்சியை விளைவிப்பவனாக இருக்கவேண்டும். சந்தன புஷ்பம் முதலியன அறிவற்ற பொருளாதலால் பிறரை மகிழ்விக்குமேயன்றித் தாம் மகிழமாட்டா. ஆத்மா அறிவுடைப்பொருளாதலால் பிறரை மகிழ்வித்தலும் தான் மகிழ்தலுமாகிய இரண்டுதர்மங்களுமுண்டு. இந்த இரண்டு தர்மங்கள் ஆத்மாவுக்கிருக்கினும், பாரதந்த்ரனாகிய இவனது மகிழ்ச்சியும் பரமசேதனனாகிய எம்பெருமானுடைய மகிழ்ச்சிக்குச் சாதனமாயிருக்கும். ஆதலால் பரார்த்த கைங்கர்யத்துக்கு ஒரு குறைவுமின்றென்க. ஆத்மாவுக்குப் பரார்த்த கைங்கர்யமே சிறந்த பிரயோஜனமாமென்பது இதனால் பெறப்பட்டது.

அதன் பின்னர் விசிஷ்டாத்வைதம் என்பதைக் குறித்து முன்பு உபந் யஸித்தவரே உபந்யஸித்தார். அதன் சுருக்கம் வருமாறு:—

வேதத்தையே முக்ய ப்ரமாணமாக ஒப்புக்கொள்கின்ற சமயங்கள் சில வுள்ளன. அவற்றுள் த்வைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என்ற மூன்று சமயங்களும் தத்தம் சமயமே சிறந்ததென்று வாதிப்பதற்கேற்றபடி ப்ரமாணங்கள் வேதத்தில் உள்ளனவோ என்பதை ஆராயவேண்டியதுகடமை யாகும். வேதமானது மிகவும் விரிவாயுள்ள சாஸ்திரம். அசித்து ஈசுவரன் என்ற தத்வப்பொருள்கள் வெவ்வேறு இயல்பினையுடையன என்று பேதத் தையும், ஜீவன் ப்ரஹ்மம் என்ற பேதமென்பதில்லை; ப்ரஹ்மம் ஒன்றே உள்ளதென்று அபேதத்தையும், சேதநாசேதனங்களைச் சரீரமாகக்கொண்ட ப்ரஹ்மம் ஒன்றேயுளது என்று பேதாபேதத்தையும் அந்த வேதம் குறிப் பிடுகிறது. இங்ஙனம் குறிப்பிடுமவற்றுள் வேதத்திற்குப் பேதத்தைக் குறிப்பிடுவதில் தாத்பர்யமா? அபேதத்தைக் குறிப்பிடுவதில் தாத்பர்யமா? பேதாபேதத்தைக் குறிப்பிடுவதில் தாத்பர்யமா? என்று நுணுகி ஆராய வேண்டியது மதிப்புடையாரின் பொறுப்பாகும்.

வேதத்திற்கு பேதத்தைக் குறிப்பிடுவதிலே தாத்பர்யமென்றாலும், அபேதத்தைக் குறிப்பிடுவதுதான் தாத்பர்யம் என்றாலும் வேதத்தில் ஒருசில பகுதிகளைப் ப்ரமாணமாகக்கொண்டு, பல பகுதிகளைக் கைவிடவேண்டிய நிர்ப்பந்தம் நேரும். பேதாபேதந்தான் வேதத்திற்குத் தாத்பர்யம் என்றால் வேதவாக்யம் எல்லாவற்றிற்கும் ஸ்வரஸமாகப் பொருள் கொள்ளலாம். ஆதலால் விசிஷ்டாத்வைதமே ஸித்தாந்தமாகும்.

இவ்விடத்தில் சிலர்க்கு ஒரு சம்சயமுண்டாகலாம். அது வருமாறு:— சங்கரர் முதலான அத்வைதவாதியர் பல சாஸ்திரங்களையும் நன்காராய்ந்து பல நூல்களையும் இயற்றியிருக்கின்றார்கள். ஆதலால் அவர்கள் அறிவிற் சிறந்தவர்களென்று தடையின்றி ஒப்புக்கொள்ளவேண்டுமன்றோ! அங்ஙன மிருக்க, விசிஷ்டாத்வைதமே ஸித்தாந்தமாகுமானால் இவர்களும் அதற்குடன் பட்டிருக்க வேண்டுமே; இவர்கள் உடன்படாததினால் விசிஷ்டாத்வைதமே வேதபுருஷனுக்குத்தாத்பர்யம்என்று எவ்வாறுகொள்வதென்று ஐயம்நிகழும். சாஸ்திரார்த்த ஜ்ஞானமுண்டாவதற்குக்காரணம் பதங்களின் அர்த்தமும், பக வத்பக்தியுமாம். சங்கராதியர்க்குச்சாஸ்திரங்களிலுள்ள பதங்களின்பொருளு ணர்ச்சியிருந்தாலும், பகவத் பக்தியில்லாததினால் உண்மையறிவாகிய காரிய முண்டாகவில்லை. கார்யோத்பத்திக்கு வேண்டிய காரணக்கூட்டமிருந்தா

லன்றிக் காரியமுண்டாகமாட்டாதென்பது ஒருதலை. குடமாகிய காரியத்தைக் குறித்து மண்பிண்டம் குயவன் தண்டசக்கரமுதலியனகாரணங்களாம், இந்தக் காரணங்களில் மண்பிண்டமாத்திரமிருந்து குயவனில்லாவிட்டாலும், குயவனும் மண்பிண்டமுமிருந்து தண்ட சக்கரங்களில்லாவிட்டாலும் குடமாகிய காரியமுண்டாக மாட்டாது. அதுபோலச் சங்கராதியர்க்குச் சாஸ்திரங்களிலுள்ள பதங்களின் உணர்ச்சியிருந்தாலும் பகவத்பக்தியில்லாததினால் மயக்கவுணர்ச்சியுடையவராகவேயிருந்தனர். இதைக் குறித்துப் பாஷ்யகாரரும் * தெளிவாக அருளிச் செய்துளார்.

மேலும் பகவத் பக்தியில்லாதபோது உண்மையறிவுண்டாகமாட்டாதென்பதை த்ருதராஷ்ட்ர ஸஞ்சய ஸம்வாதத்தாலறியலாம்.—

ஸஞ்சயன் த்ருதராஷ்ட்ரனை நோக்கி உம்முடைய ‡ வித்யை வித்யையன்று; என்னுடைய வித்யை மறைப்பில்லாதது; வித்யையில்லாமல் தமோ குணத்தினால் ஞானமழிந்தவராய்க்கேசவனாகிய பரமாத்மாவையறிகிறீரில்லை; என்றனன். அப்பொழுது த்ருதராஷ்ட்ரன், ஸஞ்சய! ஜநார்த்தனனாகிய பகவான் விஷயத்தில் எந்த வித்யை உனக்கிருக்கிறதோ, எதனால் ஆறுகுணங்கள் நிறைந்த மதுசூதனனை யறிகின்றாயோ, அப்படிப்பட்ட வித்யை எனக்கேது இருக்கிறது? என்று கேட்டான். ஸஞ்சயன் ‘யான் கபடத்தையும், வீணான தர்மத்தையும் மேற்கொண்டு ஒழுகுமவனல்லேன்; பக்தியினால் சுத்தமான மனத்தையுடையவனாய்ச் சாஸ்திரத்தினால் ஜநார்த்தனனையறிகிறேன்’ என்றான். இதனால் உண்மையான அறிவுண்டாவதற்குப் பகவத்பக்தியும் காரணமாகுமென்பது பெறப்பட்டது. இதுவரையும் கூறியதினால் த்வைத அத்வைத விசிஷ்டாத்வைதம் என்ற மூன்று சமயங்களில் விசிஷ்டாத்

---

* “[illegible]”

‡ இங்கு வித்யை என்றது புருஷார்த்தங்களையறியுமறிவை.

வைதமே சிறந்ததென்பதும், சிறந்த அறிவுபடைத்த சங்கராதியர் விசிஷ்டாத்வைதத்திற் குடன்படாததற்குக் காரணமின்னதென்பதும் குறிப்பிடப்பட்டன. இனி விசிஷ்டாத்வைதம் என்ற சொற்பொருள் விரித்துரைக்கப் பெறும்.—

விசிஷ்டஸ்ய அத்வைதம்—விசிஷ்டாத்வைதம் என விரியும். விசிஷ்டஸ்ய—உயிருள் பொருள் உயிரல் பொருள்களைச் சரீரமாகவுடைய (வஸ்துவின்) அத்வைதம்—இரண்டில்லாமை அஃதாவது—சேதனாசேதனங்களைச் சரீரமாகவுடைய பிறிதோர் வஸ்து இல்லையென்றபடி. அவயவமுடையதன்றோ சரீரமாகும். அவ்வாறிருக்க நிரவயவ ஆத்மாவையுஞ் சரீரமாகவுடையவனாயிருக்கிறானென்பது பொருந்துமோவெனின்; இங்குச்சரீரமென்றது கைகால் முதலிய அவயவங்களோடு கூடியது என்று பொருள் கொள்ளத்தக்கதன்று. நியாம்யமாய் (ஏவத்தக்கதாய்) தார்யமாய் (தரிக்கத்தக்கதாய்) சேஷமாய் (அதிசயத்தை விளைக்கத்தக்கதாய்) உள்ளது எதுவோ அது சரீரம் என்று கொள்ளவேண்டும். ஏனெனில் வேதாந்தத்தில் ஆத்மாவையும் ஸர்வேசுவரன் சரீரமாகவுடையவனாயிருக்கிறானென்று சொல்லப்பட்டுளதால், அதற்கேற்றபடி சரீரலக்ஷணம் அமைத்துக்கொள்ளவேண்டும் இந்தச் சரீர லக்ஷணம் ஆத்மாவுக்குமிருப்பதால் அதையும் ஸர்வேசுவரன் சரீரமாகக்கொள்வதற்கு யாதொரு தடையுமில்லையென்க.

ஸர்வேசுவரன் சிருஷ்டிக்குமுன் ஸூக்ஷ்ம சிதசித்துக்களைச் சரீரமாகவும், சிருஷ்டிகாலத்தில் ஸ்தூல சிதசித்துக்களைச் சரீரமாகவும் கொண்டிருக்கிறானெனவுங் கொள்ளவேண்டும். ஸூக்ஷ்ம சிதசித்துக்களைச் சரீரமாகவுடைய தசை காரணதசையெனவும், ஸ்தூல சிதசித்துக்களைச் சரீரமாகவுடைய தசை காரியதசையெனவும் அறியத்தக்கது. அணுஸ்வரூபனாய எப்பொழுதும் ஒரே தன்மையுடையவனாகிய ஆத்மாவுக்கு ஸ்தூலத்வம் (பெருத்திருக்குந்தன்மை) கூடுமோவென்னில்; இங்கு ஆத்மா ஸ்தூலனாகிறானென்பதற்கு ஸூக்ஷ்மஸ்வரூபனாகிய ஆத்மா பெருக்கிறான் என்று பொருள் கொள்ளலாகாது. அவனுடைய ஞானம் பிரகாசமாகிறதென்று ஞானத்திற்கு ஸ்தூலத்வம் கொள்ளவேண்டும். அஃதாவது—காரணதசையில் ஆத்மாவுக்கு அடங்கிக்கிடந்த ஞானம் காரியதசையில் பிரகாசமாகிறதென்பதாம்.

காரணதசையில் ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்ட ப்ரஹ்மமாயிருந்தது, காரியதசையில் ஸ்தூல சிதசித் விசிஷ்ட ப்ரஹ்மமாய் வருகிறதென்றால், உபாதான காரணமாகிய ஸர்வேசுவரனுக்கும் மண்பிண்டத்தைப்போல் சிறப்பது

பெருப்பது என்ற விகாரங்களுண்டாகவேண்டுமே யென்னின்;— நிர்விகாரத்வத்தையும், உபாதானத்வத்தையும் சொல்லுகிற சுருதியின்படி விகாரப்பாடுடைய சேதநாசேதநங்களைத் தனக்குச் சரீரமாகக்கொண்டு தான் விகாரப்படாமலிருக்கிறானதலால் சிறுப்பது பெருப்பதாகிய தோஷங்கள் சேதநாசேதநங்கட்கன்றி ஸர்வேசுவரனுக்கில்லையென்று அறியத்தக்கது.

இனி, விசிஷ்டாத்வைதம் என்பதற்கு மற்றோர் வகையாகவும் பொருள் கொள்ளலாம். விசிஷ்டஸ்ய — சேதநாசேதநங்களைச் சரீரமாகவுடைய, அத்வைதம்—நிமித்தோபாதான ஸஹகாரிகாரணமாகிய பிறிதொன்றில்லாமை. நிமித்தகாரணமாவது—உபாதான வஸ்துவைக் காரியவடிவமாக விகாரமடையும்படி செய்கிற கர்த்தாவாகிய வஸ்து. மண்ணுருண்டையைக் குடமாகச் செய்கிற குயவன் நிமித்தகாரணம். உபாதான காரணமாவது—காரிய வடிவமாகப்பரிணமிப்பதற்கு யோக்யமான வஸ்து. மண்ணுருண்டை குடமாகப் பரிணமிப்பதற்கு யோக்யமுள்ளதாயிருப்பதால் மண்ணுருண்டை உபாதான காரணம். ஸஹகாரி காரணமாவது—காரியோத்பத்திக்கு உபகரணமான வஸ்து. தண்டம் சக்கரம் முதலியவை குடம் செய்வதற்குதவியாயிருக்கின்றமையால் இவை ஸஹகாரி காரணங்களாம். உலகத்தில் இம் மூன்று காரணங்களும் வெவ்வேறாயிருக்கும். இந்த மூன்று காரணங்களும் ஸர்வேசுவரனுவானென்பது இங்குக் குறிப்பிடுகிற விசேஷமாகும். உபாதான காரணத்வம் ஈசுவரனுக்குண்டென்று சொல்லலாகாதென்று வாதிக்கின்றனர். ஏனென்றால் ஈசுவரன் உபாதான காரணமானால் அவனுக்கு விகாரப்பாடுண்டென்று சொல்லவேண்டும். அவன் விகாரமற்றவனாதலால் உபாதான காரணத்வம் மூலப்ரகிருதிக்கேயுள்ளதென்கின்றனர்.

உலகத்தில் நிமித்த காரணமாயிருக்கும் குயவன் முதலானவர்கட்கு எல்லாமறியும் தன்மையில்லாததினாலும், மண்ணுருண்டை முதலியவைகட்குச் சர்வசக்தியில்லாததினாலும் இவை வெவ்வேறு காரணங்களாயின. ஸர்வேசுவரன் எல்லாமறிந்தவனாயும், எல்லாம் வல்லவனாயுமிருக்கின்றானாதலால் இவனே மூன்று காரணமாகக்கூடும். வேதமானது ப்ரஹ்மஜ்ஞானமொன்றினால் எல்லாமறியப்பட்டதாகும், எவ்வாறெனின்;—மண்ணுருண்டையையறிந்தால் அதனாலுண்டாகின்ற குடம் மண்பிண்டத்தின் விகாரமென்றறிவது போல; என்று திருஷ்டாந்தம் காட்டியது. இங்கு வேதம் ஒன்றையறிந்தால் எல்லாமறிந்ததாய்விடும் என்ற பிரதிக்ஞைக்கும், மண்ணுருண்டை திருஷ்டாந்தத்திற்கும் விரோதம் வாராதிருப்பதற்காக ஈசுவரனுக்கு உபாதான காரணத்வமும் ஒப்புக்கொள்ளவேண்டும். நிமித்தோபாதான ஸஹ

காரி காரணங்களை வெவ்வேறாக ஒப்புக்கொள்ளும்பக்ஷத்தில் நிமித்தமாகிய குயவ ஞானத்தால் குடம் முதலிய காரியம் இன்னஸ்வரூபமென்றறியப்பட மாட்டா. உபாதானமான மண்ணுருண்டை ஞானத்தால் குடம் முதலிய காரியங்கள் மண்ணென்றறியப்படுகின்றன. ஈசுவரனே எல்லாக்காரணமுமாகின்றான் என்றாற்றான் இந்த ஈசுவரஞானத்தால் எல்லாமறியப்பட்டதாகும். ஸர்வேசுவரன் ''பஹுஸ்யாம்'' (வெகுவாக ஆகக்கடவேன்) என்ற ஸங்கல்ப விசிஷ்டனாய் நிமித்தகாரணமாயும், ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்டனாய் உபாதான காரணமாயும், ஞான சக்தியாதி விசிஷ்டனாய் ஸஹகாரி காரணமாயுமிருக்கிறான்.

இப்படி விசிஷ்டாத்வைதமென்ற பதத்திற்கு பொருள் கொண்டால் பேதமுண்டென்று சொல்லிய சுருதிக்கும், அபேதமுரைத்த சுருதிக்கும் பொருள் இயைந்து விளங்குவதை கண்டறியலாம். அத்வைதிகள் அபேதசுருதி ஒன்றினையே கையாண்டு மற்றவையனைத்தும் பரமார்த்தமில்லையென்பர்கள். அவர்கள் இங்ஙனம் கூறுகின்றனர்.—ஒரு விசேஷமுமில்லாதிருக்கிற ப்ரஹ்மமே ஸத்யம். அதைத்தவிர்த்து அந்த ப்ரஹ்மத்தினிடத்தில் ஏறிடப்பட்டிருக்கிற பலவகையான பேதங்களெல்லாம் பொய். "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத் ஏகமேவாத்விதீயம்" ஸோமபாகம் பண்ணத்தகுதியுள்ளவனே! இது சிருஷ்டிக்குமுன் (ப்ரளய காலத்தில்) இரண்டாவதின்றி ஒன்றுமாத்திரம் ஸத்ரூபமாகவேயிருந்தது. பரவித்யையினால் அழிவற்றதான அந்த ப்ரஹ்மம் அறியப்படுகிறதோ, எது கண்ணால் காணவும் மற்ற இந்திரியங்களால் க்ரஹிக்கவும் ஆகாததோ பெயரும் நிறமுமில்லாததோ; கண் காது கை கால்களில்லாததோ, நித்யமாயும் விபுவாயும் எங்கும் நிலைபெற்றதாயும் மிக்க ஸூக்ஷ்மமாயும் அழிவற்றதாயுமிருக்கிறதோ பூதங்கட்குக் காரணமான அந்தப்ரஹ்மத்தை ஞானிகள் ஸாக்ஷாத்கரிக்கிறார்கள். ப்ரஹ்மமானது ஸத்யமாயும் ஜ்ஞானமாயும் அனந்தமாயும் இருக்கிறது. அது அவயவமில்லாததாயும், செய்கையற்றதாயும், சாந்தமாயும், கர்மஸம்பந்தமும் அதன் பயனுமற்றதாயும் இருக்கிறது. இவ்வுலகில் எவன் ப்ரஹ்மத்தைத்தவிர வேறுவஸ்து இருப்பதுபோலப் பார்க்கிறானோ அவன் அவித்யையடைகிறான். எப்பொழுது இரண்டாகவிருத்தல் ஸம்பவிக்கிறதோ அப்பொழுது ஒருவன் மற்றொருவனைப்பார்க்கிறான். எப்பொழுது எல்லாம் ஆத்மாவாகவே ஆய்விட்டதோ அப்பொழுது எவன் எதனால் எவனைப்பார்க்ககூடும்? குடம் முதலிய வஸ்துக்களில் அவயவ விசேஷங்களும், பெயர்களும் வ்யாவஹாரிகம்; மண்ணே ஸத்யம், எப்பொழுது இவன் இந்த ப்ரஹ்

மத்தினிடத்தில் பேசத்தைப்பாராட்டுகிறானே அவனுக்குப் பயமுண்டா கிறது. ப்ரஹ்மம் எல்லாவிடங்களிலும் நிறைந்திருந்தாலும் அவ்விடத்தின் ஸம்பந்தத்தாலுண்டாகின்ற தோஷம் அதற்கு வருவதில்லை; என்கின்றனர்.

இவர்கள் இங்ஙனமுரைப்பதை நன்றாய் ஆராய்ந்து பார்த்தால் சுருதி யுக்தி அநுபோகங்கட்குப் பொருந்தாதிருப்பதை அறியலாம். இவர்கள் இங்ஙனமுரைத்தவையனைத்தையும் நமது பாஷ்யகாரர் பூர்வபக்ஷஞ்செய்து விசிஷ்டாத்வைதமே ஸித்தாந்தமாகுமென்று ஸ்தாபித்திருக்கின்றனர். நடு நிலைமையுடன பார்க்கின்றவர்கட்கு இந்த விசிஷ்டாத்வைதமே ஸித்தாந்த மென்பது தெளிவாய் விளங்கும்.

அதன்பிறகு "கீதாஸாரம்" என்றவிஷயத்தைக்குறித்து அக்ராஸநராகிய ஸ்ரீ உ. வே. ஆஸூரி ராமாநுஜாசார்ய ஸ்வாமி உபந்யஸித்தார். அதன் சுருக்கம் வருமாறு.—

வேதார்த்தங்களைத் தெளிவாய் வெளியிடுவதற்காகவே ஸ்மிருதி இதி ஹாஸங்கள் தோன்றின. இவற்றுள் இதிஹாஸப்பகுதியில் ஸ்ரீ ராமாயண பாரதங்களே சிறந்தன. சிறந்தனவாகிய இவ்விரண்டனுள் மஹாபாரத மென்பது வேதத்தொடு ஒரு கோவையாக வைத்து ஐந்தாம் வேதமென்று சொல்லப்படும் பெருமையுடையது. இத்தன்மைத்தாகிய பாரதத்திற்கோர் சிறப்பினையளிப்பதாய், ஸகலார்த்தங்களும் நிரம்பப்பெற்றதாய், ஸாரதமமா யிருப்பது கீதையாகும். கண்ணபிரான் அர்ஜுனனை வியாஜமாக வைத்து உலகிற்கோர் அரிய பெரிய விஷயத்தை வெளியிட்டான்.

" ஆரெனக்கின்றுநிகர்சொல்லில்மாயனன்றைவர்தெய்வத்
தேரினில்செப்பியகீதையின்செம்மைப்பொருள்தெரியப்
பாரினிற்சொன்னவிராமாநுசனைப்பணியும்நல்லோர்
சீரினிற்சென்றுபணிந்ததென்னுவியுஞ்சிந்தையுமே,

என்று அமுதனார் நமது பாஷ்யகாரர் கீதையின் செம்மைப் பொருளைப் பாரினிலுள்ளோர்கட்கு அருளிச்செய்தாரென்று குறிப்பிடுகிறார். இங்கு கீதையின் செம்மைப்பொருள் பாரினிற்சொன்ன என்றதனால் சில குதிருஷ் டிகள் தத்வத்தை யுபதேசிக்கவேண்டுமென்று ஆரம்பித்து இடையிலே தம் முடைய பக்ஷத்திற்கு அநுகூலமாகச் சில வாக்யங்களைக் கலந்து ஆரம்ப முடிவுகட்கு விபேதமாகக் கூறினார்களென்பதை விளக்குகிறது. இஃதல்லா

மலும் கீதையின் உண்மையான பொருளைக்கண்டு வெளியிட்டனரென்பதும் புலனாகிறது. இவரருளிய செம்மைப்பொருள்களாவன:—வேதாந்த சித்தாந்தமான பக்திப்ரபத்திகளாகிய உபாயங்களை முக்யமாகக் குறிக்கப்படுகின்றன வென்பதாம். பக்திப்ரபத்திகளின் ஸ்வரூபங்களைக் கீதையிற்கண்ட வாக்யங்கட்கு ஏற்றபடி பொருளருளிச்செய்துள்ளார். ஆனால், கீதையில் கர்ம ஜ்ஞான முதலியவைகளும் குறிப்பிடப்பெற்றுள்ளனவே அங்ஙனமிருக்க, பக்தி ப்ரபத்திகளே முக்யமாகக் குறிப்பிடுகின்றதென்பது எவ்வாறு பொருந்துமெனின்;—உலகத்தில் பல நிலைமையுடையவர்களிருக்கின்றனர்; புண்ணியபாபங்கட்கேற்றபடி அவரவர்களும் பலவேறு வகையான ருசியுடையவர்களாயிருப்பாகள்; அவ்வவர்கட்கேற்றவாறு பல வுபாயங்களுங் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை: கர்மம் ஜ்ஞானம் பக்தி புருஷோத்தம வித்யை பிரபத்தி என்பன.

«யோகஸ்த: குரு கர்மாணி ஸங்கம் த்யக்த்வா தனஞ்ஜய» என்பது முதலாகக் கர்மயோகத்தையும், «ஸர்வம் கர்மாகிலம் பார்த்த ஜ்ஞானே பரிஸமாப்யதே» என்பது முதலாக ஜ்ஞானயோகத்தையும், «பக்த்யா த்வநந்யயா ஶக்ய:» என்பது முதலாகப் பக்தியோகத்தையும், «ஜந்ம கர்ம ச மே திவ்யம்» என்பது முதலாக அவதார ரஹஸ்யத்தையும், «த்வாவிமௌ புருஷௌ லோகே» எனத் தொடங்கி, «ப்ரதித: புருஷோத்தம:» என்பது முடிவாகப் புருஷோத்தம வித்யையையும், «[illegible]» என்பது முதலியதால் ஸ்வஸ்வரூபத்தின் உண்மையையும், «தைவீ ஹ்யேஷா குணமயீ» என்பது முதலியதினால் விரோதி நிவர்த்திக்குப் ப்ரபத்தியையும், «[illegible]» என்பது முதலியதால் ஆத்மப்ராப்திக்கு ப்ரபத்தியையும், «ஸர்வ … ஶுச:» என்ற சரமசுலோகத்தால் பகவல்லாபத்திற்கு பரபத்தியையும் உபதேசித்தான்.

இவற்றின் விவரமும் எழுதப்பெறும்;—முன்பு கர்மயோகத்தை யுபதேசித்தான். அப்பொழுது அர்ஜுனன் «சஞ்சலம் ஹி மந:» மனதை யடக்குதல் அரிதாகுமே என்றனன். கண்ணன், அப்படியானால் என்னிடத்தில் மனத்தை வைப்பாயெனறுரைத்துக் காமயோகத்தால் முக்தியடைந்த ஜநகர் முதலானவர்களைப் பிரஸங்கிக்கும் முகத்தால், இத்தக் கர்மயோகத்தை முன்பு சூரியனுக குபதேசித்தேன். சூரியன் மனுவுக்குபதேசித்தான், மனு

இக்ஷ்வாகுவுக் குபதேசித்தான். இப்படி பரம்பராப்ராப்தமாக வந்த இந்த யோகத்தை ராஜருஷிகள் அறிந்தார்கள். இத்தகைய யோகமானது நஷ்டமாய் விட்டது. இந்தப் பழமையான யோகத்தை உனக்குபதேசித்தேன் என்றான்.

இதனைக்கேட்ட அர்ஜுனனுக்குச் சந்தேகமுண்டாகி, கண்ணபிரானை நோக்கி, இந்தக கர்மயோகத்தைச் சூரியன் முதலானவர்கட்குபதேசித்ததாகச சொல்லுகின்றீரே; உம்முடைய அவதாரம் பின்னிட்டதன்றோ? நீர் எப்படி சூரியனுக்குபதேசிககககூடும்!" என்று வினவினன். அப்பொழுது கண்ணன், "வஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி தவ சார்ஜுந, தாந்யஹம் வேத ஸர்வாணி ந த்வம் வேத்த பரந்தப" அர்ஜுன! உன்னைப் போல எனக்கும் பல ஜன்மங்கள் கழிந்தன. அந்த ஜன்மங்களையெல்லாம் நானறிவேன், நீ யறியமாட்டாய், பிறப்பற்றவனுய் எல்லோருக்கும் ஈசனுகிய யான் எனது ஸங்கல்பத்தினுல் அவதரிக்கிறேன் என்று அவதார ரஹஸ்யத்தை வெளியிட்டான்.

இங்குக் குறிப்பிட்ட கர்மயோகத்தைக் காட்டிலும், ஞானயோகஞ் சிறந்தது. அதனினும் பக்தியோகஞ் சிறந்தது. இதைக்காட்டிலும் ப்ரபத்தி சிறந்தது. இதுவே சிறந்ததற்கு எல்லையாகவுடையது. இதற்குமேலெல்லையில்லையென்பதைத் தெரிவிப்பதாகவே இதற்குச் சரமசுலோகமென்று பெயர் வழங்கலாயிற்று.

இந்தச் சரமசுலோகத்தில், எல்லாத தர்மங்களையும் ருசி வாஸனையுடன் விட்டு என்னையே உபாயமாகப்பற்றினுல் யான் உன்னை எல்லாப் பாபங்களினின்றும் விடுவிக்கிறேன்; என்றான். இவ்விடத்தில் ஆராயவேண்டிய தொன்றுண்டு. அது வருமாறு:—பக்தியோகங்களைக குறிப்பிடுகிற விடங்களில் "மாமேவைஷ்யஸி" என்றும், "யேந மாமுபயாந்தி தே", என்றும பகதியோகத்திற்குப் பலமாகப் பகவத் ப்ராப்தி குறிப்பிடப்பட்டுளது. பக்தியிலும் சிறந்த ப்ரபததியைக் குறிப்பிட வந்தபோது "ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று ப்ரபததிககுப் பாபவிமோசனமாகிய அமுக்ய பலம் குறிப்பிடப்பட்டுளது. இது எவ்வாறு பொருந்துமென்ற சந்தேகமுண்டாகலாம். இதற்குச சமாதானம் கீழ்க்குறிப்பிடுமவற்றாலறியலாம்,

பாஞ்சராத்திரத்தில், "ஸாத்யா பக்திஸ்து ஸாஹந்த்ரீ ப்ராரப்தஸ்யாபி பூயஸீ" ஸாத்யபக்தியானது ப்ராரப்த கர்மத்தையும் போக்குமென்று சொல்லப்பட்டபடி இக்தச் சரமச்லோகத்திலும் "ஸர்வபாபேப்யோ" என்றதனால் அவசியம் அநுபவித்தே போக்கத்தக்க ப்ராரப்த கர்மமும் ஒழியுமென்று குறிப்பிடலாயிற்று. இதனால் பக்தியைக்காட்டிலும் ப்ரபத்தியின் பெருமை உணர்த்தப்பட்டது. ஸ்ரீ ஆளவந்தாரும் கீதையை ஷட்கத்ரயமாக வகுத்து இதன் ஸாரம்சங்களை யருளிச்செய்துள்ளார்.

பின்னர், ஸேது சம்ஸ்தான மகாவித்வானும் பாஷாகவிசேகரருமாகிய ஸ்ரீ. உ. வே. இராகவையங்கார் ஸ்வாமி "வரவரமுநிகள் வைபவ"த்தைக் குறித்து உபந்யஸித்தார். அதன் சுருக்கம் வருமாறு.—

ஆதிசேஷாம்சராகிய உடையவரே மறுபடியும் சுத்த ஸம்ப்ரதாயத்தையும் சிஷ்யனிருக்கும் நிலைமையையும் அறிவிப்பதற்காக வரவரமுநியாய் வந்தவதரித்தாரென்றும், இவருடைய ஜ்ஞாநாநுஷ்டானங்களும், உபய வேதாந்த பாண்டித்யமும், தெய்விகச் செயல்களும் கொண்டாடத்தக்கன வென்றும் ஸ்வகோஷ்டியிலே வழங்குவர்கள். இங்ஙனம் ஸ்வகோஷ்டியில் வழங்கும் வரலாறுகளை ஸ்வகோஷ்டிக்குப் புறம்பாயுள்ள ஏனையோர்கள் ஒப்புககொள்வதில்லை. இனி யாவரும் ஒப்புக்கொள்ளும் வகையால் இவரது வைபவத்தை யெடுத்துரைப்பது தகுதியுடையதாகும். இவரது வைபவத்தை யாவரும் ஒப்புக்கொள்வதற்குக் கருவியாக இப்பெரியாராகிய வரவரமுநிகளின் வாக்குகளையும் திவ்யதேசங்களில் வழங்கிவருகிற அநுஷ்டானங்களையும் எடுத்துக்கொண்டு ஆராய்வது ஏற்புடைத்தாம்.

ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பட்ட திவ்யதேசங்கள் நூற்றெட்டில் 80 திவ்யதேசங்கள் வரை வரவரமுநிகளின் விஷயமாகிய ஸ்ரீசைலேச தனியன் வழங்குதலையும் வரவரமுநிகள் நியமித்த அஷ்டதிக்கஜங்களில் அக்ரகண்யரான ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி வானமாமலை ஜீயர்ஸ்வாமியின் சிஷ்யர்கள் ஆஸேதுக ஹிமாசலாந்தமாக நிறைந்திருப்பதையும் வடதேசத்தில் வானமாமலை ஸ்வாமியின் நியமனம்பெற்ற மகந்துக்கள் பல நூற்றுக்கணக்காக நிறைந்திருப்பதையும் நடுநிலைமையோடு ஆராய்ந்து பார்த்தால் இவர் மஹாசார்யராய் விளங்கினரென்பது நன்கு போதரும்.

இப்படி இவரது தனியன் பல திவ்யதேசங்களில் வழங்கப்பெறுதற்கும், இவரது சிஷ்ய ப்ரசிஷ்யர்கள் யாண்டும் நிறைந்திருப்பதற்கும் வாசாமகோசரமாகிய இவரது ஜ்ஞானவிசேஷங்களும் அதற்கேற்ற வொழுக்கங்களும் காரணமாகும். இவ்விஷயங்களை இவரது பாசுரங்களால் ஆராயலாகும். அவை வருமாறு:—

“ தென்னரங்கர்சீரருளுக்கிலக்காகப்பெற்றோம்
திருவரங்கம்திருப்பதியேயிருப்பாகப்பெற்றோம்
மன்னியசீர்மாறன்கலையுணவாகப்பெற்றோம்
மதுரகவிசொற்படியேநிலையாகப்பெற்றோம்
முன்னவராம்நங்குரவர்மொழிகளுள்ளப்பெற்றோம்
முழுதும்நமக்கவைபொழுதுபோக்காகப்பெற்றோம்
பின்னையொன்றுதனில்நெஞ்சுபோகாமற்பெற்றோம்
பிறர்மினுக்கம்பொறாமையில்லாப்பெருமையும்பெற்றோமே”

என்றருளிச் செய்தார். இதனால் தம் வாழ்நாள் கழித்ததை வகைபெற அருளிச் செய்கிறார்.— நிறைந்த ஞானமும், அதற்கேற்ற ஒழுக்கமும், சிறந்த புகழும் பெற்று வாழ்வதற்கு முக்யகாரணமாக விருப்பது எம்பெருமானுடைய கிருபையாதலால் முன்னர் “தென்னரங்கர் சீரருளுக்கிலக்காகப்பெற்றோம்” என்றார். பின்பு அவ்வருளினால் சீர்திருந்திவாழ்ந்தமையை விளக்குகிறார் “திருவரங்கம் திருப்பதியே” என்பதுமுதலிய தொடர்களால். விசுவாமித்திரர் இராமபிரானை நோக்கி இந்த ஸித்தாச்ரமத்தில் வாமனன் பல்லாண்டுகள் உகந்தெழுந்தருளியிருந்தானென்று இவ்விடத்தைச் சிறந்த வாழ்விடமாகப் பற்றிக்கிடக்கிறேனென்றுரைத்தனர். இதனால் உகந்தருளின நிலங்களில் வாழ்வதும் ப்ரபந்நர்கட்கு நல்லொழுக்கமாகுமென்பார். “திருவரங்கம் திருப்பதியே இருப்பாகப்பெற்றோம்” என்றார். ப்ரபந்நஜன கூடஸ்தராகிய நம்மாழ்வார் “தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்,” என்று அருளிச்செய்ததை அநுஷ்டான பர்யந்தமாக்கியிருப்பதை விளக்குகிறார் “மன்னியசீர் மாறன்கலையுணவாகப்பெற்றோம்” என்று. இதனால் ஆழ்வாருளிய திருவாய்மொழியநுஸந்தானமே ஸத்வநிஷ்டருக்குத் தாரகஹேதுவாகும் என்பதைக்குறிப்பிட்டார். “கேட்டாரார் வானவர்கள் செவிக்கினிய செஞ்சொல்லே” என்றபடி திருவாய்மொழியின் மூலாநுஸந்தானமே பரமபோக்யமாகவிருக்குமாதலால் “மாறன் கலையுணவாகப் பெற்றோம்” என்றார். மேலும் வரவரமுனிகள்தாம் வாழ்நாளில் திருவரங்கம் கருடமண்டபத்திலிருந்து “முப்பத்தாறாயிரப் பெருக்கர்” என்று யாவரும்

கொண்டாடும்படி திருவாய்மொழி வியாக்யானமருளிச் செய்தாரென்பதும் இவர் மாறன்கலையுணவாகப் பெற்றதை வலியுறுத்தும். பேற்றைத் தவறாமல் பெறுதற்கு ஆசார்யனையே உபாயமாகப்பற்றவேண்டியது முறையாதலால் "மதுரகவி சொற்படியே நிலையாகப்பெற்றோம்" என்றார். மதுரகவியாழ்வார் நம்மாழ்வாரிடத்தில் திருவாய்மொழி முழுமையும்ஓதியுணர்ந்து, அதில் "பயிலுஞ்சுடரொளி" "நெடுமாற்கடிமை" என்ற இரண்டு பதிகங்களால் குறிப்பிடப்பெற்ற ததீய சேஷத்வமே அதின் (திருவாய்மொழியின்) முக்யப் பொருளாகுமென்று கருதி ஆழ்வாரே உபாயோபேயமென்று ஆசார்ய நிஷ்டையுடையவராய் விளங்கினார். ஆசார்ய நிஷ்டையுடையவராகப்பெற்றோமென்று பொதுவாகக்கூறாமல் "மதுரகவிசொற்படியே நிலையாகப் பெற்றோம்" என்றதனால், ஆசார்ய நிஷ்டையே சிறந்த புருஷார்த்தமாகும் என்பதைச்சிஷ்டாசாரங்காட்டி வலியுறுத்துகின்றாரென்பது விளங்கும். ஆசார்ய நிஷ்டையினின்றும் மாறுபடாதிருத்தற்குத் திடமான ஞானம் வேண்டும். ஞானோற்பத்திக்கு ஸாதகமான நூலுணர்ச்சி வேண்டுமாதலால், "முன்னைவராம் நங்குரவர் மொழிகளுள்ளப் பெற்றோம்" என்றார். முன்னவராம் நங்குரவர் மொழிகள் பூர்வாசார்யர்களருளிய ஸ்ரீஸூக்திகள். இவற்றை நுணுகி ஆராயவேண்டுமென்பார் உள்ளப்பெற்றோம் என்றார். இந்திரியங்கட்குவேறு விஷயமின்றிப் பூர்வாசார்யர்களருளிய ஸ்ரீஸூக்திகளை ஆராய்ந்துணர்வதே பொழுதுபோக்காகக் கொண்டாலன்றித் தாம் பற்றிய நிஷ்டை நிலைபெறாதாதலால் "முழுதும் நமக்கவை பொழுதுபோக்காகப் பெற்றோம்" என்றார். இப்படி ஆசார்யர்களுடைய திவ்ய ஸூக்திகளை ஒழிவில் காலமெல்லாம் ஆராய்ந்துணரப்பெற்ற காரணத்தால் நின்றவாநில்லாநெஞ்சு ஒருவழிப்பட்டதென்பார் "பின்னையொன்றுதனில் நெஞ்சுபோராமற் பெற்றோம்" என்றார்.

கருவிலே திருவுற்று, உகந்தருளின நிலங்களில் வாழ்ந்து, மாறன் பணித்த பாவினைத் தாரகமாகக்கொண்டு, ஆசார்யநிஷ்டையடைந்து, பூர்வாசார்யர்களின் திவ்ய ஸூக்திகளை ஆராய்வதில் போதுபோக்கி அதனால் ஒரு வழிப்பட்ட நெஞ்சைப் பெற்றிருந்தாலும், பிறருடைய உயர்ச்சியைக்கண்டு பொறாமைப்படுகிற துர்க்குணமொன்றிருக்குமானால் அத்தனை நன்மைகளும் அழிந்துவிடும். ஆதலால் பொறாமைப்படாதிருப்பதே மிக்க பெருமையாகுமென்பார் "பிறர் மினுக்கம் பொறாமையில்லாப் பெருமையும் பெற்றோம்" என்றார்.

லோகதேசிகன், ஸ்ரீவைஷ்ணவாதிகாரிக்கு லக்ஷணங் குறிப்பிடுகிறவிடத்தில் "இப்படியிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஏற்றமறிந் துகந்திருக்கை

யும்" என்று அருளிச்செய்தார். புறம்புண்டான பற்றுக்களையுடைய வாசனை யோடே விதேல் முதலியவையுண்டானாலும் ஸ்ரீவைஷ்ணவர்களின் உயர்ச்சி யைக்கண்டேசேர்திருக்கும் குணமுண்டாத லரிதாகும். இவ்வரியகுணமுண்டா னால் இது ஜ்ஞாந பக்தி வைராக்ய முதலியவற்றையும் பிரகாசிப்பிக்கும். பொறுமையிருக்குமானால் ஏனைய நற்குணங்களின் சத்தையை யழிக்கும். ஆக ஏனைய குணங்களின் ஸத்தையைத்தருகிற பிறர்மினுக்கம் பொறாமையில் லாததொன்றே சிறந்த பேறுகுமாதலால் "பிறர் மினுக்கம் பொறாமையில் லாப் பெருமையும் பெற்றேோம்" என்று கொண்டாடுகிறார். திருவள்ளுவரும், "விழுப்பேற்றினஃதொப்பதில்லையார்மாட்டும், அழுக்காற்றினன்மைபெறின்" என்று பொறாமைப்படாதிருத்தலைக் காட்டிலும் சிறந்த பிரயோஜனம் பிறி தில்லை யென்றார்.

மேலும், வரவரமுநிகள் தாம் வாழ்நாட் கழித்ததை மற்றோர் வகை யாகவு மருளிச்செய்கிறார்.—

> "பண்டேபலவாரியரும்பாருலகோருய்ய
> பரிவுடனேசெய்தருளும்பல்கலைகடம்மை
> கண்டதெல்லாமெழுதியவைகற்றிருந்தும்பிறர்க்குக்
> காதலுடன்கற்பித்துங்காலத்தைக்கழித்தேன்"

என்று. இங்குப் பூர்வாசார்யர்களருளிய பிரபந்த ஸம்ரக்ஷணம் செய்து அவற்றை முறையாகக் கற்று, கற்றவாறே பிறருக்குமுபதேசித்துக் காலத் தைப் போக்கினே னென்கிறார். ப்ரபந்நஜனகூடஸ்தராகிய நம்மாழ்வார் முதலான பெரியார்களை மிகவும் கொண்டாடுகிறோம். இவ்வாறு நாம் கொண்டாடுவதற்கு ஹேது அவர்களை நாம் நேரிற்கண்டதாகுமென்று சொல் வதற்கியலாது. அவர்களருளிய பிரபந்தங்களே அவர்களைக் கொண்டாடு வதற்கு ஹேதுவாகும். மேலும் தத்வதரிசிகள் அருளிய பிரபந்தங்கள் தத்வ ஜ்ஞானத்தைப் பிறப்பித்து மோக்ஷோபாயத்தையும் தரும். ஆராய்ந்து பார்த் தால் இத்துணைப் பெருமையை யளிக்கின்ற பிரபந்த ஸம்ரக்ஷணத்தைக் காட்டிலும் சிறந்ததொன்று பிறிதில்லை யென்பது தெற்றென விளங்கு மன்றே!

பண்டே பல வாரியர்கள்—முன்பு திருவவதரித்த நாதமுனி ஆளவந்தார் முதலானவர்கள். இவர்கள் ஆழ்வாரின் அநுக்ரஹம் பெற்றவர்களாதலால், அவர் ஸெளதி லாப பூஜைகளை விரும்பாது அருள் கரைபுரண்டு உலகிலுள்ள வர்கள் வாழ்வதற்குப் பிரபந்தங்கள் அருளிச்செய்ததுபோல இவர்களும்

தத்வஹித புருஷார்த்தங்களை யறிவிக்கிற பல பிரபந்தங்களையும் அருளிச் செய்தார்களென்பார் "பாருலகோருய்ய பரிவுடனே செய்தருளும் பல்கலைகள்" என்றார். இதனால் உலகத்தில் கியாதி லாப பூஜைகளை விரும்பிச் செய்யும் கவிஞர்களைப் போல்வாரல்லர் இவர்களென்பது தெளிவாகிறது. இஃதல்லாமலும் உலகம் வாழவேண்டுமென்ற அருள்மிக்கவராய் பிரபந்தம் இயற்றினார்களாதலால் இவர்களே ஆப்தராவார்களென்பதும், இதனால் வக்த்ரு வைலக்ஷண்யமும், பிரபந்த வைலக்ஷண்யமும் குறிப்பிடப்பட்டதாமென்பதும் அறியக்கிடக்கின்றன.

இனி, பூர்வாசார்யர்களியற்றிய பிரபந்தங்களைப் பரிபாலித்துப்போந்த முறையினைத் தெரிவிக்கிறார்.—பல்கலைகள் தம்மைக் கண்டதெல்லாம் எழுதி யென்ற தொடர்களால் பூர்வர்களருளிய பிரபந்தங்களைத் தேடிக்காணுவதே சிறந்த பணியாகக்கொண்டு, அப்பிரபந்தங்கள் பின்னுள்ளார்கட்கும் உபயோகமாகவேண்டுமென்று எழுதினார் என்றதனால் பிரபந்த பரிபாலனமே உலகபரிபாலனமென்பது தோற்றும். இங்ஙனம் பரிபாலிக்கப்பெற்ற பிரபந்தங்களைப் பெரியார் வாயிலாகக் கேட்டறிந்தேனென்பார் கற்றிருந்துமென்றார். இதனால் முன்னோர் மொழிந்த பிரபந்தங்கட்குப் பெரியார் வாயிலாகக்கேட்டுப் பொருள் நிர்ணயம் செய்யவேண்டுமேயன்றி, தம் நெஞ்சிற்றோன்றியவாறு பொருள்முடிவு காணலாகாதென்பது பெறப்பட்டது. தாம் கண்ட நல்லதை நாட்டாருங்கண்டு நலனெய்தவேண்டுமென்ற பேராசையால் கற்பித்தேன் என்பார் 'பிறர்க்குக் காதலுடன் கற்பித்தும்' என்றார். மேலும், பிறர்க்குக் கற்பித்ததும் அவர் பாலுள்ள நன்மை கண்டன்று; தம்மிடத்திலுள்ள பேரருளே பற்றாசாகக்கொண்டு கற்பித்தாரென்னும் இவர்தம் சீரிய பெருமை வெளியாகிறது.

திருவரங்கத்துறை செல்வனாகிய எம்பெருமானே சிஷ்யனாய் வந்து கொண்டாடும் பெருமையும், விசதவாக்சிகாமணியென்று யாவரும் புகழும் சீர்மையும் வரவரமுனிகள் ஒருங்குநிறையப்பெற்றிருந்தனராதலால் இவரும் பலபிரபந்தங்கள் இயற்றுதற்கு ஆற்றலுடையவராவாரென்பது தெளிவாகும். இங்ஙனம் ஆற்றல் படைத்தவராயிருந்தும் "திருவாய்மொழி நூற்றந்தாதி" "உபதேசரத்தினமாலை" "ஆர்த்திப்பிரபந்தம்" 'எதிராஜவிம்சதி" முதலிய ஒரு சில பிரபந்தங்களே அருளிச்செய்துள்ளார். இதனால் பல பிரபந்தங்கள் செய்து தம்புகழ் நாட்டவேண்டுமென்பதில் திருஷ்டி செலுத்தாமல் பூர்வாசார்யர்களருளிய பிரபந்தங்களைத் தேடிக்கண்டெழுதிக்கற்றுப்

பிறருக்குபதேசித்து வாழ்காலேக்கழித்த மனத்தூய்மையுடையவரென்பது தெளிவாகிறது.

இதுவரையும் வரவரமுநிகள் அருளிய பாசுரங்களாகிய அகச்சான்று களைக்கொண்டு ஆராய்ந்துபார்த்தவிடத்தில் ப்ரஹ்மநிஷ்டையுடையவர்க்கு எத்தனை குணம் நிறைந்திருக்கவேண்டுமோ அத்தனை குணங்களுமுடையவ ராய் வரவரமுனிகள் விளங்கினுரென்பது வெளியாகிறது. இதனுலன்றோ கோயிலண்ணன் முதலிய மஹாசார்ய பரம்பரையைச் சேர்ந்தவர்களும், அரங்கத்துறையப்பனும் வழிபாடு செய்தனர். இஃதல்லாமலும் திவ்ய தேசங்களிலுள்ள அர்ச்சாவதார எம்பெருமான்களும் இவர்தம் தனியனைத் திருச்செவிசாத்துகின்றனர். இவர்க்கு இத்தனைப்பெருமை நிறைந்திருக் கின்றமையால் இப்பொழுதும் இவர்தம் சிஷ்யவர்க்கங்களே யாண்டும் நிறைந்திருக்கின்றனர். இதனுல் இவரே மஹாசார்யராவாரென்பது தெளிவு.

மேலும் வரவரமுனிகள் விசதவாக்சிகாமணியாய் விளங்கினுரென்ப தற்கு இவர் திருமங்கைமன்னன் விஷயத்தில் ஈடுபட்டருளிச்செய்த ஒரு பாசுரமே போதிய சான்றாகும். அது வருமாறு.—

"உறைகழித்த வாளையொத்த விழிமடந்தை மாதர்மேல்
உருகவைத்த மனமொழித் துலகளந்த நம்பிமேல்
குறையைவைத்து மடலெடுத்த குறையலாளி திருமணங்
கொல்லைதன்னில் வழிபறித்த குற்றமற்ற செங்கையான்
மறையுரைத்த மந்திரத்தை மாலுரைக்க வவன்முன்னே
மடியொடுக்கி மனமடக்கி வாய்புதைத் தொன்னலார்
கறைகுளித்த வேலணைத்து நின்றவிந்த நிலைமையென்
கண்ணைவிட் டகன்றிடாது கலியனுணை யாணையே".

இச்செய்யுளானது, சொன்னேக்கும் தொடைநோக்கும், பொருணேக் கும், மற்றெந்நோக்குமுற்றிலங்குவதைக் கற்றுவல்ல யாவரும் நன்கறிவர்.

அதன் பின்னர் 'ஸ்ரீராமாயண ஸாரம்" என்றவிஷயத்தைக் குறித்து, பிரதிவாதிபயங்கரம் ஸ்ரீ.உ.வே. அண்ணங்கராசார்யஸ்வாமி உபந்யஸித்தார். அதன் சுருக்கம் வருமாறு:—

"வேதத்தாலறியப்படும் புருஷோத்தமனுகிய பகவான் தசரதனுக்குப் புதல்வனுக வந்தவதரித்தது போல, வேதமும் வால்மீகிபகவான் வாயிலாக

ஸ்ரீராமாயண ரூபமாய் வந்தவதரித்தது'' என்று ஸ்கந்தபுராணத்திலுரைத்த படி ஸ்ரீராமாயணம் இதிஹாஸங்களில் மிகவும் சிறந்ததென்பதை யாவரு மறிவர். ஸ்ரீராமாயணத்திலுள்ள அரிய பல ச்லோகங்களைப் பெரியவாச் சான்பிள்ளை முதலான பூர்வாசார்யர்கள் தொகுத்து அவற்றிற்குச் சிறந்த பொருள் அருளிச்செய்துள்ளார்கள். இந்த இதிஹாஸம் வேதார்த்தத்தை வெளியிடுவதற்காகத் தோன்றியதினால், இதில் குறிப்பிடப்பெற்ற வரலாறுக ளெல்லாம் தத்வார்த்தங்களாகவே யிருக்கும். உதாரணமாக ஒருவிஷயம் ஈண்டு விரித்துரைக்கப்பெறும்.—

இராவணன் செய்த வஞ்சனையால் பிராட்டியார் சக்ரவர்த்தித்திரு மகனை விட்டுப்பிரிந்து அசோகவனத்தில் எழுந்தருளியிருந்ததில் சில ரஹஸ் யப்பொருளறியக்கிடக்கின்றன; என்று நம் பூர்வாசார்யர்கள் அருளிச்செய் வார்கள். அவையாவன.—

ப்ரபந்நன் சம்சார மண்டலத்திலிருக்கு மிருப்பைப் பிராட்டி அசோக வனத்திலிருந்து காட்டினாள். எவ்வாறெனில்:—பிராட்டிக்கு இராவணனு டைய ஸம்பந்தம்போல ஸ்ரீவைஷ்ணவனுக்கு உடம்பொடு ஸம்பந்தம். இராவண ஸம்பந்தம் பிராட்டிக்குப் பொறுக்க முடியாத துன்பத்தை விளைத்ததுபோல ஸ்ரீவைஷ்ணவன் தன்னுடம்பைக்கண்டு இது துன்பத்தை விளைவிக்கத்தக்கது என்றுகருதுவன். ஆதலால் தன்னுடம்பைச்சத்துருவை க்கண்டதுபோலக்கண்டு அது நீங்கும் காலத்தை எதிர்பார்த்துக் கொண் டிருப்பன்.

பிராட்டிக்கு ஏகாக்ஷி ஏககர்ணி முதலிய இராக்ஷஸிகள்போல ஸ்ரீவை ஷ்ணவனுக்கு அஹங்காரமமகாரங்கள். ஏகாக்ஷி முதலியோர் அதட்டியும் வச வுரைபயின்றும் பிராட்டியைத் துன்புறுத்தியதுபோல அஹங்கார மமகாரங் கள் பிறவிக்கு வித்தாய்நின்று துன்பத்திற்குள்ளாக்கும். பிராட்டி இராம பிரானை விட்டுப் பிரிவதற்குத்தோன்றின மாரீசன் போல, ஸ்ரீவைஷ்ண வனுக்கு விரோதியாய்த்தோன்றும் இதரவிஷயத்தின் ஆசை. மாரீசனாகிய மாயமானிடத்தில் வைத்த ஆசை, பிராட்டி இராமபிரானை விட்டுப்பிரிவதற் குக் காரணமாயிருந்ததுபோல இதரவிஷயப்பற்று எம்பெருமானை விட்டுப் பிரிவதற்குக் காரணமாயிருக்கும்.

பிராட்டிக்குத் தன்னைத் துன்புறுத்திய இராக்ஷஸிகளின் ஸம்பந்தம் போல ஸ்ரீவைஷ்ணவனுக்குப் புத்திரமித்ரர்களின் ஸம்பந்தம். பிராட்டிக்குத்

திருவடி (ஹநுமான்) தோற்றரவுபோல ஸ்ரீவைஷ்ணவனுக்கு ஆசார்யதரிசனமாம். பிராட்டிக்கு ஹநுமானுடைகாட்சி நன்மையையுண்டுபண்ணியது போல, ஸ்ரீவைஷ்ணவனுக்கு ஆசார்யதரிசனம் நன்மையைப்பயக்கும். பிராட்டிககுத திருவடியாலுரைக்கப்பெற்ற ராமகுணங்கள்போல ஸ்ரீவைஷ்ணவனுக்கு ஆழ்வார் அருளிசசெயல்கள். திருவடியுரைத்த ராமகுணங்கள் பிராட்டிக்குக்கர்ணாம்ருதமாயும் தாரகமாயுமிருந்தனபோல, ஸ்ரீவைஷ்ணவனுககு அருளிசசெயல்கள் போகயமாயும் தாரகமாயுமிருக்கும. "கேட்டாரார் வானவர்கள் செவிக்கினியசெஞ்சொல்" என்றும், "தொண்டர்க்கமுதுண்ண" என்றும், "பாவினின்னிசைபாடித்திரிவன" என்றும் குறிப்பிடப்பட்ட பிரமாணங்களால் அருளிச்செயல் போக்யமாயும், தாரகமாயுமிருக்குமென்பதறியலாம்.

பிராட்டிக்குத்திருவாழியின் (மோதிரத்தின்) வரவுபோல ஸ்ரீவைஷ்ணவனுக்கு ஆசார்யன் பிரஸாதிதத குருபரம்பரை. பிராட்டிக்குத் திருவாழி எப்படிப்ராப்தமாயிற்றோ அப்படியே ஸ்ரீவைஷ்ணவனுக்கு வாக்யகுருபரம்பரை ஆசார்யனால் ப்ராப்தமாகும். பிராட்டிககுத் திருவாழிபோல ஸ்ரீவைஷ்ணவனுககு ஆசார்யன் ப்ரஸாதித்த திருமந்த்ரம். திருவடியால் கொடுக்கப்பட்ட திருவாழி, பிராட்டிக்குச் சம்சயமகன்று தெளிவுண்டாதற்குக் காரணமாயிருந்ததுபோல, ஆசார்யனுபதேசிக்கப்பெற்ற திருமந்த்ரார்த்த ஜ்ஞானத்தால் ஸ்ரீவைஷ்ணவனுக்கு ஐயமகன்று தெளிவுண்டாகும். பிராட்டி திருவாழியைத் தனதவயவங்களிலொற்றித் தரித்ததுபோல, ஸ்ரீவைஷ்ணவன் ஆசார்யன் அருளிச்செய்த திருமந்த்ரார்த்தாநுஸந்தானஞ்செய்து தரிக்கக்கடவன்.

பிராட்டி இளையபெருமாளை (லக்ஷ்மணனை)க் கோபித்துக்கூறிய வார்த்தையால் ஸ்ரீராமபிரானை விட்டுப் பிரிந்ததுபோல ஸ்ரீவைஷ்ணவனுக்குப் பாகவதாபசாரம். ஸ்ரீவைஷ்ணவனுக்குப் பாகவதாபசாரம் மிகவும் கொடியது. பாகவதாபசாரப் படுவானேல் ஈடேறமாட்டான். பிராட்டிக்கு விரோதியான இராவணாதி ராக்ஷஸர்களையழித்துப் பிராட்டியைத் திருவயோத்திக்கு அழைத்துககொண்டு சென்றதுபோல, ஸ்ரீவைஷ்ணவனுக்கு விரோதியான ப்ரக்ருதி ஸம்பந்தத்தை அறுத்து இவனைப் பரமபதத்திற்சேர்த்து நித்யஸூரிகட்குச் சமமாக நித்யகைங்கர்யத்தைக் கொண்டருள்வன். இதுபோன்ற தத்வார்த்தங்கட்கெல்லாம் ஸ்ரீராமாயணம் ஓர் களஞ்சியமாய் விளங்கும்.

ஸ்ரீ:

நம்பெருமாள் ப்ரஹ்மோத்ஸவச் சிறப்பு.

(o)

(9-ம் திருநாள் மட்டையடி வைபவம்—ஊடல் திறம்).

மாதவன் மேவியதும், ஆழ்வார்கள் ஆதரித்ததுமாகிய நூற்றெட்டு திவ்யதேசங்களுள், திருவரங்கத்தையே தலைநகராகக்கருதி "பெரியகோயில்" என்று வழங்கிவருகின்றனர் அறிஞர்கள் பலரும். இதின்காரணத்தை ஆராயப்புகில் பல்லாயிரவர் பல்லாயிரம் விதமாகக்கூறுவர். தோலாத தனிவீரன் தொழுதவிடம் பற்றியென்பர். சிங்கவேழ்குன்றம் வதரியாச்சிரமம் முதலிய திவ்யதேசங்கள்போலன்றி அடைவதற்கு அதிஸுலபமாயமைந்த பெருமையாலென்பர். "வைகுண்டே ரஜதமந்திரம்" என்கிறபடி பூலோக வைகுண்டமாய்த் திகழ்கின்ற மாட்சிமையாலென்பர். அங்குப்பாம்பணையில் பள்ளிபயில்கின்ற பெரியபெருமாளது புகர்வெள்ளத்தாலென்பர். "லோகநாத நாதநாத:" என்றபடி குழலழகர், வாயழகர், கண்ணழகர், கொப்பூழில் எழில்கமலப்பூவழகராய், நின்ற திருக்கோலமாய் ஸேவை ஸாதிக்கும் அழகுக்காரும ஒவ்வாத அழகியமணவாளப்பெருமாளது அதிஸுந்தர வடிவாலென்பர். அரங்கத்தமலனை யாச்ரயிக்கைக்கு புருஷகாரமாக விளங்கும் பிராட்டிமார்களான "நகஸ்ரீநாவாராத்தி" என்னும் திருமகளாரும்; "குற்றத்தை உணருகிறதென் ? பொறுக்குமித்தனையன்றோ ?" என்னும் மண்மகளாரும்; முதலிலே குற்றம் காணாதபடி ஸ்வபோக்யதையை முன்னிடுவாரான ஆய்மகளாரும்; ஆக பிராட்டிமார்கள் மூவரும் ஒரே ஸந்நிதியிலிருந்து ந்ருத்தம் செய்யும் கௌரவத்தாலென்பர். பதின்மர்களாலும் பாடப்பெற்ற ஒரு தனிப்பெருமையாலென்பர். கோதையை மணந்த குணத்தாலுமென்பர். இவையனைத்தும் திருவரங்கத்தினது சீர்மைக்குத்தக்க வாதாரங்களே யாகிலும் இவற்றிலும் விலக்ஷணமான ஓர் காரணத்தைப் பெரியோர்கள் சாற்றுவர். பரமகாருணிகர்களாய், ஆழ்வார்கள் தஞ்செயலிலும் விஞ்சிநிற்கும் தன்மையர்களான நாதமுனி தொடங்கி மணவாளமாமுனிகள்

ஈருக உள்ள ஆசார்யர்களது அபிமானத்தாலும், நித்யவாஸத்தாலுமே "பெரியோர்க் காட்பட்டக்கால் பெறாத பயன் பெறுமாறு" என்கிற படியே திருவரங்கமும் "பெரியகோயி"லாயிற்று; "திருவரங்கனும்", "பெரியபெருமாள்" ஆயினன்' என்பதை யாவரால் மறுக்கவியலும்?

"செங்கமலப்பூவில் தேனுண்ணும் வண்டேபோல்" என்கிற படியே புஷ்பஹாஸனாகிய பெரியபெருமாளிடத்திலுள்ள போக்யதையை அனுபவிப்பதன் பொருட்டு (வண்டுபோல்) ஷட்பத நிஷ்டர்களாகிய ஆசார்யர்களும் இங்கு மண்டினர்போலும்! பரம ரஸிகர்களாகிய இவர்களது அனுபவமும் பெருக்காறாய்ச்செல்ல, நம்பெருமாளும் "நமக்கு நல்ல வாய்ப்பு" என்று இவர்கள் இஷ்டம்போலெல்லாம் பரிமாற, நித்யவிபூதியை அருளினும் "இந்திரலோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமாநகருளானே" என்னும்படி பட்டர் போல்வார்க்கு மறுக்கும்படியாயிற்று. பட்டருக்கே இப்படியிருக்க, இவரை "பால்யாத் ப்ரப்ருதி ஸுஸ்நிக்த:" என்று பால்யந்தொடங்கி பகவத்விஷயத்தில் ப்ராவண்யத்தை மூட்டி "கண்ணன் நாமமே குழறின"மை கண்டு மகிழ்ந்தவரும், "பொன்னரங்கமென்னில் மயலே பெருகும்" இராமானுசன் படியை அளவிடவியலுமோ? "ஒழிவில்காலமெல்லாம் உடனாய்மன்னி வழுவிலாவடிமை செய்யும்" திருவனந்தாழ்வானாய் அனுபவிப்பதும், "காமயே த்வடாவிநா" என்று இளையபெருமாளாய்ச் சக்ரவர்த்தித்திருமகனாரை அனுபவித்ததும், நம்பி மூத்தபிரானாய் நந்தன் மதலையை அனுபவித்ததும் போதாதென, மீளவும் அழகியமணவாளனை யனுபவிப்பதன் பொருட்டே உடையவராய் அவதரித்தனர். ஸ்ரீபெரும்பூதூரில் அவதரித்தும், கச்சிக்கு வாய்த்த பேரருளாளன் பெருங்கருணைக் கிலக்காகிச் சிலநாள் திருமஞ்சனக் கைங்கர்யம் இயற்றிப்போந்தும், இறுதியில் ஆயுட்காலந்தனையும் அரங்கனையன்றே மண்டியனுபவித்து மகிழ்ந்தனர்.

இங்கு அழகியமணவாளனபக்கல் ஆதரம் செய்த ஆசார்யர்களது அனுபவப்பெருக்குகளைச் சற்றுக்காட்ட வமையும்:—

'நமக்கிவையெல்லாமிங்கே காணலாமிறே—சாய்ந்தருளின வழகு பெரியபெருமாள் பக்கலிலே காணலாம்; நின்றருளின வழகு நம்பெரு

மாள் பக்கலிலே காணலாம்; இருப்பிலுண்டான வழகு பெரியபிராட்டியார் பக்கலிலே காணலாம்" என்று பட்டர் அருளிச்செய்வர். திருப்பாவை "மாரிமலைமுழைஞ்சு" வ்யாக்யானத்தில் "போந்தருளி" என் பதற்கு 'சதுர்கதியிறே-நமக்கு இவையெல்லாம் நம்பெருமாள் நடையழகிலே காணலாம்" என்று பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்துள்ளார். திருவிருத்தம் "சூட்டுநன்மாலைகள்" பாசுரத்தில் "நன்னீராட்டி" என்னுமிடத்தில் "காமவர்யரைப்போலே அழுக்குக்கழலக் குளிக்கை யன்றியே, அங்குள்ளார்க்கு (பரமபத வாஸிகளுக்கு) உஜ்ஜீவனமாக நாவேராழக்குளிக்கும் குளியாயிற்று. நம்பெருமாள் திருமஞ்சனம் செய்தருளுமாப்போலே" என்று ஸ்ரீ நம்பிள்ளை வ்யாக்யானம் பண்ணியுள்ளார். திருமாலையில் "கனியிருந்தனைசெவ்வாய் கண்ணனைக் கண்டகண்கள்" என்னுமிடத்தில் "கண்ணன்" என்பதற்கு பெரியபெருமாளைத் திருவடி தொழுதால் அவதாரத்தில் பிற்பாடர்க்கும் உதவுகைக்காக க்ருஷ்ணன் வந்து கண்வளர்ந்தருளுகிறான் என்று ஸ்மரிக்கும்படியாய்த்து இருப்பது" என்று பெரியவாச்சான்பிள்ளை ஸாதித்துள்ளார். இங்கு "யசோதைப்பிராட்டி பிள்ளைமனங்கன்றாமல் தீம்பிலே கைவளரும்படி வளர்த்த மொசுமொசுப்பெல்லாம் தோற்றியிருக்கும் பெரியபெருமாளைக்கண்டால்; வஸிஷ்டாதிகளாலே ஸுசிக்ஷிதராய் வார்ந்து வடிந்த விநயமெல்லாம் தோற்றும்படியான சக்ரவர்த்தித்திருமகனை ஸ்மரிக்கலாம்படியாயிருக்கும் நம்பெருமாளைக் கண்டால்" என்று பட்டர் ஈடுபடுவராம். திருவிருத்தம் "நிறமுயர் கோலமும் பேரும்" என்கிற பாசுரத்தில் "பேரும்" என்றவிடத்தில் ஓர் ஐதிஹ்யமுளது:—"திருமலைநம்பி அந்திமதசையிலே கணியனூர் சிறியாத்தானை, 'பிள்ளை (பட்டர்) தமக்கு தஞ்சமாக நினைத்திருக்கும் திருநாமமென்? அத்தைச் சொல்லவேணும்' என்ன; 'இவர் முன்னே நாமெத்தைச் சொல்வது' என்று கூசியிராநிற்க; 'தாசரதீ! பேசாதிருக்கும் அவஸ்தையன்று காணிது' என்ன; 'நாராயணாதி நாமங்களும் சொல்லிப்போருவர், ஆகிலும் விரும்பியிருப்பது அழகியமணவாளப்பெருமாள் திருநாமத்தை' என்ன; 'பர்த்ரு நாமத்தோபாதியாயிராநின்றது, ஆகிலும் பிள்ளை நினைத்திருந்தது போக்கித்தஞ்சமில்லை' என்று 'அழகியமணவாளப்பெருமாளே சரணம்' என்று திருநாட்டுக்கு

நடத்தார். பின்னும், ஆளவந்தார் மகனார் சொட்டைநம்பி அந்திம தசையிலே முதலிகளடையப்புக்கிருந்து "நீர் நினைத்துக்கிடக்கிற தென்" என்ன, "ஸ்ரீவைகுண்டத்திலே சென்றால் நம்பெருமாளு டைய குளிர்ந்த முகம்போலே ஸ்ரீவைகுண்டநாதன் முகம் குளிர்ந்த தில்லையாகில் முறித்துக்கொண்டிங்கேற ஓடிப்போருமித்தனை என்று கிடக்கிறேன்" என்றார்.

இவ்வண்ணம் ஆசார்யர்கள் அனைவரும் அழகியமணவாளன் ஒரு வனையே மண்டியனுபவித்தனர் என்பதிலிருந்து அர்ச்சாவதாரபூர்த்தி 108 திவ்யதேசங்களைக்காட்டிலும் இங்குத்தான்சூடிகொண்டிருக்கின் றது என்பது தெளிவாக விளங்கும். இதையொட்டியே பிள்ளை உலகா சிரியனும் அர்ச்சாவதாரத்தை வர்ணிக்கப்புக்கு "இதுதான் பரவ்யூஹ விபவங்கள் போலன்றிக்கே கண்ணாலே காணலாம்படியிருக்கும். இவை யெல்லாம் நமக்கு நம்பெருமாள் பக்கலிலே காணலாம். ரக்ஷகத்வ, போக்யத்வங்களிரண்டும் திருமேனியிலே தோற்றும்" என்று நம் பெருமாளை அர்ச்சாவதாரபூர்த்திக்கு பொருத்தம் தோற்ற எடுத்துள் ளார். ஆதலால் எவ்விதத்திலும் குறைவற்றிலங்கும் நம்பெருமாளை அனுபவிப்பதற்கு மொய்த்துக்கொண்டனர் பலரும். நம்இராமானுச னும் "வாளும் வில்லும்கொண்டு பின்செல்வார் மற்றில்லை" என்று உருகிய ஆழ்வார் திருவுள்ளத்தை யறிந்தவராதலால், திருவரங்கன் திருமேனிக்குப் பாங்காக அனைத்துவித கைங்கர்யங்களையும் திட்டம் செய்து, "இராமானுசாரியன் நியமனம் மாறாதுகொண்ட பெருமாள்" என்று அறையர் இசைகொண்டு ஏத்துமபடியான பெருமையும் பெற்று, அழகியமணவாளனை தன் மனம் மகிழ மண்டி அனுபவித்து வந்தனர். அவர் அனேகவிதமாக அவனை அனுபவித்தவைகளில் ஒன்றாகிய ஊடல் திறம் என்பதைப்பற்றி இங்கு விரித்துரைப்போம்.

நாயகனுக்கும் நாயகிக்கும் ஏற்படும் கலவிக்கு ஸம்ஸ்லேஷ மெனப்படும். அவர்களது பிரிவுக்கு விஸ்லேஷமெனப்படும். இவ்விரு தசைகளும் முறைமுறையே மாறிமாறி வரும். நாயகனது கலவியால் நாயகிக்கு உன்மஸ்தகரஸம் தலையெடுக்கும் இது தலையெடுத்தால் நாயகிக்கு தரிக்க வரிதாகும். அது ஸாத்மித்து அவள் தரிக்கைக்காக

நாயகன் பிரிவன். உடனே அவள் விஶ்லேஷ துக்கம் ஸஹியாது "எங்ஙனேயோ அன்னைமீர்காள் என்னை முனிவது நீர்" ... "அங்கிவள்தன் சிறையோ இனியுன் திருவருளாலன்றிக் காப்பரிது" என்னும்படி அவனல்லது தரியாதவளாய் மோஹித்துக் கிடப்பள். சிற்சில ஸமயங்களில் மோஹம் தீர்ந்து அவனைக் காணளாகில் ப்ரணய ரோஷம் தலையெடுக்கும். அவன் தீம்பனென்றும், வேண்டுமெனவே தன்னைப்பிரிந்து மின்னிடைமடவார்களான பலருடன் ஸம்ஶ்லேஷிக்கச்சென்றனன் என்றும் ஸம்ஶயித்து அவன் வந்தவாறே சிலாய்க்கத் துடங்குவள். இவ்வண்ணம் விஶ்லேஷத்தால் ப்ரணயரோஷம் தலையெடுத்த நாயகி, தன் நாயகனைச் சிலாய்ப்பதற்கு ஊடல்திறம் எனப்படும். இது கண்டவாறே அவன் தன் நாயகியின் துக்கத்தை எவ்வண்ணமாவது ஶாந்தித்துக் கூடுவன்.

இம்மாதிரியான ஸம்ஶ்லேஷ விஶ்லேஷ தசைகளையும், ப்ரணய ரோஷத்தையும், அதில் இருவர்க்குமுண்டான ரோஷப் பேச்சுக்களையும், நம் ஆசார்யர்கள் ஜகந்நாதன், ஜகந்நாயகிகளாகிய பெரியபெருமாள் பெரிய பிராட்டியாராகிய இருவர்கள் பக்கலிலுமிட்டு அனுபவித்துப் போருவர்கள். ஊடல்-திறம் ராமக்ருஷ்ணாத்யவதாரங்களில் (முக்யமாக க்ருஷ்ணாவதாரத்தில்) நன்கு ப்ரஸித்தம். அவாப்தஸமஸ்தகாமன் ஓர் அபலையை எவ்விதத்திலும் தன்னுடன் சேரவிட்டுக்கொள்ள வேணுமென்று ஸங்கல்பித்தானாய், அவள் ப்ரணயரோஷத்தால் பேசும் அல்பமான பேச்சுகளையும் ஸஹித்துக்கொண்டு, தன் மேன்மையையும் பாராதே அவள் காலைக்கையைப்பிடித்து, அவள் காலையெடுத்துத் தன் தலைமேலே வைத்துக்கொள்வது. அடியேனென்பது, வாயது விரல்-மார்பத்தெழுத்தென்பது—முதலான தாழ்ந்த செயல்களைச் செய்வதும், அவள் இவன் வார்த்தைகளையும் செயல்களையும் சற்றும் நம்பாது அவனைத்திரஸ்கரிப்பதும், மீண்டும் அவன் தாழ்ந்து பரிமாறுவதும், பின்னர் இவள் வேறு வழியில்லாது மனமிரங்கி "நின்றன்னால் என்றும் நலிவே படுவோம்" என்று அவனை அங்கீகரிப்பதும் க்ருஷ்ணாவதாரத்தில் நன்கு விளங்கும். இவ்வண்ணம் கூடுவதும், பிரிவதும், ஊடுவதும், மீண்டும் கூடுவதுமான செயல்கள் அந்தரங்ககாலத்தில் ரஸகரமான நிகழ்ச்சிகள்.

ஸ்ரீ ராமாயணத்திலும், பிராட்டி தன் நாயகன் பிரிவு ஸஹியாத ப்ரணயரோஷம் தலையெடுத்துப் பேசினவைகளை நன்கு காணலாம். கூற்றுத்தாய் சொல்லக் கொடியவனமேக விசைந்த கோதண்டராமன், மைதிலியை பர்ணசாலையிலேயே விட்டுச் செல்வேமென மதித்து, அவளிடம் செய்திகூற, மைதிலியும் தனக்கவருடன் உண்டான சிர பரிசயத்தாலும், கலவியாலும், பெருமாள் பிரிந்தாராகில் வரும் பிரிவு பொறுக்கமாட்டாமையாலே ப்ரணயரோஷம் மேலிட்டு பெருமாளு டன் வார்த்தை சொல்வாளானாள்:—

"கிம் த்வாமந்யத வைதேஹ: பிதா மே மிதிலாதிப: ।
ராம ஜாமாதரம் ப்ராப்ய ஸ்த்ரியம் புருஷவிக்ரஹம் ॥

"வாரீர், என்னை ஒருத்தியையும் நோக்கமாட்டாமையே? வைத்துப் பொகடுகிறது. இது தன்னை எங்களய்யர் கேட்கில் போர வெறுப்பர். ஒரு பெண்டாட்டி ஆணுடையுடுத்து என் மகளைக் கைப்பிடித்துக் கொண்டுபோன வித்தனையாகாதே என்றிராமே கடுகக்கொண்டு போகப்பாரும்"—(ஈடு)

ஸம்ஶ்லிஷ்டாம் ரோஷ ப்ரஹ்ருஷ்டஸ்ய ஸ்நேஹஶோகவிவர்த்திதம் ।
நபரம் வீர விஸ்ருஷ்ட: பாபம் மயி ந வித்யதே ॥

"பிறருயர்த்திகண்டால் பொறுக்க வேண்டாவோ? நான் உம் மோடே கூடப்போக என்று புறப்பட்டு நாலடியிட்டால் எனக்குத் தால் வருமேற்றக்கண்டு பொறுக்கமாட்டாமையாலுண்டான கோபா ஸூயைகளைப் பொகடும். இதுவுமப்படியாகாதேதான் ப்ரணயினிகள் கோஷ்டியில் இங்ஙனேகாணும் பரிமாற்றம். ப்ரணயினிகளுக்குண் டான தன்னேற்றம் தன்னதாயிருக்கவேண்டாவோ? என்னை யறியா தாய்போலே உம்மையும் யறிந்திலீராகில் நான் சொல்லக்கேளும். தந் தாமை அறியாவிட்டால் ஆப்தர்வாயிலே கேட்டறிய வேணுங்காணும். பொகடும், இங்ஙனன்றாகில், நீரென்னை இங்ஙனே நிறுத்திப்போனால் நீர் மீண்டுவருந்தனையும் தரிக்கைக்கு வேண்டும் ஹேது எனக்கில்லை காணும். ஆகையால் என்னைக் கொடுபோகப் பாரும்"—(ஈடு).

இவ்வார்த்தைகளனைத்தும் பெருமாளுக்கெதிராகவே சொன்ன வைகள். இன்னும் அவர் ஏவவிட்ட ஆளிடம் (சிறியதிருவடியிடம்) சொல்லியவையும் சிலவுண்டு:—

கச்சிந்ந ஸ்ருஶம்ஸ: காகுத்ஸ்த: கிம்நு ஸாகரமேகலாம் ।
மஹீம் தஹதி கோபேந யுகாந்தாக்நிரிவோத்தித: ॥

''வாரீர் திருவடி! பிறர் பரிபவம் பொறாத ககுஸ்தவம்சத்தில் தான் பிறந்தும், கடலில்-நீரை நெய்யாக எரிக்கவல்ல அம்பையுடையவராயி ருந்தும், யுகாந்தத்தில்—கோபாக்னிபோலே சீறி, ஸமுத்ரத்தை ஒட் டியாணமாகவுடைய பூமியை என்பொருட்டு இன்னும் தஹியாதிருக் கிறாரா? ஸௌக்யமாயிருக்கிறாரா? பிறர்க்கு வந்தவை பரிஹரிக்கு மல்லது, தமக்கு வந்தது பரிஹரிக்கலாகாது என்றிருக்கிறாரா?

''பித்ருர்நிதேஶாத்து ஜகதஶ்ச ராஜ்யம் ஹித்வா அரண்யம் நயத: ஸஹாதீம்'' என்கிறபடியே பிதுர் வசன பரிபாலனம் பண்ணப்போந்தா ரோ? என்னை நலிகைக்குப் போந்தாரத்தனை''. பிதுர் வசன பரிபால னம் பண்ணிப்போந்தார் என்றன்றோ பெருமாள் உங்கள் கோஷ்டியி லே ப்ரஸித்தமாயிருப்பது. இப்போது அங்ஙனன்றுகாண்; தம்மை விஸ்வஸித்துக் கைக்கொடுத்தவென்னை விடுகைக்காகக்காண். ''ரக்ஷி தா ஜீவலோகஸ்ய'' என்கிறதையும் விட்டாரன்றோ? '' (பெரியவாச் சான்பிள்ளை வியாக்யானம்). இவ்வண்ணம் பிராட்டி ஊடிய ஊடலும் பெருமாள் ஒவ்வொரு ஸமயமும் தாழ்ந்தே பரிமாறி அவளுடன் மீண் டும் கூடினர்.

நம் ஆழ்வார்களுக்கும் அரங்கனிடம், ஆழங்காற்பட்ட பாவபந் தப் பெருக்கினால் பிராட்டி தசை ப்ராப்தமாய் அதில் கண்ணனுடன் கலவியும், பிரிவும், ப்ரணயகலகமும், மீண்டும் கலவியும், ஸஹஜமாக நிகழும். நம்மாழ்வாரது ''மின்னிடை மடவார்'' என்கிற திருவாய் மொழியும், திருமங்கையாழ்வாரது ''காதில் கடிப்பு'' என்கிற திரு மொழியும், குலசேகராழ்வாரது ''ஏர்மலர்ப்பூங்குழல்'' என்கிற திரு மொழியும் முறையே இம்மூவர்களும் பிராட்டி பேச்சாலே பேசும் ப்ரணயரோஷப்பேச்சுக்கள். இதில் ஓர் அதிசயம் யாதெனில் இம்

மூவரது சொற்களும் மூன்று வகைகளாகக்கிடக்கின்றன. "நம்மாழ்வார் பகவத்விஷயத்தில் நின்ற ஊரெல்லாம் தோற்ற வன்மையுடைத்தாயிருக்கும் மின்னிடைவார்; திருமங்கையாழ்வார் தமமார்த்வமெல்லாம் தோற்ற மௌனமையுடைத்தாயிருக்கும் காதில் கடிப்பு; குலசேகராழ்வார் தம்முடைய ராஜகுலமெல்லாம் தோற்றியிருக்கும "ஏர்மலர்ப் பூங்குழல்".

இவைகள் இவ்வண்ணமாயின், பராங்குசநாயகி; பரகாலநாயகி, குலசேகர நாயகிகளாகிய இம்மூவர்களது ஊடல் வகைகளை சற்று கவனித்தற்பலது.

பராங்குசநாயகி கண்ணன் வந்து கலவாமையாலே "மாசறு சோதி" தொடங்கி பேர நோவுபட்டு, அது தன்னை "வைகல்பூங்கழிவாய்" அளவும் வரப்பாடாற்றி, பின்னும் அவன் முகங்காட்டாமையாலே "வைகல் பூங்கழிவாயில் தூதுவிட்டு, தூதவாக்யம் அவன் செவிக்கெட்டுமுன்னமே அறப்பதறி, ஆற்றாமையோடு கிடந்தனள். உடனே ப்ரணயரோஷம தலையெடுததது. "அவன் வரினும், நம்மை இன்னமொருகால் கலந்து, பின்னர் பிரிந்து முடிப்பானத்தனை இனி அவன் வந்தாலும் முகங்காட்டுதல, வார்த்தைசொல்லுதல் முதலியன செய்யோம்" என்று ஸங்கல்பித்தனள். அவனறியாதோரிடத்தே போயிருக்கக்கோலி, தாயாம்பொழிலாய், அதிலே விளையாடு குழலாய் அதின் நடுவே அதிமனோகரமாயிருப்பதொரு மண்டபமாய், அதில் தானும் தன் தோழிமார்களும, கழகமாகவிருந்து; அவன் வந்தாலும் இட்டுக்கொள்ளுகைக்கு அரிதாமபடி பூவை, கிளி, முதலிய சேதனாசேதன லீலோபகாரணங்களை ஓரிடத்தே சேமித்து; இனி இவர்கள் ஏதேனும் மறந்துவிட்டுச் சென்றிருந்தார்களாகில் அதுகொண்டு அவன் ஸத்தை நிலைபெறும்படியாய்; அவன் வந்தால் உள்ளேபுக அரிதாம்படி கன்மதிளை உரக்கவிட்டு; இவ்வண்ணம் அவன் சர்வக்ஞத்வ ஸர்வஸக்தித்வங்கள் கொண்டு கார்யங்கொள்ள முடியாதபடியாய்; ஹிரண்யாதிகள் கோஷ்டியில் திருநாமம் சொல்லுகை அஸஹ்யமாமாபோலே, இவர்கள் கோஷ்டியிலும் உகவைதலைமண்டையிட்டபடியால், திருநாமம் சொல்லில் நெஞ்சு பிளக்கும்படியாய் வன்மையுடைய ப்ரணயரோஷத்துடன் இருந்தனள்.

இனி அவன்தானும் இவள் ஆர்த்தநாதத்தைச்செவியுற்றனன். ப்ரஹ்லாதன் இடர்களைய வாளுகிர்ச்சிங்கவுருவாய் சடக்கென வளர்ந்திட்டாப்போலவும்; பதகமுதலைவாய்ப்பட்ட களிறு கதறிக்கைகூப்பி 'என் கண்ணா! கண்ணா!' வென்ற, ஆர்த்தநாதம் செவிப்பட்டவாறே "த்வராயை நம:" என்று அறிவுடையார் (பட்டர்) ஈடுபடும்படி வந்தாப்போலவும்; த்ரௌபதியைத் துஸ்ஸாஸனன் நலிய, ரக்ஷகராகப் பிரஸித்தரான பர்த்தாக்கள் அருகிலிருக்க, "கோவிந்தேதி" என்று தன்னை—ஒருவனையே ரக்ஷகனாக நினைத்து அவள் அழைத்ததற்கு, "ருணம் ப்ரவ்ருத்தம்" என்கிறபடியே மிகவும் நொந்து, ஸைத்துனன்மார் காதலியை மயிர் முடிப்பித்து அவர்களையே மன்னராக்கி, மருமகன் தன் ஸந்ததியை உயிர்மீட்டு, விரோதிவர்க்கத்தைக் கிழங்கெடுத்து, "நாதி ஸ்வஸ்தமநா:" என்று புண்பட்டாப்போலும்; சாதல்பரான ஸ்ரீ பீஷ்மர்க்கு முற்பாடராகாது பிற்பாடராயன்றோ உதவப்பெற்றோம் என்று க்லேஶித்தாப்போலவும்; தண்டகாரண்ய வாஸிகளாகிய ருஷிகள் "தேநதேந கதா:" என்று தன் முற்பாட்டைக்கண்டு அநுவர்த்திக்குமவர்கள் முற்பாடராம்படி நாம் பிற்படுவதே என்று நொந்தாப்போலவும்; இவ்வண்ணம் "வ்யஸநேஷு மநுஷ்யாணாம்" என்று அவன் அன்யத்திலிருந்தால், ப்ரணயினி பக்கல் சொல்லவேண்டுவதில்லை. தான் கிட்டிநின்று கையைக் காலைப்பிடிக்கவேண்டும் விஷயத்தை ஓர் திர்யக்கின் காலில் விழச்செய்து பிற்பாடரானதற்குப் போர வருந்தி, இனித்தான் தன் ப்ரணயினியாகிய பராங்குசநாயகியுடன் கலந்தல்லது ஜீவித்தலரிது என்று பதறி வந்தனன். இவள் ப்ரணயரோஷத்துடனிருக்கும் ஸ்திதியை அறிந்தவாறே எவ்வண்ணம் இதை ஸமித்து இவளுடன் கலப்பது என ஏங்கினன். ஸௌந்தர்யமும் பலமும் கொண்டு இங்குக் கார்யங்கொள்ள வமையாதாகையால், தாழ்ச்சியே யமையுமென்று எண்ணினன். "ஒருபடி பொருந்தினோமாகோம் கிரகென்" என்று கடல் கடந்த திருவடி பட்ட வ்யாகுலத்திற்கு "ராமே ப்ரமாதயேத் நார்" என்கிற உபாயம் உண்டு இவனுக்கு அதுவுமில்லாமையாலே "வஸவம் வஸந்விஷாம் விநாம்" என்கிறபடியே மனோரதித்தானும் "நம் தலையும் அவர்கள் காலும் கிடந்ததாகில் காலைக்கட்டிப் பொருத்திக்

கொள்ளுகிறோம்'' என்று அறுதியிட்டனன். அதுவும், அவர்கள் இவனை நோக்கொழிய ஸாத்யமல்லாமையாலே, ஆற்றாமை மிக்கு, கால் தரையில் பாவாது நடந்துவருகையில், இவர்கள் மறந்து விட்டுப்போன பந்தும கழலும் இவன் அத்ருஷ்டததாலே இவன் காலில் தட்டுப்பட, ''இருட்டறையில் தடவிக்கொண்டு வாரா நின்றால் உறியும்வெண்ணெயும் கையிலே தாக்கினால் ஸந்துஷ்டனுமாபபோலே,'' ஹ்ருஷ்டனாய், 'மேல்விழுந்து பந்தையும் கழலையும் எடுத்து, பராங்குச நாயகி விஷயத்தில் பண்ணும் வ்யாமோஹபடங்களும் அதிலே தோற்றும்படி, அதைக்கண்ணிலே ஒற்றிக்கொள்வது, தலையிலே வைத்துக் கொள்வது முதலான வ்யாபாரங்களெல்லாம், பிராட்டி திருவாழி மோதிரங்கண்டு பட்டதுபோலே பட்டான்.

பராங்குச நாயகியும் தோழிமாரும் இதைக்கண்ணுற்றவாறே, 'இவன் நம்மைப் பிரிந்து மின்னிடை மடவார்களான வேறு சில ரோடே கலந்து, அவர்களையும் பிரிந்தானுகையால், அப்பிரிவு ஸஹிக்க மாட்டாதே இந்தப்பந்தையும் கழலையும் அவர்களது என நினைத்து வ்யாமோஹத்தை செய்கிறானத்தனை; நம்பொருட்டல்ல'' என்று நினைத்தார்கள். தங்கள் ஸங்கல்பத்தையும் மறந்து இனி இவனுடன் வார்த்தை சொல்லாதிருக்கிறதென் என்று பேசத்துடங்கினர்.

நாயகி:—''வாராய் நம்பி! நீ நினைக்கிறபடி உன்னருளையே நோக்கியிருக்கும் மின்னிடை மடவார்களதன்று அவைகள். நின் க்ருத்ரிம லீலைகளனைத்தும் யாம் அறிவோம். எங்கள் பந்தையும் கழலையும் தந்து அவர்கள் பக்கலேறப் போவாய்.''

நோக்குப் பெறுதவன முகம் பார்க்கப்பெற்றதாலும், வார்த்தை கேட்கப்பெறுதவன் ''போ'' என்றாகிலும் சொல்லப்பெற்றானுகையாலே இதையே பெறுப்பேறுக நினைந்து அவ்விடத்திலேயே நின்றனன். இவன் எங்கும் செல்லாது அங்கேயே நிற்கையைக்கண்டு மீண்டும் ஆரம்பித்தனர்.

நாயகி:— ''தோகைமாமயிலார்கள் அங்கு நின்னருள் பெறக்காத்திருப்பர் இங்கு நிற்கவல்லையோ, போவாய்''.

கண்ணன்:—"அதற்கு விரகென்? அறிவிப்பீர்".

நாயகி:—"பசுக்களை விட்டுக் குழலூதுவாய். அறியாதார் பசுக்களை மறிக்க ஊதினான் என்றிருப்பார்கள். அறிந்து போரும் பெண்கள் உன் பக்கலில் வந்து கிட்டுவார்கள்."

தீம்பனுகையாலே குழலூது என்றவாறே அங்கிருந்தே குழலூதப் புக்கான்.

நாயகி:—'போயிருந்து குழலூது என்றால் இங்கிருந்தே செய்கின் றனை. நின் திருவருளை நோக்கித் துடிக்கும் வேயிருந்தடந் தோளினார்கள் பக்கல் செல்வாய்; இங்கிருந்து தீங்குழலூதி; எங்களை நலியாதேகொள். போயிருந்து நின் புள்ளுவம் அறியாதவர்க்கு உரை நம்பீ".

கண்ணன்:—பித்ராதிகளுக்குப் பரதந்த்ரனானவென்னை நீங்கள் கடிதல் அழகோ, கையில் கோலைத்தந்து பசு மேய்த்து வாவென்றால் மாட்டேனென்னப்போமோ".

நாயகி:—பசுமேய்க்கும்படி இதுதான் போலும்! நீ செய்யும் செயல் ஒத்திருந்தாலன்றோ, நீ சொல்லும் சொலவும் சேர்ந்திருப் பது".

கண்ணன்:— "நிஸ்நேகிகளுக்குக் குணங்களெல்லாம் குற்றமாகத் தோற்றுமாதலால் நான் செய்வதெல்லாம் நீங்கள் வெறுக்கின் றீர்கள்".

நாயகி:—"நம்பீ! நின் கைதவம் மண்ணும் விண்ணும் நன்கறியும். நின் மழறுதேன் மொழியார்கள் நின் பிரிவாற்றாது அங்கு வாடுகின்றனர். நீ அவர்களதாக ப்ரமிக்கும் எம் குழறு பூவை யோடும், கிளியோடும்குழகேல்; எங்களோடும் கழறேல்மின்".

இவ்வாறு இவர்கள் வார்த்தையாடுகையில் கண்ணனும் சடக்கெனச் சென்று அவர்கள் லீலோபகரணமான குழமணனை எடுத்துக்கொண் டனன். சடக்கென கழகத்தில் இவன் புகுரவே "கழகமேறேல்

நம்பி" என்று வெருட்டினர். இவ்வண்ணம் எவ்வகையிலும் தங்களை அணுகவொட்டாரர்களாய், பாராங்குச நாயகி முதலானோர் இருக்க, திருமாலும் தடுமாறினனாய் "இனிச்செய்வதென்" என்று பார்த்து இவர்கள் பாவையைப் பறிப்பது என்று எண்ணினன். இவன் கண்ணுக்கிலிருந்தே இவன் சித்தத்தை அவர்கள் அறிந்தனராதலால், சடக்கெனச் சென்று, எல்லோரும் ஏக காலத்திம் பாவையைக் கைப்பற்றினர். திருக்குரவைபோலே தனித்தனியேசென்று கைப்பிடிக்க வேண்டாதபடி இதுவே நல்ல வாய்ப்பாகவே, ஓடிச்சென்று தானும் அவர்கள் கைப்பற்றியுள்ள பாவையைப்பற்றி வன்மையே சொல்லி விளையாடினன். அவர்கள் இச்செய்கையை வெறுத்து "நின்மலா, நெடியாய், உனக்கேலும் பிழை பிழையே. எங்கள் கையில் பாவை பறிப்பது கன்மமன்று. எங்கள் அன்னைமார் அறியில் உனக்கு தடிபிணக்கு ஸித்தம்" என்று கோபித்தனர். ஓர் ஸர்வஸக்தி இங்ஙனம் நான்கு இடைப்பெண்களிடையே "போகு" என்றும், "கழக மேறேல்" என்றும், "ஒரு நான்று தடிப்பிணக்கே" என்றும் அவமதிக்கப்பட்டும், இவர்களையன்றித்தரியாதானாய்அவன்நிற்பது "என்ன ஸௌஶீல்யம்" என்று பட்டர் ஈடுபடும்படியாயிருந்தது. அனந்தரம், கண்ணனது முகவெளி அபலைகளை வென்று ஆட்கொள்ளாதுவிடுமோ? பராங்குச நாயகியும், தோழிகளும், தங்களது வன்மையான ப்ரணய ரோஷமும் தீர்ந்து, கண்ணனைச்சேர விட்டுக்கொண்டனர்.

பரகால நாயகியின் ஊடலை கவனிக்கில் மார்த்தவம் (ருதுவான ஸ்வாபம்) உடையதாயிருக்கும், "நந்தன் பெற்ற மதலை அண்ணலிலைக் குழலூதி நம் சேரிக்கே அல்லில்தான் வந்த பின்னை, கண்மலர் சோர்ந்து, முலைவந்துவிம்மி கமலச்செவ்வாய் வெளுப்ப, என்மகள் வண்ணமிருக்கின்றவா நங்காய்" என்கிறபடியே பலகால நாயகி வைவர்ணயப்பட்டுக்கிடக்க; "அங்ஙனம் தீமைகள் செய்வார்களோ நம்பி" என்று தாய்மார்களும் கண்ணனது தீமைகளுக்கிணங்க; இருவர்க்கும் ஸம்ஶ்லேஷம் நேர்ந்தது. உன்மைஸ்தகரஸம் தலையெடுத்து கண்டு, அது ஸாத்மிக்கைக்காக அவன் பிரிந்தனன். பரகாலநாயகி பிரிவு ஸஹியாதாளாய் ப்ரணயரோஷம் தலையெடுத்துத் தன் மார்த்தவமெல்லாம் தோற்ற ஊடுவதாம்படியானாள்—"காதில் கடிப்பு" என்கிற திரு

மொழியில். ஊடலில் மார்த்தவமென்னென்னில், பராங்குசநாயகி போன்று "போகு நம்பீ" என்றும், "கழகமேறேல் நம்பீ" என்றும், "ஒரு நான்று தடிப்பிணக்கே" என்றும், வெருகடி மாய்ப்பேசாது, "என்னிது! என்னிது! என்னோ' என்று வெகும்ருதுவான வார்த்தையால் அவன் சேஷ்டிதங்களை வெறுப்பதே.

கண்ணன் காதில் கடிப்பிட்டு, உடைவாய்ப்பிலே நெஞ்சு பிணிப்புண்ணும்படி உயர்ந்த உடையையுடுத்து, கண்ணுக்கு ஆகர்ஷகமாக பரிமளத்துடன் கூடிய துழாய் மாலையை யணிந்து, குறித்த காலத்தைத் தப்பி, நாயகியை நெருங்குகையில் தன் பரபரப்புத்தோற்ற ஓரடியிலே பத்தடியிட்டு வந்தனன். நாயகியும் கண்ணனது புதிய வேஷத்தைக்கண்டவாறே, "இப்மாயங்களை யான் அறிவன். இருந்தபடியே உகக்கிறவெங்களுக்கு இவ்வலங்காரங்கள் காணவேண்டுமோ? புதியவர்களை மனமழிக்கைக்காக வன்றோ விது. இங்கு வருவதேன்?" என்றனள். தன் வடிவழகில் ஈடுபடாதது கண்டு, பின்னையும் நின்ற நிலையிலேயே வேறொரு வடிவுகொண்டு, அவள் உள்ளே உள்ளேயோடும்படி, மெள்ள மெள்ள கதவின் பக்கமாக நெருங்கினன். இதுகண்டு ஸஹியாதாளாய் "அன்யபரதை பாவித்து வரவேணுமோ? கதவிற்குப் புறம்பே நிற்கவேணுமோ! தள்ளவும் போகாதொழிய வேணுமோ?" என்றனள். கண்ணனும் தீம்பிலே வளர்ந்தவனாகையாலே அவள் வார்த்தைகளை கவனியாதுபோல் பாவித்து, வாசற்படியில் அடியிட்டவாறே சில பண்களைப்பாடினன். நாயகியும் கோபித்து "கருளக்கொடியொன்றுடையீர் என்னும்படி ப்ரஸித்தராயிருப்பார் அப்ரஸித்தரைப் போலே பண்ணை நனுங்கிக்கொண்டு வரவேணுமோ? ராத்ரியிலே வரக்கடவதோ?" என்று மேன்மையாகக் கடிந்தனள். அவனும் "உன்னையல்லது வேறொருவரையும் அறியேன்" என்றியம்பியவண்ணம் பின்னும் பாடத்தொடங்க, பரகாலநாயகி பொறாதாளாய் "பூர்ணராயிருப்பார் அபூர்ணரைப்போலே வரக்கடவதோ? கலக்கவருவார் அப்ரஸித்தமாகவன்றோ வருவது; அரணழித்து வரவேணுமோ?" என்று கோபித்தனள். பாவைபண்ணில் மயங்காதது கண்டு, திருக்குழல் கற்றையைப்பேணாது, உடைவாளைத் தரித்துக்கொண்டு, ஆபரணங்கள் பூண்டு, முற்றத்துள்ளே புகுந்து "இவ்வளவு தூரம் புகப்

பெற்றேமே!" என்று க்ருதார்த்தனைச் சிறுபிள்ளைப்பருவம் தோற்ற, முறுவல்செய்து நின்றனன். இஃதும் அவளுக்கு வெறுப்புக்குக் காரணமாயிற்று. "ஶாவஶாநாய" என்னும்படியே தன் குணம் காணுதாரையெல்லாம் வணங்கப்பண்ணுமது வில்லாகையால், தனுஸ்ஸைக் கையில் தாங்கி, போவார் வருவாரையும் கவனியாது, மீண்டும் உள்ளே புகுந்தனன்.

பரகாலநாயகி:—"வாரீர், உமக்கு முன்னடி தோற்றுதோ? இருந்தாரையும் போனரையும் தெரியாதொழிய வேணுமோ? பழிவிலைக்கைக்கு வேண்டுவதெல்லாமன்றே உளது. வ்யதிரேகத்தில் முடிவார்க்கன்றே நீர் உதவுவது. ப்ரணயினியக்கல் ஆயுதத்தோடு வரவேணுமோ?

கண்ணன்:—"நீங்கள் இங்ஙனம் வெறுப்பதற்கு யான் செய்த குற்றமென்?"

நாயகி:—"இங்கே வாரீர்! அல்லேயறிந்தோம் நும்மனத்தின் கருத்தை சொல்லாதொழியீர், சொன்னபோதினல் வாரீர். உறவுமுறை யாரைப்போலே நீர் கவிழ்ந்திருக்கிறதென்? உம்மை நீர் அறியவேண்டாவோ? எங்களை அறியவேண்டாவோ?

கண்ணன்:—"சொன்னபடியே வரப்போமா. கொஞ்சம் காலவிளம்பத்திற்கு பொறுக்கவமையாதோ. நான் வேறெயும் சிலரை அறிவேனே?

நாயகி:—"தக்கார் பலதேவிமார் சாலவுடையீர்! இது தன்னைக் கொண்டாடுமவர்களன்றே அவர்கள். இதுவென்ன கஷ்டமோ! ஸாஹஸங்களைச் செய்யக்கடவ நீர் இங்கு வந்ததென்?"

கண்ணன்:—'பல தேவிமார் சாலவுடையீர் என்கிற விது நீங்கள் ப்ரணயரோஷத்தால் கல்பிக்கிற வித்தனை''.

நாயகி:—"நன்று, நன்று. அகலகில்லேனிறையும் என்றிருக்கும் நித்யானபாயினிகளையும் விட்டு இடைப்பெண்களுடன் குரவை கோத்தது பொய்யோ?''

கண்ணன் இக்கேள்விக்கு மறுமாற்றம் சொல்லமுடியாது திகைத்து பின்னர் அவள் காலைக்கையைப் பிடிக்கப்புக்கனன்.

நாயகி:—"காலைப் பிடிக்கிறதென், மார்வத் தெழுத்தென்கிறதென், வாயது விறலென்கிறதென்?

(தோழியைப் பார்த்து) "எடி, நீயன்றே இவனைப் புகுரவிட்டுக்கொடுத்தாய்" என்று நொந்துகொண்டனள். இங்ஙனம் இவள் ப்ரணய ரோஷத்தால் பேசினவையடங்கலும் "ஒரு நான்று தடிபிணக்கே" என்று வன்மையாயிராது, "எனனிது வென்னிதுவென்னே" என்று இசைந்தும் இசையாததுமாய், கடூரமான சொற்களால் அவனைப் புறம்பு தள்ளவும் மனமில்லாது, ப்ரியமான வார்த்தைகளால் உள் அழைக்கவும் மனமில்லாது, தம் மார்த்தவம் தோற்றும்படியுள்ளன.

இன்னும் ஸ்ரீ குலசேகரப்பெருமாள், பிராட்டி பேச்சாலே ஊடும் ஊடல் திறம் சற்று ஆராய்தற்பாலது. இவர்தான் அவதாரங்களில் தோள்தீண்டியான க்ருஷ்ணாவதாரத்தை அநுபவிக்கப்புக்கு அவ்விஷயத்தில் தமக்குள்ள, பாவனுப்ரகர்ஷம் தோற்ற ஓர் பிராட்டி தசையை அடைந்து கிலாய்க்கின்றனர். இவர் ஊடலில் தம ராஜகுலமெல்லாம் தோற்றியிருக்கும். (ராஜகுலம்—தம் செருக்கு அல்லது மதிப்புத்தோற்றப் பேசுகை).

குலசேகரநாயகி ஸ்ரீதரனது செய்யவுடையும், திருமுகமும், செங்கனிவாயும், குழலும கண்டு, ஆய்மிகுகாதலுடன் தானிருந்து அவ்வனை அணைந்தபடியே நித்ரை செய்ய; ஸ்ரீக்ருஷ்ணன் தீம்பனுகையாலே, நள்ளிருட்கண், துயிலிடையே இவளை இன்னணமேவிட்டகன்று போய், அற்றை இரவும் ஓர் பிற்றைநாளும் அரிவையரோடும் அணைந்து, பின்னர் இவள் மருங்கில் வர, இவள் ப்ரணயரோஷத்தால் பேசத்தடங்கினள்:—

குலசேகரநாயகி:—"ஹே க்ருஷ்ண! 'நீயல்லது புகலுண்டோ, உன்னையல்லது யான் வேறொருவரை அறிவேனே' என்று நீ சொல்லும் பொய்களை உண்மையென மதித்து; மிக்க குளிரில் வருந்தி, கூசி நடுங்கி, யமுனையில், வார்மணற்குன்றில் விடியு

மளவும் யான் காத்திருக்க, நீ வந்தனையோ? மற்றும் என் கண் முன்னரேயே, என்னகத்திற்குக்கிழையகம்புக்கு, அங் கொருத்தியுடன் புணர்ச்சிக்குறிதோற்ற அவளுடன் கலந்து தயிர்கடைந்தவண்ணமிருந்தனை. அங்குத்தான அவளும்உன்னை மெய்யனென நம்ப, நீயும் நின் கள்ளவிழியை விட்டிற்றிலே. நின்றனக்கு நோக்கொருபடியும், நினைவொருபடியும், சொல் லொரு படியும், செயல் வேறொரு படியுமாயிருக்கின்றது. ஒருத்தியைக் கடைக்கணிப்பது; கண் அங்கு செல்லாநிற்க, மனதை வேறொருத்திதன்பால் ''அவளதல்லதறியேன்'' எனப் பொருத்துவது; மனம் அவளை நாடி நிற்க, ஒருத்தியிடம் ''அடியேன்'' என்று வார்த்தையாடுவது; அதே ஸமயம் மற் றொருத்திக்கு ''அங்குபோய் நில்லு'' என்று இடம்குறித்து விட்டு, வேறொருத்தியுடன் ஸம்ஸ்லேஷிப்பது முதலான நின் தீமைகளனைத்தும் யான் காணுதேதோ ? இன்னும், யான் உன்னைக்காணப்பெருவிடாய்ப்படடுக்கிடக்க, யான் அனுப்பிய தூதியுடனல்லவோ நீபோகத்தையுகந்தனை. என்னைப்படுக்கை வாய்ப்பாலே உறங்கப்பண்ணி, நடுராத்ரியிலே என்னையகன்று, பஞ்சலக்ஷம் குடியில் பெண்களனைவருடனும் அணைந்து வந்தனை. இனிமேல் நீ என்னையணைக்கத்தகாது. என் மருங் கில் வாராதேகொள். பொய்ய! நின்வடிவழகில் மயங்கி யான் பொய்ப்பட்டதேயமையும்; இனிமேலும் இங்கு புள்ளுவம்பேச வமையாது; யானும் பண்டையேனல்லேன் என் சேரி வர வொழி. நீ பண்ணும் துர்க்ருத்யங்களுக்கு என் கையருகில் வந்தாயேல் என் சினம் தீர்வன்''.

இவ்வாறாக குலசேகரநாயகி தன்னை அநேக கோபிகளாக பா வித்து ஒவ்வொருத்தியும் தனித்தனியே ஊடுவது போல் ஊடுகின் றனள்.

இவர்தம் ராஜகுலம்தான் இவர் தம் ஊடல் வார்த்தைகளில் எவ் வண்ணம் தோற்றுகின்றது என்பது அறிதற்பாலது. ''உன் வரவு பார்த்தே'' என்பதும், ''ஆய்மிகு காதலோடு யான் இருப்ப'' என்

பதும் தம் செருக்குத் தோற்றச் சொல்லுமவைகள். "மெய்யனல்லை, உன் வளர்த்தியூடே வளர்கின்றதால் உன்றன்மாயைதானே" என்பது அவனை இகழ்ந்து, தம் பெருமதிப்புத் தோற்றச் சொன்னதாகும். "இன்னமங்கே நடநம்பி" என்பதும், எற்றுக்கு நீ என் மருங்கில் வந்தாய்" (ஆரைத்தீண்டி வந்தாயென்று தெரியாது. என்னைத் தீண்டாதே, கடக்க நில்) என்பதும்; வைகி என் சேரி வரவொழி" (எங்களிருப்பிடங்களில் எங்களுக்கே ஆக்ஞை செல்வது. ஆகையால் இங்கு வாராமேதகொள்) என்பதும்; புள்ளுவம் பேசாதே போகு" என்பதும் தம் ராஜகுலத்திற்குத்தக்க அதிகாரத்வனியுடன் அமைந்த சொற்களாகும். இறுதியில் "வருதியேல் என் சினம் தீர்வன்" என்பதால் இராஜாக்ஞையை மீறி நடந்தால் விதிக்கப்படும் தண்டனையை கண்ணனும் அனுபவித்தே தீரவேண்டும் என்று பொருளாகிறபடியால் இதில் ராஜகுல மாஹாத்ம்யம் யாவருக்கும் தெளிவாக விளங்கும். இங்ஙனம் குலசேகர நாயகி—தம் ஊடல் பாராங்குச நாயகியது போன்று கடினமற்றும், பரகால நாயகியது போன்று ம்ருதுவற்றும் ஓர் மத்யமமான அதிகாரத்வனியில் இசைந்துளது.

ஈனயபடி பாராங்குச பரகால, குலசேகர நாயகிகள் முறை முறையே ஊடிய மூன்றுவகை ஊடல்-திறங்களையும், பரமரஸிகராகிய நம் இராமானுசன் பெரியபிராட்டியார் ஒருத்தி பக்கலிலேயிட்டு, அழகியமணவாளனுடன் கிலாய்க்கும்படி செய்து தாமும் அனுபவித்து, "பின்னுளார் வணங்குமசோதி" என்கிறபடி பிற்பட்டவர்களாகிய அடியோங்களுக்கும் கண்டு களிக்கும்படி திட்டம் செய்திருக்கின்றனர். என்னே இவரது காருண்யம்! எம்பெருமானுரோபாதி காண்யமுள்ளவர்காணும் இவர்தாம்" என்றபடி, ஆழ்வார் தம்மையும் இவரையிட்டன்றோ நிரூபிக்கும்படி இருந்துளது இவர்தம் காருண்யமும். மற்றும் பெரியபிராட்டியார் ப்ரணயரோஷம்கொண்டு பேசுவதற்கு விஷயங்களை எல்வண்ணம் பொருத்தமாக அமைத்துள்ளார். (உறையூர் வைபவத்தில் குறிப்பிட்டபடி) 6-வது உத்ஸவத்திற்காக, 5-ம் உத்ஸவம் நடுநிசியிலேயே அழகியமணவாளனைப்புறப்படுவித்து உறையூர் எழுந்தருளப்பண்ணியும், அதைபிட்டு ஸ்ரீரங்கநாய்ச்சியாரும் தன் நாயகன் தன்னை நள்ளிருட்கண் படுக்கைவாய்ப்பாலே மயக்கி

விட்டு வேறொரு அபிமதை (உறையூர் வல்லியிடம் சென்றுவிட்டதாகவும், அந்த அபிமதை உறையூரில் உள்ளனள் என்று தன் தோழிகள் மூலம் தான் அறிந்ததாகவும், உடனே ப்ரணயரோஷம் தலையெடுப்பதாகவும், 9-ம் திருநாள் பெருமாள் தன்னுடன ஸம்ஸ்லேஷார்த்தமாக தன் ஸந்நிதிமுன் வந்தவாறே அவள் அவனுடன் கலாய்ப்பதாகவும்—இவ்வண்ணம் எவ்வளவு பொருத்தமாக உத்ஸவ விவரங்களைக் கோர்த்துள்ளார். பெரிய பிராட்டியார் கலாய்க்க, அழகியமணவாளன் லஜ்ஜையற்று அவளை அணுகபுக, அவள் அவனை அவமதிக்க, அறிவிலிகள் புலரும்கண்டு நகைக்க, ஆச்ரிதர்களைவரும் "என்ன சீர்மை" என்று புகழ, இவ்வண்ணமான இவ்வைபவம் கண்டு களிப்பக்கண்ணுள் நின்றகலாது வெகு இன்பம் பயக்கும.

ப்ரஹ்மோத்ஸவம 9-ம் திருநாள் காலையில் பெருமாள் திருப்பல்லக்கில் புறப்பட்டருளி, திருவீதிகள் வலம்வந்து நேராக தாயார் ஸந்நிதிக்கெழுந்தருள்வன். தன்னை ஏமாற்றி வேறொரு அபிமதையாகிய உறையூர் வல்லியிடம் இவன் சென்ற வ்ருத்தாந்தத்தைத் தன் சேடி மூலம பெரியபிராட்டியார் அறிந்திருக்கிறாளாதலால, தன் சேடிகளாகிய தாஸிகளுக்கு, "இவன் வந்தால் உள்ளே விடேல்மின்" என்று உத்தரவிட்டிருப்பள். அழகிய மணவாளன் அதிஆடம்பரத்துடன் வருமளவில், தாஸிகள் இவன ஆடம்பரத்தையும், அரைக்கணத்தில் இவனடையவிருக்கும் அவமானத்தையும் மனதில்எண்ணிக்கலீரென நகைத்து, வாசற்படியை இவன் அணுகியவாறே, தடாரென கதவைச்சாத்தித் தாளிட்டுக்கொள்ளுவர்கள். தான் எதிர்பாராதவிதமாக சேடிகள் நகைப்பதும், கதவு தாளிடப்படுவதும் கண்டு பெருமாள் ப்ரமித்தனுய், ஒருகால் பிராட்டி தம்பக்கல் ப்ரணயரோஷம் கொண்டிருக்கவேண்டும் என அறிந்து "இதைச்சாந்தம் செய்து உள்ளே புகுருவது எங்ஙனே" என்று சிந்தைகலங்கிப்பலகாலும் திகைப்பன். சேடிகளை ஏமாற்றி உள்புகப்பார்ப்பன் வாசற்படியை அணுகியவாறே கதவு தாளிடப்படுமாதலால், தானே ஏமாற்றமடைவன். 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்பதற்கிணங்க மீண்டும் மீண்டும் எததனிப்பன். தோழிகள் பராக்கணியாததால் ஒவ்வொரு ஸமயமும் ஏமாற்றமடைவன். "போகு நம்பீ! கழகமேறேல் நம்பீ!" என்று சொல்லிக்

கதவைத்தாளிட்டால் இவன் கேளாது மீண்டும் மீண்டும வருகின்றனன்; இவனை 'ஒரு நான்றுதடி பிணக்கே' என்றபடி நன்கு புடைத்தனுப்பவேண்டும் என்று தாஸிகள் பாரித்து வாழைப்பழம், தயிர், பலாச்சுளை, பந்து முதலியவைகளால் இவனை அடிப்பார்கள் (இவைகளை பல்லக்கின்மேல் வீசி எறிவார்கள்) அனைத்துலகங்களையும் அடக்கிச் செங்கோல் நடத்தும் திருவரங்கராஜன், அபலைகளாகிய நான்கு பெண்மக்களால் இவ்வண்ணம் அவமதிக்கப்பட்டு, வாயிலிலே தள்ளுண்டு கிடப்பது என்ன ஆச்சர்யம்! "போகு நம்பீ" என்று சிந்தித்தும், "கழகமேறேல் நம்பீ" என்று கண்டித்தும், "ஒரு நான்றுதடி பிணக்கே" என்று புடைத்தும் செய்யும் இப்புடைகளில் பெரிய பிராட்டியார், இவ்வண்ணமே கண்ணனை வன்மையாய் அவமதித்த, பராங்குச நாயகியோடு ஒப்பள்.

தெள்ளியார் பலர் கைதொழும் தென்னரங்கன் திகைத்து நிற்க, "அகலகில்லேன் இறையும்" என்னும் அலர்மேல்மங்கை 'கொல்லை' என்னும்படி ஞாலமறியப்பழிசுமக்க, பிராட்டி "நம் ஐயன்" என்று போற்றும்படியான நம்மாழ்வார் இந்த ப்ரணயகலகத்தைத் தீர்க்க அங்கு வந்து தோன்றுவார். [நம்மாழ்வார் அவயவியாகவும், மற்றையாழ்வார்கள் அவருக்கு அவயவங்களாகவும் கருதப்படுகின்றனர். பெரியாழ்வார் பிராட்டிக்குத்தகப்பன் முறையாதலால், அவயவமாகிய அவரில்காட்டில் அவயவியாகிய நம்மாழ்வாரை இங்கு தகப்பன் முறை கொள்வதில் யாதும் குற்றமன்று. மற்றும் மாதாபிதாக்கள் இருவரும் சண்டையிடப்புக்கால் நடுவிலிருக்கும் ப்ரஜைமுகத்தால் அவர்கள் சண்டை தீர்ந்து ஸந்துஷ்டராவர்கள் போலே, இங்கும் ஜகன் மாதா பிதாக்களாகிய பெரியபிராட்டியாருக்கும் அழகியமணவாளனுக்கும் உள்ள ப்ரணயகலகம் விலக்ஷண சேதனராகிய நம்மாழ்வாரான ப்ரஜையால் தீரத்தட்டில்லை]

இங்கு நம்மாழ்வார் பக்கலிலே அவர் பரிகரமாக அரையர் எழுந்தருளியிருந்து பெருமாள் திருவாய்மலர்ந்தருளுவதைப் பிராட்டியுடனும் (அவருக்குப்பரிகரமாக இருக்கும் அந்த ஸந்நிதிப் பண்டாரியுடனும்); அப்பண்டாரி பிராட்டிஅருளிச்செய்வதாகச் செப்புவதைப்

பெருமாளுடனும்; ஆழ்வார் பக்கலிலேயிருந்து இங்குமங்குமாகப் பலதடவைகள் சென்று விண்ணப்பிப்பர். (பிராட்டியின் ப்ரணய ரோஷப்பேச்சையும், பெருமாளது பதிலும் "மட்டையடி" என்கிற சிறு புஸ்தகத்திற் காணலாம்). இங்கு நாய்ச்சியார் ஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் பண்டாரிஸ்வாமியினது ஸேவை முக்கியமாக கவனிக்கத்தக்கது. நெஞ்சு துடிக்க, கண்கள் சுழல, கைகள் போராட' மேனிகுலுங்கப் படபடவெனப்பேசும் தடிதடித்த சொற்களைக்கவனிப் போருக்கு நாய்ச்சியார் நிச்சயமாக இவரிடத்தில்ஆவேசித்து ப்ரணய ரோஷத்துடன் கோபாக்னி ஜ்வலிக்கப் பேசுவது போலவேயிருக்கும். கோபமாகப்பேசும் இவ்வார்த்தைகளனைத்தும் அதிகாரத்வனியுட னிருக்கும். இத்தால் குலசேகரநாயகியினது ராஜகுலச்செருக்கனைத் தும் பெரியபிராட்டியார் பக்கல் காணலாம். ஆகிலும் இக்கோபக்குறி களனைத்தும் ஆழ்வார் முகத்திற்காகச் சற்றுநேரத்தில் தணிந்துவிடும். இதற்குப் பின்னர் ஆழ்வார் மூலமாகப் பெருமாளுக்கு அறிவிக்கும் ஊடற்சொற்கள் யாவும் பரகாலநாயகியினது போன்று மார்த்வமுடை யதாயிருக்கும். ஆக இவ்வகைகளால் பெரியபிராட்டியார் பராங்குச பரகால குலசேகர நாயகிகளுடன் ஒத்திருக்கின்றனள். ஆழ்வார் புருஷகாரமில்லாவிடில் அழகியமணவாளன்பாடும் அதோகதிதான் போலும்! ஆழ்வார் தாக்ஷிண்யத்திற்காகப் பெரியபிராட்டியார் பெரு மாளை அங்கிகரிப்பள்.

இஃதொன்றுக்காகவே அழகியமணவாளன் இப்பாடுபட்டானாத லால், அநுகூலமான சொல் காதில்பட்டவாறே, சடக்கென உட்புகு வன். "ஸ்ப்ருஷ்டா வாஜயோ: கஞ்சுகமதம்" என்றபடி திருமேனி யும் பூரிக்கும். உடனே பெருமாள்மேல் போர்த்தியிருக்கும் உத்தரீய மும், பெருமாள் சாத்திக்கொண்டிருக்கும் திருமாலை, கஸ்தூரி திரு மண்காப்பு, சந்தனம் முதலானவைகளைக் களைந்து ஒரு கட்டில் ஸமர்ப் பித்து மர்யாதையுடன் நாய்ச்சியாருக்கு அனுப்பப்படும். அவளும் அவைகளை அங்கிகரித்து சாத்திக்கொள்ளுவள். அனந்தரம் பெருமா ளுக்குத் திருவந்திக்காப்பு ஸமர்ப்பித்து, தாயார் ஸந்நிதி மணிக்கதவு வாசலில் பெருமாளை திருப்பல்லக்குடனேயே எழுந்தருளப்பண்ணி திருத்திரை ஸமர்ப்பிக்கப்படும்.

திருத்திரை காவலர்களும் வேத்ரபாணிகளுமாகிய சாத்தாத நம்பிமார்களுக்கு "வேத்ரபாணி, வேத்ரபாணி" என்று நான்குமூலை களிலும் அருளப்பாடிட்டு, உள்ளே ஏகாந்தஸமயமென்றும், அந்தரங்க கைங்கர்யபரர்கள் தவிர அன்யர்கள் யாரையும் உள்ளே விடலாகாதென் றும் எச்சரிக்கப்படும். இந்த ஏகாந்த ஸமயத்தில், திருப்பல்லக்கில் நேர்நோக்கியிருக்கும் பெருமாளை, தாயாரை நோக்கியவண்ணம் திருப்பி எழுந்தருளச் செய்வார்கள். உடனே பெருமாளுக்கும் பிராட்டிக்கும் அடைக்காயமுது (வெற்றிலை பாக்கு) அமுது செய்விக் கப்படும். திருத்திரைக்கு வெளியில், நாட்டுமான்னிடவரோடிணங்க, தாஸிகள் ஒரு ஸந்தையும் மேளகாரன் மறு ஸந்தையுமாக கானம் செய்யப்படும். ஆஸ்ரிதர்களை த்ருப்திசெய்வதற்காக இந்த ஸம்ஶ்லேஷ ஸமயத்திலே, திருப்பவளங்களுக்குப் போக்யமாக அவர்கள் ஸமர்ப் பிக்கும் அக்காரவடிசில், சர்க்கரைப்பொங்கல் முதலான தளிகை வகையறுக்களும் பெருமாளுக்கும் நாய்ச்சியாருக்கும் கண்டருளப் பண்ணப்படும்.

இவ்வாறான ஏகாந்தம் முடிந்தபின்னர், பெருமாளும் பிராட்டி யும் புறப்பட்டருளி, அந்த ஸந்நிதி ப்ரகாரம் தென்மேற்கு மூலையில் அனைவர்க்கும் எங்கிருந்தாலும் ஸேவையாகும்படியான ஓர் உன்னத மான மண்டபத்தில், ஏகஸிம்மாஸநத்தில் எழுந்தருளுவர்கள். சொல் லால் குறைவிலர்களாகிய அழகிய மணவாளனும், பெரியபிராட்டியா ரும் தங்கள் ஊடல் தீர்ந்து கூடியிருக்கும் இந்த ஸேவை பரம பாம ரர்கள் மனதையும் வசீகரிக்கும்படியாயிருக்கும். தன் ராஜகுலச் செருக்கால் பெருமாளுக்கும்தடிபிணக்களித்த நாய்ச்சியார், தற்சமயம் பெருமாளது பக்கலில் வெகு லஜ்ஜையுடன் தன் பாரதந்த்ரிய ஸ்வரூ பம் தோற்ற வீற்றிருப்பது "அறிவுடையார்கள்" என்று போற்றப் படும் விலக்ஷண ஸ்ரீவைஷ்ணவர்கள் மனதை நீர்ப்பண்டமாய் உருகச்செய்யும்.

இருவருமான இச்சேர்த்தியழகே ஒவ்வொருவருக்கு, தாங்கள் கண்பெற்ற பயனைப்பெறுவதற்கும், கைங்கர்ய ஸ்ரீயை சேமித்துக் கொள்வதற்கும் தக்க வாய்ப்பு என்று அறிவிக்கவேண்டியது அவசிய

மன்று. தங்களுக்கு கோயிலில் ஒரு கைங்கர்யமும் கிடையாது என்று வருந்துவதுபோல் பிறரைவசீகரிப்பதற்காக மேலுக்குநடித்து, மனதிற்குள் அன்யப்ரயோஜனங்களை நாடி உபக்ரமிக்குமவர்களுக்குக் கூட, சேர்த்தியழகைக் கண்டவாறே, அவர்களையும் அறியாது "நின்றனக்குப் பல்லாண்டு; நின் பக்கலில் திகழும் மங்கைக்குப்பல்லாண்டு" என்கிற வாசிக கைங்கர்யமாகிற சொற்கள் வெளிப்பட்டுவிடும். பூர்வாசார்யரான நம்மாழ்வாரும் "புகழுநல்லொருவன்" என்கிற திருவாய்மொழியால் வாசிகமாய் அடிமைசெய்தார். ஜானகியும் தாசரதியுமாகிய இருவருமான சேர்த்திக்கு அடிமைசெய்து இளையபெருமாள் "லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:" என்கிறபடி கைங்கர்யலக்ஷ்மியில் தங்கிரில்லாதுவிளங்கினர் அவரே அபராவதாரமான எந்தை இராமாநுசனும் அந்த தாசரதியின் குலதனமேயாகிய அழகியமணவாளனும் ஸ்ரீரங்கநாச்சியாருமாகிய சேர்த்திக்கு (இந்தப் பங்குனி உத்திரத்தில்) வாசிக கைங்கர்யமாக கத்யத்ரயத்தை அருளிச்செய்து, எத்தனை அறிவிலிகளுக்கும் தம் ஸம்பந்தம் ஒன்றையே பற்றாசாக மேல் வீடு பெறும்படி. இச்சேர்த்தியில் "திருவாணை நின்னாணை கண்டாய்" என்றபடி இருவரிடமும் ஆணையிட்டு வாக்குப்பெற்றனர். ஆகவே சேர்த்தியின் மகிமை அளவிடவொண்ணாததலால் அனைவரும் இதில் கொஞ்சமேனும் கைங்கர்யத்தால் தங்கள் ஸ்வரூபங்களை நிறம் பெறும்படி செய்துகொள்வார்களாக.

அந்தாம் பெருமாளும் பிராட்டியும் ஏக ஸிம்மாஸனத்தில் இருந்த வண்ணமே மஞ்சனமாடுவர்கள். அப்பொழுது பெருமாள் உத்திர விண்டோரில் ஸ்தானீகர் "வஸந்தனுக்கருளப்பாடு" என்று அருளப்பாடிட, அரையர் எழுந்தருளி வஸந்தகாலத்தைச்சில பாட்டுகளால் இசையுடன் கூட்டி கானம் செய்வர். திருமஞ்சனம் முடிந்தபின்னர் அடியார்கள் ஸமர்ப்பிக்கும் தளிகைப்ரஸாதங்களை இருவரும் அமுது செய்துவிட்டு, அனைவர்க்கும் தீர்த்தம் சடகோபன் முதலானதுகளை அளித்தவண்ணம் அவர்களைக்குளிர நோக்கிக்கொண்டு மந்தஸ்மிதஸாந்த்ர முகாரவிந்தர்களாய் வீற்றிருப்பார்கள். கற்பகவல்லியும் காளமேகமும் ஒருங்குகூடி வர்ஷித்தால் அடியார்கள்பெறும் அருளாகிய அமுத வெள்ளத்திற்கு யாது குறைவு! என்னுமாத்துயர் விளைக்கும் உலகில்,

ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலே விழுந்து நோவுபட்டு, தொன்மாவல்வினைத்துடர்களை முதலறியாது மூதாவியில் தடுமாறி நரகத்தழுந்து கின்றனர்களை இந்த நாட்டு மானிடர்கள் என்று வயிறுபிடித்துப் பரிதபிக்கும் ஜகன்மாதா பிதாக்களாகிய பெரியபிராட்டியாரும், பெரிய பெருமாளும், அன்று அங்குக்குழுமியிருக்கும் குழாங்களைக்கண்டவாறே "இவ்வண்ணமும் இந்த விபூதி திருந்தியதோ" என்று ஸந்துஷ்டர்களாய், அன்றே தாங்கள் தங்களது அவதாரங்களின் பயன் பெறறதாகக் கருதுவர்கள்.

கனையிருளகன்று காலையம்பொழுதாக, தாயார் முதலில் புறப்பட்டு தனதாஸ்தானமடைவள். உடனே பெருமாளும் புறப்பட்டு, ப்ராகாரத்தில் தாயாருக்கு நேர்முகமாகத் திருமயிகின்று, அந்த ஸந்நிதி பண்டாரிக்கு மர்யாதைகள் செய்துவிட்டு மேலுள்ள உத்ஸவம் கண்டருளுவதற்காக அங்கு நின்றும் விடை கொள்ளுவன். பெருமாள் கடைசியில தாயாருக்கு நேர்முகமாகச் சற்று நின்று அவளை நோக்கிவிடுச் செல்வதைப்பார்க்கில தனது "தாமரைக் கண்ணும் செவ்வாயும், நீலப்பனியிருங்குழல்களுமம, நான்கு தோளும்" அவள் மனதில்நின்று ஸதா ஈரும்படி செய்துவிட்டு விடைகொள்வது போல் தோற்றும்.

நாய்ச்சியார் ஸந்நிதியிலிருந்து புறப்பட்டவுடன் "புஷ்பகவிமானம்" என்று வழங்கப்படும் கோரதத்தில் அழகியமணவாளன் அமர்ந்து திருவீதிவலம் வந்து, கோயிலுககு எழுந்தருளுவன். அரிய பெரிய தத்வார்த்தங்களெல்லாம் ப்ரகாசிக்குமபடி தனககு வெகு சிறப்பாக ஏனைய உத்ஸவங்களை நடத்திபருளியஉடையவருக்குத்தான் தக்க தான யாதொருகைம்மாறு அளிப்பதென்று எண்ணுவன். எத்தனை செய்யிலும இராமாநுசனுக்கு ஈடளிக்கவொண்ணாதுபற்றி, "இவர் வைபவங்களைத தாம் செவிசாய்த்துக் கேட்பது" ஒன்றே சற்றுப் பொருந்தும என்று தீர்மானித்து "ஸப்தாவரணம்" என்று சொல்லப்படும 10-வது உத்ஸவததில் உடையவர் வைபவங்கள் நிறைந்த அமுத வெள்ளமாகிய "இராமாநுச நூற்றந்தாதி" என்கிற ப்ரபந்த ஸாகரத்தில் தாம் மூழ்கவெண்ணி, அத்யாபக ஸ்வாமிகள் அதை

ஸேவித்துக்கொண்டு முன் செல்ல, அதற்கு இடையூறாக ஒருவித மான மேளவாத்ய கோஷங்களுமின்றி, அதையே செவியுற்றவண்ண மாயும், இராமானுச நூற்றந்தாதியாம் தேனில் தூவியம் புள்ளுடைத் தெய்வவண்டாகிய தாய துவண்டும், திருவீதி வலம் வருவன். பின்னர் அகளங்கன் திருவீதியாகிய 3-வது ப்ரகாரம் வலம் வந்து, வைபவத் தைச் செவியுற்றமாத்திரத்தில் த்ருப்திபெறாது, அவ்வைபவமுடைய வரை நேரில் கண்டல்லது தரிக்கமாட்டாத ஆற்றலுடையவனாய், அதே ப்ராகாரத்திலுள்ள எம்பெருமானார் ஸந்நிதிக்கு எழுந்தருளுவன். அங்கு உடையவர் (அர்ச்சையாகிலும் விபவத்தில் போலவே) பெருமாளை எதிர்கொண்டழைப்பதற்காகத் திருக்கைத்தலத்தில் எழுந்தருள, பெருமாளும் ஓடோடியும் சென்று அவருக்கு அருளப்பாடிட்டு, அழைத்து கண்ணாரக்கண்டுகளித்து "உடையவர் இல்லாவிடில் நமக்கு இவ்விபூதி திருந்துவதெங்ஙனம்" என்று உபகாரஸ்ம்ருதிபண்ணி, அவருக்குத்திருமாலை, திருப்பரிவட்டம், ஸ்ரீசடகோபம் முதலானது ப்ரஸாதித்து, அங்கு அவர், தமக்காக வைத்துக்கொண்டிருக்கும் "இளநீரை" அமுதுசெய்தருளி, பின்னும் அவரைப்பிரிய மனமற்ற வனாய் மேல் உத்ஸவங்களைக் கண்டருள்வதற்கு ஒருவாறு அவரிடம் விடைகொண்டு கோயிலுக்குள் எழுந்தருளுவன்.

இவ்விதமாகப் பெருமாள் கண்டருளும் இந்த உத்ஸவத்திற்கு "பெரிய ப்ரஹமோத்ஸவம்" என்று பெயரிட்டதற்கு அநேக காரணங்களுண்டு. நான்முகன் நடத்தியருளியதுபற்றி இப்பெயர் இதற்கு பொருத்தமேயாகிலும், இராமானுசன் அறிவதற்கரிய தத்வங்களை இவ்வுத்ஸவ மூலம் நமக்கு நல்கியதின் பொருட்டேயாகும் இப் பெயர் இதற்குச் சமைந்தது. தாம இட்டதே வழக்காகத் தம் நிய மனத்தைப் பெருமாள் மாறுது கொண்டதாலும் ஜீயர்புற உறையூர் உத்ஸவங்களில் அவன் ஒரு வயோதிகைக்கும் அபலைக்கும் காட்டும் காருண்யத்தாலும்—அவனது ஆச்ரிதபார தந்த்ரியததையும்; ப்ரணய காலம் என்பதில் ஒரு சேதனன் பகவானை எவ்வளவு உபேக்ஷித்தா லும், பெருமாள் அவனை எவ்வகையும் எங்கும விடாது திருத்திப் பணிக்கொள்ளுவன் என்கிற அவனது ஸௌசீல்யாதி கல்யாண குணங்களையும்; இருவருமான சேர்த்தியிலே அடிமை செய்கை

முறை" என்கிற த்வயார்த்தமான உபாயத்தை உடையவர் தாமே அநுஷ்டித்துக்காட்டுவதாலும்; இப்படியாக அறிவில் மிக்கோர்மட்டும் அறிந்திருக்கும் தத்வங்களை அறிவினால் குறைவற்றவர்களும் எளிதில் அறிந்து உஜ்ஜீவிக்கும்படி செயலாக நடத்தி ப்ரகாசிப்பிக்கும் இவ்வுத்ஸவத்திற்கு "பெரிய ப்ரஹ்மோத்ஸவம்" என்னத் தட்டில்லை.

இக்கற்றுழலும் ஸம்ஸாரிகளுக்கு எம்பெருமானார் ஸம்பந்தம் ஒன்றுபற்றியே தெளிவிசும்பு திருநாட்டைப் பெறவேண்டுமாதலால், தத்ஸம்பந்தத்தையே னும் நிரூபிக்க, அவர் அழகியமணவாளனுக்குச் செய்துவைத்தருளிய இவ்வுத்ஸவத்தை ஸேவித்து, எதிராஜஸம்பத் குமாரனாகிய திருவரங்கச் செல்வனுக்குப் பல்லாண்டு பாடி, எந்தை எம்பெருமானாரின் திருவுள்ளத்தை உகப்பிப்பார்களாக.

N. B—இப்படி மிகுந்த பெருமைவாய்ந்த இவ்வுத்ஸவத்தை, தாங்கள் காலாகாலத்தில் சரிவர நடத்துவதாகக் கோரி, அதனால் தங்களுக்குப் பெருமை கிடைப்பதாக நினைத்துத் தர்மகர்த்தாக்கள், பெருமாளை அதிசீக்கிரம் சேர்த்தியிலிருந்து பிரித்து, கோரதத்தில் எழுந்தருளப் பண்ணித் திருவீதி வலம்வரும்படி செய்து, காலையிலிருந்து சாயங்கால பர்யந்தம் வெய்யிலிலேயே பெருமாளை துடிதுடிக்கும்படி செய்கின்றனர். இங்ஙனஞ் செய்வது அபசாரமன்றோ! உத்ஸவத்தைத் தொடர்ச்சியாக நடைபெறும்படி செய்வதன்றோ முறையாகும் சென்ற வருஷம் நடந்த உத்ஸவத்தில் மேலேகண்ட ப்ரகாரமே நடந்தது. தற்காலமிருக்கும் தர்மகர்த்தாக்களாவது, இப்படிப் பெருமாளை ச்ரமப்படுத்தாது, வீண் பெருமைக்கும் கௌரவத்திற்கும் ஆசைப்படாது, இன்னும் சிலமணி நேரம் பெருமாளைச் சேர்த்தியிலேயே எழுந்தருளப்பண்ணி எல்லோரையும் திருப்தி செய்து, கோரத உத்ஸவத்தை முறையாக நடத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

S. RAMASWAMY IYENGAR, B. A.
Srirangam.

ஸ்ரீ:

இரங்கற்பாமாலை.

இந்நூல், ஸ்ரீ வானமாமலை மடத்தின் இருபத்தைந்தாவது பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி கலியன் ராமாநுஜ ஸ்வாமி திருநாட்டிற்கெழுந்தருளிய விஷயத்தைப்பற்றிக் குறிப்பிடும். இந்த ஸ்வாமியின் திருவடிஸம்பந்தம் பெற்றவர்களிலொருவராகிய சென்னை வித்வான் விஷ்ணுபாதசேகரரால் இயற்றப் பெற்றது. ஆசார்யனையே பரதெய்வமாகக்கொண்டு, முக்கரணங்களாலும் அவன் விஷயமான பணிவிடை செய்யவேண்டும் என்று விதித்துள்ளதற்கேற்ப இந்நூலாசிரியர் ஆசார்யன் விஷயமாக வாசிககைங்கர்யஞ்செய்த செயல் போற்றத்தக்கது. இவர் ஆசார்யன் விஷயத்தில் மிக்க ஆர்வமுடையவராயிருக்கின்றாரென்பதை இப்பாமாலையைப் பயின்றோர்க்குப் புலனாகும்.

பெருமாள்கோவில் பிரதிவாதிபயங்கரம் உபய வேதாந்த வித்வான் அண்ணங்கராசார்யஸ்வாமி காலக்ஷேப மஹாஸபையில் (சென்னை தொண்டைமண்டலம் ஹைஸ்கூலில்) 17—1—34ல் இந்நூல் சென்னை, பச்சையப்பன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் **கா. ர. கோவிந்தராஜ முதலியாரவர்கள்** வாசிக்கக்கேட்டு எல்லோராலும் அங்கீகரிக்கப் பெற்றது.

காப்பு.

நேரிசை வெண்பா.

வானாத் திரிக்கிறையாய் வந்த சிறுகலியன்
ஆனாத் திருநா டலங்கரிக்கப்—போனால்
யானுட் சகிக்கா திரங்கற்பா மாலைசொலக்
கானத் தமிழ்மறையோன் காப்பு.

நூல்.

அறுசீராசிரியவிருத்தம்.

மன்கலையோ ரிரண்டினுக்குள் மகிதலத்துப்
பெரும்பாலார் மகிழ்ந்தாங் கோதும்
இன்கலையாய் நங்கள்தனி முதல்வனுமே
பின்பற்றி யேகுந் தூய
தென்கலைசம் பிரதாய முறுமடங்க
ளவைக்குமொரு சிரமாய் நிற்கும்
வன்கலையோ தொலியடங்கா தொளிர்வான
மாமலைமா மடத்தின் வேந்தே! (1)

பணவாள ராவரைய னங்கிசம்பெற்
றுதித்துலகைப் பரிந்து காத்த
மணவாள மாமுனிவன் நியமனங்கொண்
டாரியராய் வந்து தோன்றுங்
குணவாள ராமட்டக் கயங்களுக்குள்
தலையாய்முக் கோல்கைக் கொண்ட
பணைவாள கிரியையான் சந்ததிவந்
திவ்வுலகைப் பாலித் தோனே ! (2)

இருபானைத் தாம்பட்டத் தருஞ்சீய
ரெனவந்தங் கெம்மைக் காத்தோய் !
ஒருநான்கு மாமறையுந் தமிழ்மறையு
மூவந்தெவர்க்கு முறைசெய் மாலே !
அருளோங்கு திருவுளத்தோய் ! அகிலபெருஞ்
சற்குணத்தோய் ! அமிழ்தின் சொல்லோய் !
தெருளோங்கு கலையுளத்தோய் ! பொறையினொடு
சாந்தமிகுந் தேசிகேசா ! (3)

அலகில்பல சேதனர்க்காங் கைந்தளித்தே
யுய்வித்தாங்! கமர்ந்த தேவே !

உலகளிப்போர் மாணவராய்த் தந்தபல
தக்கணைகொண் டோங்கி நின்றோய்!
இலகுதிருப் பதியாவு மும்முறைசென்
றிறைஞ்சிவந்த இணையில்லோனே!
இலகம்போ லுலகுக்கா முன்மடத்திற்
கரியநிதி சேர்த்த தீரா! (4)

திருப்பதிகட் கணிகளொடு வாகனங்க
ளாதியவை சிறக்கத் தந்தோய்!
பொருப்பழகன் நூறுதடாக் கன்னலின்சோ
றுதியவை புசிக்கத் தந்தோய்!
கருப்பகம்போற் புலவர்கட்கும் அடியர்கட்கும்
பரிசளிக்குங் கருணை வள்ளால்!
பருப்பதமேற் பெருந்தீப மெனவுலகிற்
பெரும்புகழே படைத்த நாதா! (5)

அடியவர்க ளெவர்வரினு மழைத்தவரை
யன்புடனே யளித்துக் காப்போய்
கொடியவரே யாயிடினு மவர்தமக்குந்
தீங்கியற்றக் கூடா தென்போய்!
அடியெனக்கு மைந்தருளி யடியேன்செய்
கவிமாலை யன்பிற் கொண்டோய்!
நெடியவனை டாரியனை யிதயமலர்
மேல்வைத்து நினைந்து வாழ்வோய்! (6)

அன்னனைய நீசிறிய மதுரகவி
யெனுஞான அருமைந் தற்கே
உன்னரிய பதவியெலா மளித்தவனே
டம்மடத்தே யுள்ளோர் யாரும்
பன்னரிய சேதனரும் பிரபனருஞ்
சீடர்களும் பரிவோ டேங்க
மின்னுமணி மண்டபத்திற் காசைகொண்டோ?
திருநாடு மேவி நின்றாய். (7)

அத்தகைய சுகம்விரும்பி நீயெவர்க்குந்
துயரளித்த தறம தாமோ?
வித்தகனும் விப்பிரநா ராயணனும்
அச்சுவையை வெறுத்த தன்றோ
புத்தகத்திற் பார்த்திருந்து மதைமறந்தோ?
வேண்டுமென்றோ? புகுத்தா யாங்கே
தத்துவங்க ளுரைத்தருளு முத்தமனே!
யீதுனக்குத் தகுதி யன்றே. (8)

பொன்னனியாங் காஞ்சியினில் நீயெனக்காங்
கைதளித்த போழ்தின் பின்னர்
சென்னைபுரித் திருவல்லிக் கேணியினி
லுன்னடியைச் சேவித் தேனால்
பின்னருனை வரமங்கை தனிற்போந்து
சேவிக்கப் பெறாத பாவி
இன்னமிந்த இருள்தருமா ஞாலத்தி
லுயிருடனே யிருக்கின் றேனே. (9)

திருவரையி லிருவகையாஞ் செங்காவி
யுடையோங்கச் சென்னி மீதே
பிரபன்ன பாகையுறத் திருமார்பில்
தாவடங்கள் பிறங்கி யோங்கக்
கரங்களிலே முக்கோலு முத்திரையும்
புத்தகமுங் காட்டு முன்றன்
திருவடியில் விழுந்தடியோஞ் சிந்தைமகிழ்ந்
தெழுஞ்செயலைச் சிதைத்தாய் நன்றோ? (10)

கவிகைசா மரைமுதலாம் விருதனைத்தும்
பிடித்தேகக் கணிப்பி லாத
புவியினர்மற் றந்தணருந் திரண்டேக
வொட்டைகரி புரவி யேகக்

கவசமொடு சேவகராங் குடனேக
வாத்தியங்கள் கறங்கத் தங்கச்
சிவிகையின்மேல் நீவருவ தினியடியோங்
காண்பதென்றோ? சீயர் கோனே! (11)

திருவடியுந் திருவரையுஞ் செவ்வுடையுந்
திருமார்புஞ் சிறந்த நான்கு
சரவகையும் புரிநூலுந் திருமுகமும்
புண்டரமுந் தலைக்கண் மேவும்
பிரபனர்தம் உடைமுடியு முக்கோலும்
முத்திரையும் பிறங்கு முன்றன்
இருநெடிய கரமுடைய வடிவழகைப்
பார்ப்பதினி யென்றோ? எந்தாய்! (12)

ஒருபதினெட் டாகியமா ரகசியமுந்
தமிழ்மறையு மொருநான் காக
வருமறையுங் கீதைமுத லாம்பலவும்
வகைவகையா வகுத்தே யுன்றன்
அருள்விழியால் நோக்கியெமக் கருள்புரியுந்
திருவாக்கா மமிழ்த மெங்கள்
இருசெவியும் பருகுவதினி யென்றுகொலோ?
வரமங்கை யெம்பி ரானே! (13)

தெருள்மிகுந்த வரமங்கைச் சிறுகலிய
மாமுனிநீ தேர்ச்சி யோடும்
அரியதொரு சிமுகவாண் டாவணிமா
மதியிருபத் தாறுந் தேதி
கரியபக்கத் திதியாயிற் கார்த்திகைநற்
றிருநாளிற் கதிர்வா ரத்தில்
பெரியதிரு நாட்டினையே யலங்கரித்தாய்
அந்நாள்தான் பெரிய நாளே. (14)

உன்னையார் முன்வந்தோர் தமிலில்லை
யுனதுஞான முற்ற சேயே
பின்னையனல் உனைப்போது மொழுகுதற்காங்
கையமிலை பின்னும் வாழை
தன்னியல்பு வேறுமோ ? அனையபுதுச்
சீயர்பிரான் தழைத்தே யாங்கே
மன்னியெமக் கருள்புரிந்திடும் மண்டலத்தே
பல்லாண்டு வாழ்கமாதோ. (15)

இரங்கற்பாமாலை முற்றிற்று.

வாழித்திருநாமங்கள்.

பங்கய மனைய பதங்கள் வாழியே
பதும நாபியுங் கூறையும் வாழியே
துங்கநல் லுரமும் புரிநூலும் வாழியே
துணைப்பு யங்களு முக்கோலும் வாழியே
திங்களை யனைய வதனம் வாழியே
திருவா யோடிரு கண்களும் வாழியே,
தங்கெழிற் சிறிய கலிய மாமுனி
தனது புந்தியுஞ் சீர்த்தியும் வாழியே.

சித்திரைக்கா டசுவனியிற் செனித்தபிரான் வாழியே
திகழ்வான மாமலைவாழ் சீயர்பிரான் வாழியே
எத்திசையும் புகழ்பரவு மேற்றமுளான் வாழியே
இருபத்தைந் தாம்பட்டத் தெம்பெருமான் வாழியே.
தத்துவநூல் பலவாய்ந்த தவமுனிவன் வாழியே
சதுர்மறையுந் தமிழ்மறையுந் தங்குளத்தான் வாழியே
சித்தியொடு முத்திதரு தெய்வமன்னன் வாழியே
சிறுகலிய மாமுனிவன் தினம்வாழி வாழியே.

ஆழ்வார்கள் வாழவூர் வாரியர்கள் தாம்வாழ
வாழ்வா ரவர்தம் மறைவாழ—பேழ்வாகைச்
சின்னம் படைத்த சிறுகலிய மாமுனியே
இன்னமொரு நூற்றாண் டிரு.

திருநாள் பாட்டு.

உபயமாமறை வேதியர் யாவரு
　　மொருங்கு களித்திடு நாள்
உலகில் வாழ்தரு சேதனர் யாவரு
　　முய்ந்து மகிழ்ந்திடு நாள்
தபர்கள் நந்தவ முற்றுறு மினியெனச்
　　சாற்றிக் களித்திடு நாள்
சதுர மாமறை தமிழின் மாமறை
　　தரணி யோங்கிடு நாள்
அபயம் யாமெனப் பரமத வாதிய
　　ரடங்கிப் பணிந்திடு நாள்
அகில மீதினில் வைணவ மோகனி
　　யலர்ந்து விளங்கிடு நாள்
இபமோ ரெட்டி லுள் தலைசிறு
　　கலியன்வந் திப்ப ருதித்திடு நாள்
இணையில் சித்திரை யாமதி
　　யசுவனி யென்னுந் திருநாளே.